# உதயன்

விலை ரூபா 20

பக்கங்கள் 28

34c - 27c
பரவலான இடி மழை

சுடர் 31 | கதிர் 168 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 29, வியாழக்கிழமை 12.05.2016


**தூக்கிலிடப்பட்டார் ஜமாத் கட்சித் தலைவர்**

போர்க்குற்றம் புரிந்த குற்றச்சாட்டில் பங்களாதேஷ் உச்சநீதிமன்றம் தீர்ப்பு

பக்.14 - 15

# மனித உரிமை விவகாரத்தை கையாள அமைச்சர்கள் குழு

## நியமிக்க ஒப்புதல் வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, மே 12
மனித உரிமைகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொள்ளவும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கான (2017 - 2021) தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டமொன்றை வரைவதற்காகவும், அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
இதற்கான யோசனையை வெளிவிவகார அமைச்சர் பக். 24

"நல்லிணக்க நடைமுறையை முழுமையாக்கும் மனித உரிமை கரிசனைகளைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்வதற்கும் சுயேச்சை உடன்படிக்கைக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பலப்படுத்துவதற்கும் இவற்றின் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவைப்படும் நிலைமையை உருவாக்குவதற்குமான நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது."

## மீன் பிடித்தவர் குளத்தில் மூழ்கிச் சாவு



வவுனியா, மே 12
வாகன ரியூப்பில் காற்று நிரப்பிக் குளத்தில் மீன் பிடித்தவர் ரியூப் காற்றுப் போனதால் நீரில் மூழ்கிக் காணாமற்போன நிலையில் பக். 23

## பல்கலைக்கழக மாணவருக்கு மடிக் கணினி

கொழும்பு, மே 12
2016 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட யோசனைகளுக்கு அமைவாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன் அடிப்படையில் மடிக் கணினிகளை வழங்குவதற்கு உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.
இதன் பிரகாரம் 3 வருடங்க பக். 23

# மகிந்தவின் உயிருக்கு ஆபத்தாம் இராஜதந்திரிகளிடம் முறைப்பாடு



கொழும்பு, மே 12
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டது தொடர்பில் கூட்டு எதிரணியினர் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்களிடம் முறையீடு செய்துள்ளனர்.
முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டதைத் பக். 23

## சுழற்சிமுறை ஆசனம் ரெலோவுக்கு

யாழ்ப்பாணம், மே 12
வடக்கு மாகாண சபையில், சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமன ஆசனம் இந்த ஆண்டு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவுக்கு பக். 23

# கல்வியியற் கல்லூரி அனுமதி 4 யாழ். மாணவருக்கு மறுப்பு

## வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெற்றோரின் பதிவு இன்மையால்

யாழ்ப்பாணம், மே 12
வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெற்றோரின் பெயர்ப் பதிவு இல்லாமையினால், தேசிய கல்வியியற் கல்லூரிக்கான அனுமதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.
தேசிய கல்வியியற் கல்லூரியில் நடப்பாண்டுக்கான அனுமதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பாடநெறிகள் பயில்வதற்கு நான்கு மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்கள் கல்லூரிக்குத் பக். 24

## முச்சந்தி முரளி



தனக்குத் தனக்கு எண்டால் சுளகு படக்குப் படக்கு எண்டு அடிக்கும் பாருங்கோ....

# ரயிலில் மோதுண்டு நேற்றும் மூவர் சாவு

## 5 நாள்களில் 8 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 12
வெள்ளவத்தை மற்றும் இரத்மலானையில் நேற்று இடம்பெற்ற இரு ரயில் விபத்துகளில் மூவர் உயிரிழந்துள்ளனர். வெள்ளவத்தையில் ரயிலில் இருந்து இறங்கி ரயில் பாதையைக் கடக்க முயன்ற 24 வயது ஆணும், 25 வயதுப் பெண்ணுமே உயிரிழந்துள்ளனர்.
கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிப் பக். 23

# பள்ளிக்குடாவில் கடற்படைக்கு இன்று காணிகள் அளவிடும் பணி

## எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட அழைப்பு

கிளிநொச்சி, மே 12
படையினருக்குச் சுவீகரிக்கும் நோக்கில் கிளிநொச்சியில் இன்றும் பொதுமக்களின் காணிகள் அளவீடுசெய்யப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.
இதனைத் தடுத்து நிறுத்த அனைவரும் ஒன்றுபடவேண்டும் எனக் குறித்த காணிகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி - பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடாப் பகுதியில் தற்போது கடற்படையினரின் முகாம் அமைந்திருக்கும் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியே இவ்வாறு அளவீடு செய்யப்படவுள்ளது.
பொதுமக்களுக்குச் பக். 23

## தகவலறியும் சட்டவரைவு; எம்.பிக்களுக்கு விளக்கம்

கொழும்பு, மே 12
தகவல் அறியும் சட்டவரைவு சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர் பக். 23

# புங்குடுதீவு மாணவி படுகொலை; சந்தேக நபர்களுக்கு 3மாத மறியல்

## பிணைக்கான சமர்ப்பணங்களை நிராகரித்தார் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி

யாழ்ப்பாணம், மே 12
புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், முதலில் கைது செய்யப்பட்ட 9 சந்தேக நபர்களுக்கும் 3 மாதங்கள் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
ஒரு வருடத்துக்கு அவர்களது விளக்கமறியலை நீடிக்க மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக 3 மாதங்கள் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

(விரிவு 2 ஆம் பக்கத்தில்)


metecno The Specialist
கூரைத் தகடுகள் | கேட் தகடுகள் | சென்விச் பெனல் | வளைந்த தகடுகள் | ஓடு வடிவிலான தகடுகள் | பேர்லிங்க்ஸ்
METROOF Total Roofing Solutions
மெட்டெக்னோ லங்கா பிரைவட் லிமிடட்
இல: 734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 5 672 672
077 7 842 544
www.metecnolanka.com
Sri Lanka Germany Italy Spain Portugal Bulgaria METECNO LANKA (PVT) LTD Mexico Chile Columbia India Thailand Vietnam


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புங்குடுதீவு மாணவி படுகொலை சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

## பிணைக்கான சமர்ப்பணங்களை நிராகரித்தார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி

யாழ்ப்பாணம், மே 5

புங்குடுதீவு மாணவி கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், முதலில் கைது செய்யப்பட்ட 9 சந்தேக நபர்களுக்கும் 3 மாதங்கள் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. ஒருவருடத்துக்கு அவர்களது விளக்கமறியலை நீடிக்க மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக 3 மாதங்கள் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் விளக்கமறியலை மேலும் நீடிப்பதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனு மீதான விசாரணை நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த விசாரணையின் பின்னரே மறியல் நீடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை மட்டுமன்றி முழு நாட்டையும் பரபரப்படையச் செய்திருந்த புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட வழக்குத் தொடர்பான விசேட மனுவை சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி ஜனாப் சக்கி இஸ்மாயில் மன்றில் கடந்த வாரம் தாக்கல் செய்திருந்தார். விளக்கமறியலில் உள்ளவர்களை ஒரு வருடத்துக்கு மேல் தடுத்து வைக்க வேண்டும் என்றால் மேல்நீதிமன்றின் அனுமதி வேண்டும். அதன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மாணவி கடந்த வருடம் மே 13 ஆம் திகதி காணாமல் போய் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சின்னையா என அழைக்கப்படும் பூபாலசிங்கம் இந்திரகுமார், ரவி என அழைக்கப்படும் பூபாலசிங்கம் ஜெயக்குமார், செந்தில் என அழைக்கப்படும் பூபாலசிங்கம் தவக்குமார், சசி என அழைக்கப்படும் மகாலிங்கம் சசீந்திரன், சந்திரா என அழைக்கப்படும் தில்லைநாதன் சந்திரகாந்தன், சிவதேவன் துஷாந்தன், நிசாந்தன் என அழைக்கப்படும் பரநிருபசிங்கம் குகநாதன், கரந்தன் என அழைக்கப்படும் ஜயதரன் கோகிலன், ஒன்பதாவது சந்தேக நபரான சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய 9 பேரும் முதலில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களின் விளக்கமறியல் காலம் ஒரு வருடத்தை அண்மித்துள்ளது.

இந்த நிலையில் அவர்களின் விளக்கமறியலை நீடிப்பதற்காகப் பிணைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இந்த மனு சட்டமா அதிபரால் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது என்று சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி ஜனாப் சக்கி இஸ்மாயில் மன்றில் தெரிவித்தார். குறித்த 9 சந்தேக நபர்களும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இந்த சந்தேக நபர்களின் விளக்கமறியல் காலத்தை ஒரு வருடத்துக்கு நீடிக்க வேண்டும் என்றும் அதன் முதற்கட்டமாக உத்தரவிட வேண்டும் என்றும் அரச சட்டவாதி தனது விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டார்.

தவிர இந்தச் சம்பவத்தால் மக்கள் கொந்தளித்து தமது அதிருப்தியை வெளியிட்டனர். அதன் ஒரு கட்டத்தில் நீதிமன்றச் சொத்துகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. அசாதாரண சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது.

குறித்த சந்தேக நபர்கள் மீதான விசாரணை இன்னும் முடிவடையவில்லை. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அவர்களைப் பிணையில் விடுவித்தால் வழக்கின் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்க வாய்ப்பு உள்ளது. அநாவசிய தலையீடுகள் ஏற்படலாம். அவர்களைப் பிணையில் விடுவித்தால் அவர்கள் எதிர்காலத்தில் விசாரணைக்கு ஒத்துழைக்க மாட்டார்கள். அவர்கள் பின்னரும் இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட வாய்ப்பு ஏற்படலாம். தடைகள் இன்றி விசாரணையைத் தொடர்வதற்கு அவர்கள் மறியலில் வைக்கப்பட வேண்டும் என்றும் மறியலில் வைக்க வேண்டிய தேவைப்பாட்டை அரச சட்டவாதி மன்றில் எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் 4 ஆம் 7 ஆம் 9 ஆம் சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சரத் வெல்கம குறித்த 3 பேரையும் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று சமர்ப்பணம் செய்தார். அதில் குறித்த 3 பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது குடும்பத்தினர் வறுமையை எதிர்கொண்டுள்ளனர். அவர்கள் சார்பில் யாழ்ப்பாணத்திலுள்ள சட்டத்தரணிகள் எவரும் நீதிமன்றில் முன்னிலையாகிறார்களில்லை. குறித்த 3 பேரும் கொழும்பில் வைத்தே கைது செய்யப்பட்டனர். சுவிஸ் குமார் விடுமுறையைக் கழிக்கவே இலங்கை வந்திருந்தார். குறித்த 3 பேரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வழக்கில் தொடர்புபடவில்லை. வித்தியாவுக்கு அநீதி இழைக்கப்பட்ட நாளில் அவர்கள் கொழும்பில் நின்றுள்ளனர். அதற்கான சிசிரிவி காணொலிகள், வங்கி அறிக்கைகள் உள்ளன. எனவே அவர்களைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று கோரினார். தவிர விசாரணை முன்னெடுக்கப்படுகிறது என்றால் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதனைத் துரிதமாக முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரினார்.

அதன் பின்னர் சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருக்காத சந்தேக நபர்களிடம், "நீங்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம் என்று நீதிபதி கூறியதோடு அதனைப் பதிவு செய்யுமாறும் பணித்தார். அதன்படி 6 சந்தேக நபர்களும் தத்தமது நிலைப்பாட்டை மன்றில் எடுத்துக் கூறினர்.

அதில் முதலாவது சந்தேகநபர், தான் குற்றம் புரியவில்லை என்று அழுதவாறு கூறினார். 2 ஆம் சந்தேக நபர், தான் குற்றம் புரியவில்லை. ஆனால் தான்தான் குற்றம் புரிந்தேன் என்று பொலிஸிடம் ஏற்றுக்கொள்ளுமாறு ஏனைய சந்தேக நபர்களான சந்திரகாசனும் துசாந்தனும் தாக்கினர் என்று தெரிவித்தார். 3 ஆவது சந்தேக நபர், தான் குற்றம் புரியவில்லை. பொலிஸார் தம்மைக் கட்டித் தூக்கி கடுமையாகத் தாக்கினர். பின்னர் கொழும்புக்குக் கொண்டு சென்றும் தாக்கினர். குற்றம் புரிந்ததை ஒத்துக்கொள் என்றுகூறி பொலிஸார் தாக்கினர் என்றார்.

5 ஆது சந்தேகநபர், வழக்குக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. பொலிஸார் ஊர்காவற்றுறைப் பொலிஸில் வைத்துத் தம்மைக் கட்டிவைத்துத் தாக்கினர். கொடுமை செய்ய வேண்டாம் என்று கூறினேன். குற்றத்தை ஏற்றுக்கொள் என்றுகூறித் தாக்கினர். தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னிடம் வாக்கு மூலம் எடுத்து அதனைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தார். நான் கூறாமலேயே நான் குற்றத்தை ஏற்றுக்கொண்டேன் என்று அவர் பொலிஸ் அதிகாரிகளுக்குக் கூறினார் என்று அவர் தெரிவித்தார்.

6 ஆவது சந்கேநபர் தெரிவிக்கையில், என்னை 13 ஆம் திகதி கைது செய்ததாகக் கூறுகின்றனர். ஆனால் என்னை 17 ஆம் திகதியே கைது செய்தனர். அடித்துச் சித்திரவதை செய்தனர். நீதான் செய்தனி. உனக்குத்தான் வித்தியா செருப்பால் அடித்தார் என்று கூறினர். நான் அதனை மறுத்தேன் என்றார்.

8 ஆவது சந்தேக நபர் தெரிவிக்கையில், இதுவரை என்னிடம் பொலிஸார் வாக்குமூலம் கேட்கவேயில்லை. நான் சம்பவத்தில் தொடர்புபடவில்லை. 4,7,9 ஆம் சந்தேக நபர்களுடன் நான் கொழும்பில் நின்றிருந்தேன். அதற்கான போதிய ஆதாரங்கள் குற்றப் புலனாய்வினரிடம் உள்ளன. வித்தியாவின் இறுதிக் கிரியை முடித்து கொழும்புக்கு வாகனத்தில் புறப்பட்டபோதே பொலிஸார் திருப்பி அழைத்துக் கைது செய்தனர். சித்திரவதை செய்தனர் என்று தெரிவித்தார்.

அதன்பின்னர் நீதிபதி இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்தார். அதில், அரச சட்டவாதியின் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பிணையில் விடுவிக்கக் கோரிய சமர்ப்பணங்கள் நிராகரிக்கப்படுகின்றது என்று தெரிவித்தார். பொலிஸார் விசாரணையைத் துரிதப்படுத்த வேண்டும் என்றும் கூறிய நீதிபதி, குறித்த சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க முடியாது என்றுகூறி அவர்களுக்கு 3 மாதங்கள் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார். அதுபற்றி ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு அறிவிக்குமாறும் நீதிபதி பணித்தார். அதையடுத்து குறித்த சந்தேகநபர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றில் முற்படுத்துமாறு சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்தார். அதுவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழமையான விசாரணைகள் தொடரும் என்றும் தெரிவித்தார்.

அதுட்டுமன்றி சந்தேகநபர்கள் நீதிமன்றுக்கு வெளியே தேவையில்லாது கருத்துத் தெரிவிப்பதைக் குறைக்குமாறும் சந்தேக நபர்களுக்கு அறிவுறுத்தினார். சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதனால் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் நீதிமன்றுக்கு வெளியே பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். (ந-4)



# வல்வை பொலிஸாரால் 20 வயது மாணவன் கைது

## பெண்ணுடன் அலைபேசியில் முறைதவறிப் பேசிய குற்றச்சாட்டில்

வல்வெட்டித்துறை, மே 12

மாணவனேயானாலும் செல்பேசியைத் தவறாகப் பயன்படுத்தினால் குற்றச் செயல்தான். சட்டம் எல்லோருக்கும் சமமானதே என்று தெரிவித்தார் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார். நடுத்தர வயதுப் பெண்ணுடன் தொலைபேசியில் தகாத முறையில் உரையாடினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டபோது நீதிவான் இதனைத் தெரிவித்தார்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த 31 வயதுப் பெண் ஒருவர் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து பாடசாலையில் உயர்தரம் கற்கும் மாணவன் ஒருவனை வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்தனர். அலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தும் நபர் ஒருவர் பாலியல் ரீதியில் தகாத முறையில் தன்னுடன் உரையாடுகிறார், மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார் என்று அந்தப் பெண் பொலிஸாரிடம் முறையிட்டிருந்தார். அவர் கொடுத்த அலைபேசி இலக்கத்தை நீதிமன்றில் முற்படுத்திய பொலிஸார், தொலைபேசிச் சேவை நிறுவனத்தின் ஊடாக அந்த இலக்கத்துக்குரிய நபரை அடையாளம் கண்பதற்கான அனுமதியை நீதிவானிடமிருந்து பெற்றுக்கொண்டனர். பெறப்பட்ட விவரங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 20 வயதான மாணவனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். குறித்த முறைப்பாடு செய்த பெண்ணுடன் அவர் முறைதவறிப் பேசினார் என்பதற்கான ஆதாரங்களை தாம் பெற்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து எதிர்வரும் 18ஆம் திகதி வரை மாணவனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-26, 109)

## கசிப்பு விற்ற இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 13

துன்னாலை கிழக்கில் வீடு ஒன்றில் வைத்துக் கசிப்பு விற்ற குற்றச்சாட்டில் 28 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து 1 போத்தல் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் அவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர் பட்டப்படிப்பு பீடம் நிறுவ அரசு நிதியுதவி வழங்கத் தயார்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, மே 12

நீண்டகாலத் தேவையாகவுள்ள தாதியர் பட்டப்படிப்பு பீடமொன்றை நிறுவுவதற்கு உடனடி நிதியுதவிகளை வழங்க அரசு தயாராக உள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரச தாதி அலுவலர்கள் சங்கத்தின் உறுப்பினர்களை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய தாதியர் பட்டப்படிப்பு பீடமொன்றை நிறுவுதல், பொதுச் சுகாதாரத் துறையில் காணப்படும் தாதியர் வெற்றிடங்கள் மற்றும் அந்த வெற்றிடங்களுக்கு தாதியர்களை இணைத்துக் கொள்ளல் தொடர்பில் இங்கு கலந்துரையாடப் பட்டது.

கொழும்புப் பல்கலைக் கழகத்துடன் இணைந்ததாக தாதியர் பட்டப்படிப்பு பீடமொன்றை உருவாக்குதல் தொடர்பாக ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக 2016 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட் டத்தில் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, சுகாதார சேவையை வலுவானதாக வும், தரமானதாகவும் இலங்கையில் முன்கொண்டு செல்வதற்கு என்னால் முடியுமான எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றேன்.

இலங்கையில் 40 ஆயிரம் தாதியர்களுக்கான தேவை இருக்கின்றது. ஆனால் தற்போது 31 ஆயிரம் தாதிமார் மட்டுமே பணி புரிகின்றனர். நாட்டின் தேவைக்கேற்ப திறமையான தாதிமாரை பணியில் அமர்த்துவது பிரச்சனையாக உள்ளது. அதேவேளை, தேசிய ரீதியில் காணப்படும் தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான வேலைத் திட்டம் அவசியம்.- என்றார். (ற-5)

**உதவியாளர் தேவை**

யாழ். நகரில் வயதான குடும்பத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

021 221 7074

**வாடகைக்கு உண்டு**

மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் பகுதியிலுள்ள மாடி வீட்டின் மேல் பகுதி வாடகைக்குண்டு.

077 444 0300

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2765 திகதி 11.05.2016
02 38 60 69 H 61 ரூ17,995,975/-

Galaxy Star
வெற்றி வாரம் 057 திகதி 11.05.2016
11 13 22 25 59
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 4,027,280/-

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
### மானிப்பாய் கிராம உபஅலுவலகம் ஆனைக்கோட்டை
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம் : 09
ஆதன இலக்கம்: 174(புதிய இலக்கம்)
பிப்பிலிறோட்
கிராமசேவையாளர் பிரிவு: J/134 நவாலி வடக்கு

வட்டாரம் 09 பிப்பிலி வீதி ஆதன இலக்கம் 174(புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குபகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை " தந்தனையும் மயிலைப்புலமும் " என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 12 3/8 கொண்ட இவ்வாதனமானது இல.134/2C அம்மன் தகவல் தொடர்பாடல் நிலையம், ஆலடிவீதி, தோணிக்கல் வவுனியாவைச் சேர்ந்த குமாரசாமி ஜீவரட்ணம் அவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த சசிகலா சுந்தரமூர்த்திக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.ஜெயரட்ணம் ஆரூரன் அவர்களால் எழுதப்பட்ட 105 ஆம் இலக்க 2014.08.21 ஆம் திகதிய நன்கொடை உறுதிப்படி தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.கே.பரமேஸ்வரன் அவர்களால் வரையப்பட்ட 2492/2016 ஆம் இலக்க 2016.04.27 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " தந்தனையும் மயிலைப்புலமும் " நிலப்பரப்பு 02 குளி 12 3/8 கொண்ட ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சசிகலா சுந்தரமூர்த்தி என்பவருடைய பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுகப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

**மைதிலி நகைமாடம்**
**அதிர்ஷ்ட சாலிகளின் விவரம்**

அக்ஷய திருதியை முன்னிட்டு கடந்த 15.04.2016 தொடக்கம் 09.05.2016 வரை எம்மிடம் நகைகளைக் கொள்முதல் செய்த வாடிக்கையாளர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பரிசு பெறும் அதிர்ஷ்ட சாலிகளின் விவரம்.

**தங்க நாணயம் பெறுவோர்**

1ஆவது - S.தயாளன் — அல்வாய் தெற்கு, வதிரி
2ஆவது - P. பிரியா — பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி
3ஆவது - M.வாகித்தியா — வரியப்புலம், சுன்னாகம்.

**ஆறுதல் பரிசுகள் பெறுவோர்**

*J.நகுலேஸ்வரி — 21, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* உமாசுதன் அனுசியா — சுருவில் வீதி, ஊர்காவற்றுறை
*Mrs.P. கேதீஸ்வரன் — சட்டநாதர் வீதி, திருநெல்வேலி
*Mrs.K.சறோஜினிதேவி — சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்
*இரத்தினசிங்கம் இராஜேஸ்வரி — பூலசிட்டி, அச்செழு, நீர்வேலி
*K.பாலகுமார் — கொட்டப்புலம், காரைநகர்
* த.விமலரூபன் — கைதடி
*N.அனுசியா — உரும்பிராய்
* டிலானி நிஸ்யந்தன் — 39,சென்பற்றிக்ஸ்வீதி, யாழ்ப்பாணம்.
* இ.ரம்யா — முதலாம்கட்டை கல்வயல், சாவகச்சேரி

மேற்குறிப்பிட்ட அதிர்ஷ்டசாலிகள் எதிர்வரும் திங்கட்கிழமை (16.05.2016) முற்பகல் 10.00 மணிமுதல் 12.00 மணி வரை எமது ஸ்தாபனத்தில் பரிசில்களை பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

குறிப்பு : மேற்படி அதிர்ஷ்ட சாலிகள் பரிசில் பெற வரும் போது தங்களது தேசிய அடையாள அட்டையினையும் நீங்கள் கொள்வனவு செய்த நகைக்கான பற்றுச் சீட்டினையும் தவறாது கொண்டு வரவும்.

மைதிலி நகைமாடம்
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். உரிமையாளர்.

## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies

### Admission for Postgraduate Research Programme
### Master of Philosophy (M.Phil) & Doctor of Philosophy (Ph.D.) - 2016

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil.) and Doctor of Philosophy (Ph.D.) research programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna in the disciplines listed below.

Agricultural Biology, Agricultural Chemistry, Agricultural Economics, Agricultural Engineering, Animal Science, Agronomy, Biochemistry, Botany, Chemistry, Christian Civilization, Computer Science, Economics, English Literature, Fine Arts (Art History & Aesthetic), Fisheries Science, Geography, Hindu Civilization, History, Linguistics, Management [Human Resource Management, Accounting Management, Financial Management, Marketing Management], Mathematics & Statistics, Philosophy, Physics, Political Science, Psychology, Sanskrit, Sociology, Tamil and Zoology.

**Medium** Tamil / English
**Duration** Full Time (M.Phil. – 02 years : Ph.D. – 03 years)
Part Time (M.Phil. – 03 years : Ph.D. – 04 years)

**Total Fees**

| | Local Student | SAARC Countries | Other Counties |
|---|---|---|---|
| M.Phil. (Social Science Field) | 128,000.00 | US $ 2000 | US $ 3000 |
| M.Phil. (Applied Science Field) | 188,000.00 | US $ 3000 | US $ 4000 |
| **NOTE**: *Extension Fee for additional year (s) : 25,000.00 per year US $ 400 (for foreign students)* | | | |
| Ph.D. (Social Science Field) | 183,000.00 | US $ 3000 | US $ 4000 |
| Ph.D. (Applied Science Field) | 243,000.00 | US $ 4000 | US $ 5000 |
| **NOTE**: *Extension Fee for additional year (s) : 30,000.00 per year US $ 500 (for foreign students)* | | | |

**Closing Date for Receiving Application** : 30/06/2016

**Applications**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P. : 021 222 3608) either in person or post, on a payment of Rs. 1500/- per application form on submission of receipt in support of the payment to the University Account number **162-1-001-6-0000880** at the People's Bank.

Those who wish to obtain application forms by post are requested to send a money order for Rs. 1500/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 22.5 x 10 c.m. (9" x 4") in size.

Application forms and other details will also be available in the Faculty web site www.jfn.ac.lk/grad. Those who wish to send the downloaded application form should attach a money order for Rs. 1500/- drawn in favour of the **Bursar, University of Jaffna or** the receipt in support of the payment to the University Account number **162-1-001-6-0000880** at the People's Bank.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely by registered post or by hand **on or before the closing date of application**. The research programme applied for should be indicated as ***"Application for M.Phil. / Ph.D.- 2016"*** on the top left hand corner of the envelop.

**Incomplete, Illegible or late applications will not be considered.**

**Note :**

**Applicant will be selected on the basis of**
**(1) availability of supervisor in the particular topic of research or**
**(2) availability of admission in the particular field of research or Laboratory facilities**

**Registrar**
**10/05/2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்
## பல்கலைக்கழக அனுமதி – 2015 / 2016
## ஆற்றுகை / உளச்சார்புப் பரீட்சை

**நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்**

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 30.05.2016 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2015 ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம் - கர்நாடகம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக் கலையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரணதர சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும். (இலங்கை ப.மா.ஆணைக்குழு மாணவர் கைநூல் பக்கம் - 33 பிரிவு 09)

**ஆற்றுகை / உளச்சார்புப் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, / உளச்சார்புப் பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

சங்கீதம், நடனம் - ஆற்றுகைப் பரீட்சை

சித்திரமும் வடிவமைப்பும் - ஆற்றுகை மற்றும் உளச்சார்புப் பரீட்சைகள்

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A-4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து பிரதிசெய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா. 300 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும்** அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப் படும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 30.05.2016 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

**பதிவாளர்** **12.05.2016**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

University of Jaffna, Srilanka
Ramanathan Academy of Fine Arts
University admission – 2015 / 2016
**Bachelor of Fine Arts - Music / Dance / Art & Design**
Application for Performance Aptitude Test

1. Name in Full (Tamil and English)

   The Name denoted by initial

   National Identy Card No

   Permanent address (In English)

   Telephone No email address

   Results of G.C.E. (A/L) Examination 2015

   Index No Z score General Test marks

| Subject | Grade | Medium | District |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

2. Name of parents/Guardian

   Address (In English)

3. Course of study applied

   (Put ✔ Mark)

| Music | | Dance | | Art & Design | |
|---|---|---|---|---|---|

**4. Documents to be submitted**

1. Receipt of paid amount
2. Certified photo copy of the G.C.E (A/L) sheet (including Z score and District)
3. Affidavit in support of any change in names Appearing in different documents if any

I certify that the above particulars submitted by me are true and accurate.

.................. ..........................................
Date Signature of applicant

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## பல்கலைக்கழக அனுமதி 2015 / 2016
## உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)
## மொழிபெயர்ப்புக் கற்கைநெறி
## (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து **01.06. 2016** ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்**

மொழிபெயர்ப்புக் கற்கைநெறியைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2015 / 2016 கைநூல் பக்கம் 79, பகுதி 2.2.8.28 இற்கு அமைய தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

**உளச்சார்புப் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தமிழ் மற்றும் ஆங்கில மொழித் திறமை அடிப்படையிலான உளச்சார்புப் பரீட்சைக்கு **3 யூலை 2016** அன்று தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை A-4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள் ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 300 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மக்கள் வங்கிக் கிளை, கணக்கு இலக்கம் 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) 2015 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும்.** பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **01.06.2016** ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப் படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பிரவேச அனுமதித் தகையைமைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்ப தாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

**பதிவாளர்** **12.05.2016**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

University of Jaffna, Srilanka
Faculty of Arts
University admission – 2015 / 2016
**Tamil and English**
**Bachelor of Arts (Special) in Translation Studies**
Application for Aptitude Test

1. Name in Full (Tamil and English)
2. The Name denoted by initial
3. National Identy Card No
4. Permanent address (In English)
5. District
6. Telephone No email address
7. Results of G.C.E. (A/L) Examination 2015

   Index No Z score General Test marks

| Subject | Grade | Medium | District |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

8. Name of parents/Guardian

   Address (In English)

9. Documents to be submitted
   1. Receipt of paid amount
   2. Certified photo copy of the G.C.E (A/L) sheet (including Z score and District)
   3. Affidavit in support of any change in names Appearing in different documents if any

I certify that the above particulars submitted by me are true and accurate.

.................. ..........................................
Date Signature of applicant

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCY

Applications are invited by me up to 30.06.2016 from suitably qualified persons for the following post.

1. **BURSAR**

**QUALIFICATIONS:**

1. (a). Should possess a Membership of the Institute of Chartered Accountants of Sri Lanka or its equivalent.

**AND**

(b). Should possess at least six (6) years of experience in Accounting and/or Auditing in an executive capacity after acquiring the qualifications at 1(a) above.

**OR**

2. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University System who possesses three (03) years of satisfactory service in that post and confirmed in the post with qualification at 1(a) above. At least one (01) year out of the above. (03) years of experience should be after acquiring the qualification at 1(a) above.

**OR**

3. A holder of the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University system who is confirmed in that post and possess ten (10) years of experience in accounting and/or auditing in an executive capacity and at least eight (08) years of satisfactory service in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University system with qualification as at 1(a) above. Three (03) years of such experience should be after acquiring the qualification at 1(a) above.

**OR**

4. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University System who is confirmed in that post with Master's Degree in Accountancy/Finance/ Management * from a recognized University/HEI and possesses the intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ICASL) or its equivalent with not less than twelve (12) years of experience in accounting and/or auditing in an executive capacity after successfully completion of the above Intermediate qualification. At least ten (10) years of such experience should be in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor or above in the University system.

**OR**

5. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University System who possesses three (03) years of satisfactory service in that post and confirmed in the post with a Degree from a recognized University/HEI and the Intermediate qualification of the institute of Charted Accountants of Sri Lanka (ICASL) or its equivalent/ Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor, with not less than fourteen (14) years of experience in Accounting and/or Auditing in an executive capacity after obtaining the above Intermediate Qualification/HNDA. At least five (05) years of such experience should be at the level of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor and/or Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the Grade of U-EX2(II) in the University system.

**OR**

6. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University system who possesses a Degree from a recognized University/HEI or Intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ICASL) or its equivalent or Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor, with not less than eighteen (18) years of experience in Accounting or Auditing in the University system out of which at least three (03) years should be in the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University system and confirmed in that post.

**NOTE**: 'Accounting and/or Auditing' experience means, experience gained in an executive capacity in

Accounting and/or Auditing in a State or Reputed Private Sector Organization.

*Term 'Management' means a Degree in Management/ Public Administration/Business Administration with major component in Accounting & Finance.

**Salary Scale**: U-EX 3(II) Rs.47,845 -7X1,050;11X1,310-69,605/- p.m.

**Selection :** By Structured Interview

**Sabbatical Leave entitlement**: The holder of the above post will be eligible for Sabbatical Leave as per the regulation of the University Grants Commission.

**AGE:** Not more than 45 years. Age limit is not be applicable for applicants in the Government Departments, State Corporations and Statutory Bodies.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
   Special allowance -20% of the basic salary
   Additional monthly allowance – 20% of the basic salary
   Interim Allowance- Rs. 10,000.00
   Cost of living allowance of Rs. 7,800.00 p.m.
   35% Research Allowance based on research activity.
   Limited monthly fuel allowance.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on specified forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non – Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Rs.10/- Stamped envelope of 23X10 c.m in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please annexed copies of relevant documents)**. The envelope containing the dully filled application form must bear" **the name of the post applied for**" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar **on or before 30.06.2016.**

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna,
11.05.2016.

(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுரங்கப் பாதைகளை அமைக்க அரசு நடவடிக்கை

கொழும்பு,மே 12
அம்பிட்டியிலிருந்து தென்னக்கும்புர மற்றும் அம்பிட்டியிலிருந்து போகம்பரை வரையிலுமான இரண்டு சுரங்கப் பாதைகளை நிர்மாணிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
கண்டி நகரத்தில் நிலவும் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.
இந்த இரண்டு சுரங்கப் பாதைகளினதும் நிர்மாணப்பணிகள்விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன.
அத்துடன் கண்டிக்கும் பேராதனைக்கும் இடையிலான வாகனநெரிசலைக் குறைப்பதற்கும், கண்டிக்கும் பேராதனைக்குமிடையிலான ரயில் பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
(ற-ஐ-22)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம்(ரவி)**

தோற்றம்
02.07. 1969

மறைவு
12.04.2016

கடந்த 12.04.2016 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (12.05.2016) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

466, கரியாலை
நாகபடுவான்,
முழங்காவில்.

(70338)
(12.17.30)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**அருட்சகோதரி மேரிதெக்ளா கிறிஸோஸ்ரொம்**
திருக்குடும்பக் கன்னியர் சபை



மண்ணில்
08 . 03 . 1937

விண்ணில்
12 . 04 . 2016

எமதருமை அருட்சகோதரி மேரி தெக்ளா கிறிஸோஸ்ரொம் அவர்கள் இறை இயேசுவுக்குள் நித்திரை அடைந்த செய்தி கேட்டு நேரிடையாகவும் ஊடக வாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்த அருட்தந்தையர் அருட் சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இறுதியஞ்சலித் திருப் பலியை நிறைவேற்றிய, பங்கு பற்றிய அருட்தந்தையர், அருட்சகோதரிகள் உறவினர், நண்பர்களுக்கும் நோயுற்றிருந்த காலமெல்லாம் சிகிச்சையளித்த போதனாவைத்தியசாலை , திருச்சிலுவைக் கன்னியர்சபை வைத்தியர்கள், அருட்சகோதரிகள், ஊழியர்களுக்கும் நல்லடக்க ஆராதனையில் பங்குகொண்ட அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊர்காவற்றுறை.

சகோதரர் குடும்பங்கள்.

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**திருமதி ராஜராஜேஸ்வரி கோதண்டபாணி**

கடந்த 28.04.2016 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் நாளை (13.05.2016) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்)

காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
021 222 5768

நாதஸ்வர மேதைகள்
V.K.கானமூர்த்தி - குடும்பத்தினர்.
V.K.பஞ்சமூர்த்தி - குடும்பத்தினர்.

## நல்லூர் நாடக திருவிழா- 2015 நூல் வெளியீட்டு விழா நேற்று



யாழ்ப்பாணம், மே 12
யாழ்ப்பாணம் செயற்திறன் அரங்க இயக்கத்தினால் கடந்த ஆண்டுநல்லூர் பாணான் குளம் பஞ்சபூத அரங்கில் 'நல்லூர் நாடகத் திருவிழா' எனும் தொனிப் பொருளில் மேடையேற்றப்பட்ட 20 க்கும் மேற்பட்ட நாடகங்களினுடைய தொகுப்பாக வெளிவரும் நல்லூர் நாடக திருவிழா- 2015 எனும் நாடக நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.
கடந்த வருடம் 12 நாள்கள் மேடையேற்றப் பட்ட 20 க்கும் மேலான நாடகங்களின் எழுத்துருக்கள், பட்டறிவுக் குறிப்புக்கள், விமர்சனங்கள் என்பற்றின் தொகுப்பாக வெளி வந்திருக்கும் இந்த நல்லூர் நாடக திருவிழா - 2015 எனும் நூலை ஈழத்தின் பிரசித்தி பெற்ற நாடக எழுத்தாளரும், நெறியாளருமான தே.தேவானந்த் தொகுத்துள்ளார்.
நாடகமும் அரங்கியலும் பாடநெறியைக் கற்கும் மாணவர்களுக்கான சிறந்த வழி காட்டியாக வெளிவந்துள்ள இந்தநூலை இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் பெற்றுக் கொண்டார். நூலுக்கான சிறப்புரையை நாடக அரங்கக் கல்லூரியின் தலைவரும் ஈழத்துச் சிறுவர் நாடகத்தின் தாய் என வர்ணிக்கப்படுபவருமாகிய குழந்தை ம.சண்முகலிங்கமும், வெளியீட்டுரையை எஸ்.சிவலிங்கராஜாவும், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத்தின் மொழிபெயர்ப் பலகின் இணைப்பாளர் கலாநிதி க. ஸ்ரீகணேசனும், நயப்புரையை தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் து. இளங்குமரன் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவன முகாமையாளர் நா. கமலதாசும் வழங்கியிருந்தனர்.
நிறைவில் செயல் திறன் அரங்க இயக்கத்தினால் நடத்தப்பட்ட 'நாடகத் தயாரிப்பு' பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலை ஆர்வலர்கள், நாடகத்துறை சார்ந்தோர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (து-21)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
**திரு. ஜேக்கப் கியூபேட்** அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி ஜேக்கப் மேரிமாகிறேற்**
அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிகழகம்
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## டிப்பரில் மணல் கடத்தியோர் பொலிஸுக்கு லஞ்சம் வழங்கி தப்ப முயன்றபோது கைது

கள்ள மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒரு குழுவைக் கைது செய்யச் சென்ற பொலிஸாருக்கு ஒரு லட்சம் ரூபா லஞ்சம் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டில் பணத் துடன் 2 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான் பிரதேசத்தில் நேற்று இடம் பெற்றது.
மண்கும்பான் பிரதேசத்தில் திருட்டு மணல் ஏற்றுவதாகக் கிடைத்த தகவலின் பிரகாரம் குறித்த பிரதேசத்துக்குச் சென்ற யாழ்ப்பாணக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சென்ற வேளை, களவாக மணல் ஏற்றிய ஒரு டிப்பர் வண்டியை கைப்பற்றியதோடு குறித்த வாகனச் சாரதியையும் கைது செய்தனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்ட வேளை பொலிஸாரிடமிருந்து தப்பிக்கும் நோக்கில் குறித்த வாகனச் சாரதி பொலிஸாருக்கு ஒரு லட்சம் ரூபா லஞ்சப் பணம் வழங்க முயன்றதாகக் குற்றஞ்சாட்டியுள்ள பொலிஸார் குறித்த பணத்தையும் கைப்பற்றியுள்ளனர்.
இன்றைய தினம் குறித்த நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ள தோடு டிப்பரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படும் என ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (கு-4-101)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
05 . 10 . 1932

மறைவு
20 . 04 . 2010

**கனகசபாபதி சிவசுப்பிரமணியம்**

திதி: சித்திரை மாத பூர்வபக்கஷஷ்டி (12.05.2016)

ஆறாண்டு காலம் ஆறாய் ஓடியதோ !
ஆறுமோ எம் துயரம் ஆறுதல் அளிப்பார் ஆர் ?
அப்பா உங்கள் அறிவுரையை எங்கள் அகத்திருத்தி
என்றும் நிறைவாழ்வு வாழ
அம்மை அப்பன் சேவடியில்
இனிதிருந்து ஆசி தாரும்

ஆஸ்பத்திரி முன்பாக,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவர் திருவிழாவுக்கு 23 லட்சம் ரூபா செலவு

## வடக்கு மாகாண சபை அமர்வில் விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 12 -
வடக்கு மாகாண சபையால் ஜனவரி மாதம் நடத்தப்பட்ட உழவர் திருவிழாவுக்கு 23 லட்சம் ரூபா செலவாகியுள்ளது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
அத்துடன் இந்த நிகழ்வில் பங்கெடுக்க வந்த தமிழகக் கவிஞர் வைரமுத்துவுக்கு எந்தவொரு பிரயாண - தங்குமிடச் செலவும் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.
வடக்கு மாகாண சபையின் 52 ஆவது அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா எழுத்து மூல வினா எழுப்பியிருந்தார்.
அதில் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் நடைபெற்ற உழவர் பெருவிழாவைக் கொண்டாடுவதற்கு அமைச்சால் செலவு செய்யப்பட்ட நிதி எவ்வளவு? அமைச்சால் செலவு செய்யப்பட்ட நிதி, நிதிக் கூற்று அறிக்கையில் எந்த ஆண்டில் எந்தத் தலைப்பின் கீழ் சபையால் அங்கீகரிக் கப்பட்டது?, விழாவுக்கு வருகை தந்த விருந்தினர் கவிஞர் வைரமுத்துவின் பிரயாணச் செலவு, தங்குமிடச் செலவு மற்றும் ஏனைய செலவினங்கள் என்பவற்றை அறியத் தருமாறு கேட்டிருந்தார்.
இதற்கு அமைச்சர் ஐங்கரநேசன் பதிலளித்தார். கடந்த காலங்களில் விவசாயத் திணைக்களம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் போட்டிகள் நடத்தி பரிசளிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதனையே உழவர் விழாவாக நாம் நடத்தினோம். அதில் 106 பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
பரிசு, சான்றிதழ், கேடயம் என்பனவற்றை வழங்குவதற்கு 16 லட்சத்து 72 ஆயிரத்து 940 ரூபா செலவானது. இது 2015 ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத்திலிருந்து செலவு செய்யப்பட்டது. நிகழ்வுக்காக 7 லட்சத்து 16 ஆயிரத்து 509 ரூபா செலவு செய்யப்பட்டது. இது நடப்பு ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத்திலிருந்து செலவு செய்யப்பட்டது.
கவிஞர் வைரமுத்துவின் பயண - தங்குமிடச் செலவு என்பவை அமைச்சால் மேற்கொள்ளப்படவில்லை. அதனை அவருடைய சொந்தச் செலவிலேயே மேற்கொண்டார். அவருக்கு நினைவுச் சின்னம் வழங்குவதற்காக 12 ஆயிரத்து 500 ரூபாவும், மாலை வாங்குவதற்காக 300 ரூபாவுமாக 12 ஆயிரத்து 800 ரூபா மாத்திரமே, செலவு செய்யப்பட்டது என்று அமைச்சர் ஐங்கரநேசன் சபையில் தெரிவித் தார். (ற-5)

> "இந்த நிகழ்வில் பங்கெடுக்க வந்த தமிழகக் கவிஞர் வைரமுத்துவுக்கு எந்தவொரு பிரயாண - தங்குமிடச் செலவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்."

## ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், மே 12
பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 181 ஆவது ஜெயந்தி விழா மருதனார்மடம் வீதி, உரும்பிராய் சந்தியிலுள்ள இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தில்நாளை மறுதினம் சனிக்கிழமை முழுநாள் நிகழ்வாகச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. அதற்கான சகல ஒழுங்குகளையும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகன் மேற்கொண்டுள்ளார்.
இந்த நிகழ்வை முன்னிட்டு காலை 8.30 மணிக்கு உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலிருந்து கோப்பாய் வீதியூடாக ஊர்வலம் புறப்பட்டு நிலையத்தைச் சென்றடையும். அதையடுத்து காலை 9.30 மணிக்கு ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுத மொழிகளிலிருந்து சில பகுதிகள் வாசிக்கப்படும்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதனும் சிறப்பு விருந்தினர்களாக உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா.சுந்தரம், ஞானவைரவர் கோயிலடி சனசமூக நிலையத் தலைவர் ம.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.
மு.ப.10.15 மணிக்கு தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்கத்தைச் சேர்ந்த மு.சீ.தேவதாஸ் காந்தி ஆரோக்கிய வாழ்வுக்கான இயற்கை மருத்துவமும் யோகப் பயிற்சிகளும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.
அதைத் தொடர்ந்து மு.ப. 11.15 மணிக்கு உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்தி முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும், இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலைய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் 'அருள் பெற விளையாடு' என்னும் நாடக மும் இணுவில் அறநெறி மாணவர்களின் 'மூத்தோர் சொற் கேட்போம்' என்னும் நாடகமும் இடம்பெறும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ற-115)

## இரா. உதயணன் இலக்கிய விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை மற்றும் அயலகப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் இரா. உதயணன் இலக்கிய விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளதாக இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம் தெரிவித்துள்ளது.
இந்த ஆண்டுக்குரிய நாவல், சிறுகதை, சிறுவர் இலக்கியம், தமிழ் வளர்ச்சி இலக்கியம், அயலகப்படைப்பாளிகளின்நூல்கள் எனப் பத்து நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இரா. உதய ணன் இலக்கிய விருதுடன், தலா 10 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட் சம் பணப்பரிசும்வழங்கப்படவுள்ளது.
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், லண்டன் தமிழ் இலக்கியநிறுவகமும்இணைந்து இதனை வழங்கவுள்ளன.
விருதுக்கு அனுப்பப்படும் அனைத்துநூல்களும் 2015 ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2015 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பதிப்பித்திருக்க வேண்டும்.
விண்ணப்பிப்போர் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இரா. உதயணன் இலக்கிய விருது - 2016, இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், இல.9, 2.1, நெல்சன் இடம், கொழும்பு - 06 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிறுவகம் தெரிவித்துள்ளது. (ற-ஐ-ரி)

# வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி; அதுதான் ஈபிடிபிக்கும் வேண்டுமாம்

## அதனது தேசிய மாநாட்டில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 12
இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிறப்பு அதிகாரங்களுடன் கூடிய சுயாட்சியை வென்றெடுப்பதற்காகச் செயற்படப்போவதாக ஈபிடிபி கட்சி தனது இந்த ஆண்டுக்கான அறைகூவலில் தெரிவித்துள்ளது.
கட்சியின் தேசிய எழுச்சி மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நகரில் உள்ள வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் தமது செயற் பாடுகள் தொடர்பான அறைகூவலையும் கட்சி வெளியிட்டது.
கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, மகிந்த ராஜபக்ச அரசில் அமைச்சராக இருந்த போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றகோரிக்கையைத்தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். சாத்திய மான வழிகளின் மூலமாக இணக்க அரசியலூடாக தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க முயற்சிப்பதாக அவர் அடிக்கடி தெரிவித்து வந்தார்.
எனினும் கட்சியின் அறைகூவல் அறிக்கையில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்ற கோரிக்கை எதுவும் முன்வைக்கப்படவில்லை என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.
அதேநேரத்தில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமை கொண்ட ஒரு தேசிய இனமாக அங்கீகரிக் கப்படவேண்டும் என்றும் அந்த அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே விடயத்தைக் கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வந்தபோது அது பொருளற்ற வெற்றுக் கூச்சல் என்று ஈபிடிபி கட்சியும், அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் கருத்துத் தெரிவித்து வந்தனர். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியால் ஒரேயொரு நாடாளுமன்ற ஆசனத்தைத் தான் வென்றெடுக்க முடிந்ததன் பின்னர், வடக்கு - கிழக்கு இணைப்புடன் சுயாட்சி மற்றும் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி போன்ற கோசங்களை கட்சி எழுப்ப ஆரம்பித்துள்ளது.
கட்சியின் அறை கூவல் அறிக்கையில் அரசியல் இலக்கு, பொருளாதார அபிவிருத்தி, மக்களின் காணி நிலம், சிறையில் வாடும் தமிழர்களும் காணாமற் போனவர்களும், கல்வி வளர்ச்சி, கலை கலாசார பண்பாட்டு விழுமியம், சமூக நீதி, ஊடக சுதந்திரம், உரிமைகளை வென்றெடுக்க ஐக்கிய முன்னணி என்ற தலைப்புகளின் கீழ் கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன.
இந்தத் தேசிய மாநாட்டுக்கு கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமை தாங்கினார். மாநாட்டின் ஆரம்பத்தில், தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுத் தூபிக்கு அஞ்சலிசெலுத்தப்பட்டது. பின்னர் மண்டபத்தில் மதத்தலைவர்களின் ஆசியுரைகள் இடம்பெற்றன.
இந்த மாநட்டில், வடமாகாண சபையின் எதிர்க்கட்சிதலைவர் சின்னத்துரை தவராசா, மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்ரர் அலென்ரின் உட்பட மத குருமார்கள், கட்சி உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மத குருமார்களினால், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் பொன்னாடை போர்த்தி மதிப் பளிக்கப்பட்டார். (உ-106)

## தீயில் எரிந்து பனம் வடலிகள் நாசம்

சாவகச்சேரி, மே 12
தென்மராட்சி தெற்கு கேரதீவு அறுகுவெளிப் பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பனை வடலிகள் எரிந்து நாசமாகியுள்ளன.
இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பகல்வேளை நடந்துள்ளது.
இந்தப் பகுதியில் சனக் குடியிருப்புகள் இல்லாததால் பல காணிகளின் உரிமையாளர்களால் பனம் விதைகள் நடப்பட்டு அவை தற்போது வடலிப் பனைகளாக மாறியுள்ளன.
இந்த நிலையில் இனந் தெரியாத விஷமிகள் வைத்த தீ பரவியதில் ஆயிரத்துக்கு மேற் பட்ட வடலிகள் எரிந்து சேதமடைந்துள்ளன என காணி உரிமை[illegible] தெரி[illegible]

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் வாகனம் இனி அரசுடைமையாக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எச்சரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் வாகனங்கள் எதிர்காலத்தில் அரசுடைமையாக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா தெரிவித்தார்.
அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமாக ஏற்றப்பட்டது என்று கூறப்பட்ட மணலை அரசுடைமை ஆக்குமாறு தெரிவித்ததன் பிற்பாடு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவர் மற்றும் மூன்று உழவு இயந்திரங்கள் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன் னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது
இந்த விசாரணைகளின் போது சந்தேக நபர்கள் தாங்களே குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிப்பதாகத் தெரிவித்த நீதிவான், உழவு இயந்திரங்களில் ஏற்றப் பட்ட மணலை அரசுடைமை ஆக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் இனிவரும் காலங் களில் கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வை மேற்கொள்ளும் வாகனங்களும் அரசுடைமையாக் கப்படும் என்றும் எச்சரிக்கை செய்தார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாரின் காணிகளை சுற்றி வேலி அமைக்கிறது கடற்படை

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு காணி உரிமையாளர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 12
முல்லைத்தீவு, வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கடற்படையால் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியாருக்குச் சொந்தமான காணியைச் சுற்றித் தற்போது கம்பி வேலி அடைக்கும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.
32 குடும்பங்களுக்குச் சொந்தமான 312 ஏக்கர் நிலமும், அரச காணியில் 300 ஏக்கர் வரையிலுமாக மொத்தம் 612 ஏக்கர் நிலத்தைச் சுற்றியே தற்போது கடற்படையினர் முட்கம்பிவேலி அமைத்து வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.
கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள குறித்த நிலங்களை விடுமாறு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் தீர்வு கிட்டாத நிலையில் கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் பாதுகாப்பு அமைச்சின் பதில் செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.
குறித்த கலந்துரையாடலுக்கு காணி உரிமையாளர்களும் அழைக்கப்பட்டிருந்த நிலையில் உரிமையாளர்கள் தமது நிலம் தமக்கு வேண்டும் எனவும் அவற்றைப் படையினருக்குக் கையளிக்க முடியாது எனவும் தெரிவித்தனர்.
காணி உரிமையாளர்களுடைய கோரிக்கைக்கு அமைவாகப் பெப்ரவரி மாதம் இறுதிக்குள் பதில் வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் பதில் செயலாளர் தெரிவித்திருந்தார். எனினும் அது குறித்து இதுவரை எந்தப் பதிலும் வழங்கப் படவில்லை.

> “ வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் 32 குடும்பங்களுக்குச் சொந்தமான 312 ஏக்கர் நிலமும், அரச காணியில் 300 ஏக்கர் வரையிலுமாக மொத்தம் 612 ஏக்கர் நிலத்தை கடற்படையினர் கையகப் படுத்தியுள்ளனர். ”

இந்தநிலையில் கடந்த இரு நாள்களாக காணி உரிமையாளர்களின் சம்மதம் இன்றிக் குறித்த பகுதியில் கடற்படையினர் முழுமையாக கம்பி வேலி அமைத்து வருகின்றனர் என்றும், இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது-
எந்த பிரதேசத்திலும் கடற்படையினரோ, படையினரோ காணிகளைச் சுவீகரிக்கவுள்ளதாக என்னிடம் தெரிவிக்கவில்லை. அண்மையில் கொழும்பு அலரி மாளிகையில் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது கூடப் படையினர் வசமுள்ள குறிப்பிட சில காணிகள் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. இந்த நிலையில் கடற்படையினர் வேலி அமைப்பது தொடர்பாக என்னிடம் எதுவும் தெரிவிக்க வில்லை.- என்றார். (ற-101)

# கஞ்சாவை விற்ற, வாங்கிய குற்றச்சாட்டில் 4 பேர் கைது

பருத்தித்துறை, மே 12
கஞ்சா குற்றச்சாட்டில் 4 பேரைக் கைது செய்த பொலிஸார் அவர்களை பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தினர். எதிர்வரும் 20ஆம் திகதி வரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
பருத்தித்துறை மணல் வீதியில் கஞ்சாவை விற்றுக் கொண்டிருந்த போது அதனை விற்றவரையும் வாங்கிய மூவரையும் தாம் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கஞ்சாவை வாங்கினார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் வெளிநாட்டுக் குடிமகன் ஒருவர் உள்ளிட்ட மூவரிடமும் இருந்து தலா ஒரு பக்கெற் கஞ்சாவும் அதனை விற்பனை செய்தவரிடம் இருந்து 25 பக்கெற் கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் இவர்கள் நால்வரையும் தாம் கைது செய்தனர் என்றும் மறுநாள் திங்கட்கிழமை காலையில் அவர்களை நீதிமன்றில் நிறுத்தினர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (உ-26)

# இரணைதீவு மக்களை தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 12
இரணைதீவை பூர்வீகமாகக் கொண்ட மக்கள், அந்தத் தீவில் தங்கி நின்று கடற்றொழில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய தரப்புக்கள் அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரிய தீர்மானம், வடக்கு மாகாண சபையின் அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது, அவசர பிரேரணையை வடக்கு மாகாண மீன்பிடி, போக்கு வரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் சபையில் சமர்பித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இரணைதீவைச் சொந்த இடமாகக் கொண்ட 150க்கு மேற்பட்ட குடும்பங்கள் 1992 ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்தனர். தங்களின் உடைமைகள், கால்நடைகள், கடற்றொழிலுக்கான உபகரணங்கள் அனைத்தையும் இழந்து முழங்காவில் பிரதேசத்துக்கு இடம் பெயர்ந்து சென்றனர்.
2009 ஆம் ஆண்டு போரின் பின்னர் இந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு பல முயற்சிகள் மேற்கொண்டனர். அவை எதுவும் கைகூடவில்லை. அதனால் முழங்காவில் பகுதியில் தற்காலிகமாக வசித்து வருகின்றனர். அங்கு தற்காலிகமாக வசித்து வந்த நிலையில், இரணை தீவுக்குச் சென்று அங்கு தங்கி நின்றுதொழில்நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.
ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி, கடற்படையினரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இரணைதீவின் எந்தப் பகுதியிலும் தங்கி நின்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்று கட்டளையிட்டு அந்த மக்களைத் துரத்திவிட்டுள்ளனர். கடற்றொழிலை மாத்திரம் நம்பியுள்ள அந்த மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.
எனவே, “இரணைதீவை பூர்வீகமாகக் கொண்ட மக்கள் தங்கள் வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழிலினை அந்தத் தீவில் தங்கி நின்று மேற் கொள்வதற்கு உரிய தரப்புக்கள் அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கோரிய பிரேரணை சமர்பிக்கப்பட்டது. இதனை ஏனைய உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர். இதனால் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. (ற-5)

# வன்முறைகளுக்கு எதிராகப் போராடும் சக்தி பெண்கள் அமைப்புகளிடமுண்டு

## மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

மன்னார். மே 12
எமது நாட்டில் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் மகளிர் அமைப்புக்களை ஒன்றிணைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சக்தி எமது பெண்கள் அமைப்புக்களிடம் காணப்படுகின்றது - இவ்வாறு மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தெரிவித்தார்.
மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெண்களின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் ஆராயும் அவசர கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் எதுவும் இடம் பெறும் சந்தர்ப்பத்தில் மகளிர் அமைப்புக்களை ஒன்றிணைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளைமேற்கொண்டு உரிய தீர்வைப் பெற்றுக் கொள்ள பாடுபடுவதை நினைத்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். மாவட்டத்தில் இடம் பெறு கின்ற அனைத்து சம்பவங்களுக்கும் மகளிர் அமைப்புக்கள்மட்டும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்.
பல்வேறு நிகழ்வுகள் மற்றும்சம்பவங்கள் இடம்பெறுகின்ற போதும் மக் களின் பங்குபற்றுதல் குறைவாக இருக்கின்றது. எமது மக்கள் வருமானத்தை தேடிக் கொள்ளும் சூழ் நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆண்கள் சிலர் மதுபானத் திற்காக தமது பணத்தைச் செலவு செய்கின்றனர்.வருமானத்தைத் தேடிக் கொள்ள நினைப்பதில்லை. இந்த மாவட்டத்தை அபிவிருத்திசெய்து கட்டி எழுப்ப நான் ஆசைப்படுகின்றேன். எனவே பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பலமிக்க அமைப்பாக செயற்படுவது போன்றுஏனையஅனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்-என்றார். (ற-56)

# வழிகாட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம், மே 12
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்கும் விஞ்ஞான பீட மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் நேற்றுத் தொடக்கம் நாளை வரை இடம்பெறுகின்றன.
குறித்த பாடசாலைகளின் மாணவர்களை இந்த வழிகாட்டல் கருத்தமர்வில் கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் அதிபர்கள் கேட்டுள்ளனர்.
மாணவர்களுக்கான இடம்பெயர் ஆய்வுகூட செயற்பாட்டறை உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களுக்கு இப் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன என்றும் அதிபர்கள் அறிவித்துள்ளனர். (ற-4)

# அச்சுவேலியில் கொள்ளை; 3ஆவது சந்தேகநபரும் கைது

யாழ்ப்பாணம், மே 12
அச்சுவேலியில் ஒரே இரவில் மூன்று வீடுகளுக்குள் வாள்கள், கூரிய ஆயுதங்களுடன் புகுந்து கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில், மூன்றாவது சந்தேக நபரை வவுனியாவில் வைத்துக் நேற்றுக் காலை கைது செய்துள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த சந்தேக நபரிடம் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட விசாரணையின் மூலமாக கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் சில கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார். இந்தக் கொள்ளைச் சம்ப ... ல் தலைமறைவாகி ... நவரைத் ... வித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-
அச்சுவேலிப் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் அடுத்தடுத்து வீடுகளுக்குள் கத்திகள், வாள்கள் சகிதமாக உட்புகுந்த கொள்ளையர் குழு 30 பவுணுக்கும் அதிகமான நகைகள், பெருந்தொகையான பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றது.
ராஜ வீதியில் உள்ள வீடொன்றுக்குள் முதலில் அத்துமீறிப் புகுந்த கும்பல் வீட்டில் இருந்தோரை வாள் முனையில் அச்சுறுத்தி அவர்கள் மீது தாக்குதல் நடத்தித் துணிகரக் கொள்ளையை நடத்தியிருந்தது. இதன் பின்னர் அச்சுவேலிப் பகுதியில் உள்ள பிறிதொரு வீடு ஒன்றுக்குள் புகுந்த கும்பல் அதே பாணியில் வீட்டில் இருந்தோரை வாள் முனையில் அச்சுறுத்தி அவர்களைத் தாக்கி வீட்டில் இருந்த 20 பவுணுக்கும் அதிகமான நகையையும் பணத்தையும் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றது.
இதன்பின்னர் அதே வீதியில் இருந்த அடுத்த வீட்டுக்குள் புகுந்து 10 பவுணுக்கும் மேற்பட்ட நகைகள் மற்றும் பணத்தைக்கொள்ளையடித்துச் சென்றது.
சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் வீதிகளை மூடி வாகனங்களைச் சோதனையிட்டபோது முதலாவது சந்தேக நபரை கைது செய்தனர். ராஜ வீதியில் [illegible] [illegible] வழிமறித்துச் சோதனை செய்ய முற்பட்டபோதே அந்த வாகனத்தில் இருந்து இருவர் தப்பியோட ஒருவரை மடக்கிப் பிடித்து கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இதன் பின்னர் தொடர்ச்சியாக விசாரணைகளைத் தொடர்ந்த பொலிஸார் ஏனைய சந்தேக நபர்களை மடக்கத் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.
இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான மற்றைய சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் வேறொரு கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்ததாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த நிலையில் இவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மற்றைய சந்தேக நபரை மடக்க முயற்சிகளை எடுத்திருந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த மூன்றாவது சந்தேக நபர் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவரை அச்சுவேலியில் இருந்து சென்ற பொலிஸ் குழு அதிரடியாகக் கைது செய்ததாகவும் அவரிடம் இருந்து நேற்று மாலை எட்டு பவுணுக்கும் அதிகமான நகைகள் கைப்பற்றப்பட்டதாகவும் அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு

சாவகச்சேரி, மே 12

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு இன்று பி.ப. 2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், கௌரவ விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரியுமான மருத்துவர் செல்வி கருணாதீபா சிவபாதசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-9)

## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், மே 12

கீழ்க்கரவை நுணுவில் குளக்கட்டு விநாயகர் ஆலய பரிபாலன சபையின் இசை இறுவட்டு வெளியீட்டு விழா இன்று யாழ்.ஹாட்லி கல்லூரியின் ஓய்வு நிலை ஆசிரியரான நமசிவாயம் கல்யாணி தலைமையில் இரவு 7 மணிக்கு கீழ்க்கரவை நுணுவில் குளக்கட்டு விநாயகர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக கட்டைவேலி கிராம அலுவலகர் க. பிரேந்திராவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் கலை நிகழ்வுகளாக இசைத் தொகுப்பில் இடம்பெற்ற பாடல் ஒன்றுக்கான நடனம் இடம்பெற உள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-21)

## ஓவியக் காட்சி

சாவகச்சேரி, மே 12

தென்மராட்சி கல்வி வலய ஓவியக் காட்சி நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வின் 3 என்னும் நிகழ்வில் வலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட எண்ணெய் வர்ண ஓவியங்கள், நீர்வர்ண ஓவியங்கள், கொலாஜ் வேலைகள் அடங்கிய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் ஓவியக் காட்சி நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணாவும் சிறப்பு விருந்தினராக வலய ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஓவியங்களை உருவாக்கிய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# அதிபரின் சேவை நீடிக்கப்பட்டதால் வடக்கு மாகாண சபையில் சர்ச்சை

யாழ்ப்பாணம், மே 12

வடக்கு மாகாணத்தில் எந்தவொரு பாடசாலை அதிபருக்கும் சேவை நீடிப்பு வழங்காத கல்வி அமைச்சு, இளவாலையிலுள்ள பாடசாலை அதிபர் ஒருவருக்கு மாத்திரம் ஏன் சேவை நீடிப்பு வழங்கியுள்ளது. - இவ்வாறு வடக்கு மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் அரியரட்ணம் கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் போது ஆளும் கட்சி உறுப்பினர் அரியரட்ணம் சபையில் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அமைச்சர் சபையின் 37 ஆவது கூட்டத்தில், இளவாலையிலுள்ள பாடசாலை அதிபர் ஒருவருக்கு சேவை நீடிப்பு வழங்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அதிபர் எதிர்வரும் மாதங்களில் ஓய்வு பெறவுள்ள நிலையில், ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதிபர் தரத்தில் எத்தனையோ பேர் பாடசாலையின்றி இருக்கின்ற நிலையில் குறித்த அதிபருக்கு ஏன் சேவை நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**" சேவை நீடிப்பு வழங்குவது என்றால் ஒருவருக்கு வழங்குவது மற்றொருவருக்கு வழங்காமல் விடுவது என்று இருக்கக் கூடாது. எந்த அடிப்படையில் வழங்கப் போகின்றோம் என்பது தொடர்பில் வடக்கு மாகாண சபை ஒரு கொள்கையைத் தயாரிக்க வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவித்தார். "**

கடந்த இரண்டு வருடங்களாக எந்தவொரு பாடசாலை அதிபருக்கும் சேவை நீடிப்பு வழங்காமல், இந்த அதிபருக்கு மாத்திரம் ஏன் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது என்று கேள்வி எழுப்பினார்.

ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், தேசிய பாடசாலைகளில் சேவை நீடிப்புச் செய்யப்படுகின்றது. அதனை ஏன் நீங்கள் கண்டு கொள்ளவில்லை. சில மத ரீதியான பாடசாலைகளில் அருட்தந்தையர்களே அதிபர்களாக வரவேண்டும் என்று நடைமுறை வைத்திருக்கின்றார்கள். சில பாடசாலைகள் தங்களின் பழைய மாணவர்களே அதிபர்களாக வரவேண்டும் என்று நடைமுறையைப் பின்பற்றுகின்றார்கள். இவ்வாறான காரணங்களால் உரியவர்கள் வருவதற்காக, சேவை நீடிப்பு வழங்கியிருக்கக் கூடும். எனவே இதனைச் சர்ச்சையாக்கக் கூடாது - என்றார்.

மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினரான அ.பரஞ்சோதி, தவறைச் செய்து விட்டு அதற்குக் காரணம் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. தவறைத் திருத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

சேவை நீடிப்பு வழங்குவது என்றால் ஒருவருக்கு வழங்குவது மற்றொருவருக்கு வழங்காமல் விடுவது என்று இருக்கக் கூடாது. எந்த அடிப்படையில் வழங்கப் போகின்றோம் என்பது தொடர்பில் வடக்கு மாகாண சபை ஒரு கொள்கையைத் தயாரிக்க வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

திருமதி அனந்தி சசிதரன் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபை அமைந்த பின்னர், பாடசாலைகளுக்கான அதிபர் நியமனங்கள் பகிரங்கமாக இடம்பெறுவதில்லை. பத்திரிகைகளின் ஊடாகப் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுவதில்லை. அவை இரகசியமாகவே மேற்கொள்ளப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இறுதியில் பதிலளிக்குமாறு கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவை, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அழைத்தார். இதன்போது கல்வி அமைச்சர், இது அமைச்சர் சபைக் கூட்டக் குறிப்பில் உள்ள விடயம். இதனை அமைச்சர் சபைக் கூட்டத்திலேயே விவாதிக்கலாம். அடுத்த அமைச்சர் சபைக் கூட்டத்தில் முன்வைத்து பரிசீலிக்கலாம். அத்துடன் எந்தவொரு பாடசாலை அதிபர் நியமனத்திலும் முறைகேடு இடம் பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-5)

## பூநகரி, பரமன்கிராயில் அனுமதியின்றி அமைக்கப்படுகிறது உல்லாச விடுதி

### அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு; நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பரமன் கிராய் பகுதியில் எந்த விதமான அனுமதியும் இன்றி, தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் உல்லாச விடுதியொன்றை அமைத்து வருகின்றார் எனினும் அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ அதனை இதுவரை தடுக்கவில்லை என்றும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள, கௌதாரிமுனை பரமன்கிராய் என்னும் இடத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரால் உல்லாச விடுதியொன்று அமைக்கப்பட்டுவருகின்றது.இது குறித்து அந்தப்பகுதிமக்கள்தெரிவித்ததாவது-

இந்த விடுதி அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. கடந்த சில காலங்களாக வடக்கில் பல பகுதிகளிலும் தமிழர்களுடைய நிலங்களை ஆக்கிரமித்து விகாரைகள் அமைப்பது, இராணுவ முகாம் அமைப்பது, வாடிகள் அமைப்பது, இது போன்ற உல்லாச விடுதிகள் அமைப்பது போன்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இது தன்னிச்சையாகத் திட்டமிடப்பட்டே இடம்பெறுகின்றது. நல்லாட்சி அரசு என்ற போர்வையில், எமது நிலங்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களால் திட்டமிட்டு பறிக்கப்படுகின்றன.- என்று குற்றஞ்சாட்டினர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் கட்டப்படும் இந்த உல்லாச விடுதி தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை அது குறித்து எந்த நடவடிக்கையும் இல்லை. உல்லாச விடுதியின்கட்டுமானப்பணிகளும் நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளரைத்தொடர்புகொண்டு கேட்ட போது-

குறித்த தென்னிலங்கையைச் சேர்ந்தவரிடம் ஓர் உறுதி உள்ளது. அந்த உறுதியை வைத்து பிரதேச சபையிடம் கட்டடத்துக்கான அனுமதியைப் பெற்று கட்டடம் அமைக்க ஆரம்பித்துள்ளார். இது தற்போது பிரச்சினையாக மாறியுள்ளது. அதனால் குறித்த காணியை அடையாளப்படுத்தித் தருமாறு பிரதேச செயலகத்திடம் அந்த காணிக்கான உறுதி அனுப்பப்பட்டுள்ளது.

இந்த உறுதிக்குரிய காணியானது, அரச காணியா அல்லது தனியார் காணியா என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பிரதேச செயலகத்திடம் இல்லை. அதனால்உல்லாசவிடுதிஅமைக்கப்படும் காணி, அரச காணியா அல்லது தனியார் காணியா என இதுவரை அடையாளப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாகவே இந்த விடுதி அமைக் கப்படுவதைத்தடுக்க முடியவில்லை. பிரதேச செயலகத்தால் அந்த உறுதிக்குரிய காணியை அடையாளப்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. காணி அடையாளப்படுத்தப்படும் வரை, உல்லாச விடுதியின் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு தெரிவித்துள்ளோம். எனினும் அவையும் மீறியும் கட்டுமான பணிகள் தொடர்கின்றன - என்று தெரிவித்தார். (ற-ஐ-2)

## படையினர் கையகப்படுத்தியுள்ள பொது இடங்களை விடுவியுங்கள்

### அமைச்சர் மனோ கணேசனிடம் மனு கையளிப்பு

வவுனியா, மே 12

விமானப் படையினர் ஆக்கிரமித்துள்ள வவுனியா இறம்பைக் குளம் மகளிர் கல்லூரியின் விளையாட்டு மைதானம் உட்பட படையினர் ஆக்கிரமித்துள்ள பொது இடங்களை விடுவிப்பதற்கு ஆவன செய்யுமாறு கோரி, சுகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசனிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவுக்கு சென்ற அமைச்சர் மனோகணேசன், வவுனியா சேவா லங்கா நிலையத்தில் வவுனியா மாவட்ட மொழிச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அதன்போதே குறித்த கோரிக்கைகள் உள்ளடங்கிய மனு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த காலத்தில் வவுனியா மாவட்டத்தில் 33 மொழிச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, எவ்வித செயற்பாடுகளும் இன்றி பெயரளவில் மட்டுமே இயங்கின. முன்பு வவுனியா மாவட்ட அரச அதிபராக செயற்பட்ட ஹரிச்சந்திர, இந்தச் சங்கங்கள் அனைத்தையும் ஒன்றுகூட்டி ஒரு சமாசமாக உருவாக்கிய பின்பும் கூட, செயற்றிறன் மிக்க ஒரு சமாசமாக இது இயங்கவில்லை என்பது கவலையான விடயமே. இயங்காமல் இருக்கும் சங்கங்களின் சமாசத்தை புதிய பாதையில் செயற்றிறன் மிக்க சமாசமாக இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கின் நிர்வாக மொழியாக தமிழ் மொழி இருக்கும் நிலையில், பெரும்பான்மையாக தமிழர்கள் வாழும் வவுனியா மாவட்டத்தில் மூவின மக்கள் வாழும் மாவட்டமாக இந்த மாவட்டம் திகழும்போது கூட, பெரும்பாலான அரச திணைக்களங்களின் வாகனங்களில் முன்பக்கப் பெயர்ப் பலகைகளில் பதவி, திணைக்களங்களின் பெயர் என்பவை சிங்கள மொழியில் மாத்திரமே வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்துக்கான விளையாட்டு மைதானத்தை மிக நீண்ட காலமாக விமானப் படையினர் முட்கம்பி வேலி அமைத்து மூடி வைத்துள்ளனர். இந்த மைதானத்தின் தெற்குப் பக்கமாக உள்ள பொது மயானமும் விமானப் படையினரால் அடைத்து வைக்கப்பட்டுள்ளது. அவற்றை விடுவிப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்துரையாடி விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வவுனியா நகரின் மக்கள் நெருக்கம் உள்ள இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையின் பிரதான முகப்பு வாசலுக்கு முன்பாகவும், ஒரு புராதன ஆலயத்தின் வடக்குப் பக்கமாகவும், நகரசபைக்குச் சொந்தமான ஒரு கலாசார மண்டபத்தை மிக நீண்டகாலமாக இராணுவம் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இதையும் விரைவாக விடுவிப்பதற்கு ஆவன செய்ய
குறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த சம்பவத்தை விவரித்த நடேசன் மகன்

## கண்கலங்கினர் பிரிட்டன் எம்.பிக்கள்

லண்டன், மே 12
அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன், போரின் இறுதிக் கட்டத்தில் வெள்ளைக் கொடியுடன் சரணடையும் போது என்ன நடந்தது என்பது தொடர்பில் அவரது மகன் பார்த்தீபன் உணர்வு பூர்வமாகத் தெரிவித்துள்ளார். பிரிட்டனில் நடந்த முள்ளிவாய்க்கால் சாட்சி நிகழ்வில் அவர் கண்ணீருடன் உரையாற்றியமை அங்கிருந்தோரை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

பிரிட்டன் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை, முள்ளிவாய்க்கால் சாட்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பிரிட்டன் நாடாளுமன்றஉறுப்பினர்களும் பங்கெடுத்திருந்தனர்.

இறுதிப் போரின்போது பணியாற்றிய கள மருத்துவர் உயர்ச்சி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசனின் மகன் பார்த்தீபன் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.

கண்ணீருடன் உரையாற்றிய பார்த்தீபன்-

> முள்ளிவாய்க்காலில் நடந்த மனிதப் படு கொலைக்கு நிச்சயம் ஒரு நீதி தேவை என்று பிரிட்டனின் ஆளும் கட்சியான கொன்சர் வேட்டிவ் கட்சி, எதிர்க்கட்சியான லேபர் கட்சி மற்றும் லிபரல் டெமொகிராட்ஸ் கட்சியைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து கோரிக்கை விடுத்தார்கள்.

போரின் இறுதிக் கட்டத்தில் என்னுடன் அப்பா தொடர்பு கொண்டார். நான் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடையச் செல்கின்றேன். 30 நிமிடங்களில் உனக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கவில்லை என்றால் நான் உயிரிழந்து விட்டதாக அர்த்தம் என்று சொன்னார்.

அவர் சொன்னது போலவே நடந்து விட்டது. எனது அம்மா, தங்கை மற்றும் சகோதரர் ஆகியோருடன்தான் அப்பா வெள்ளைக் கொடியுடன் சென்று சரணடைந்தார். அவரை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர் என்றார். பார்த்தீபனின் உரையினால் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்களது கண்களிலும் கண்ணீர் கசிந்தது. உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர்சிந்திக்கொண்டிருந்த பார்த்தீபனை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேற்றினர். அவர் கண்ணீருடனேயே தனது உரையைத் தொடர்ந்து முடித்தார்.

முள்ளிவாய்க்காலில் நடந்த மனிதப் படுகொலைக்கு நிச்சயம் ஒரு நீதி தேவை என்று பிரிட்டனின் ஆளும் கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சி, எதிர்க்கட்சியான லேபர் கட்சி மற்றும் லிபரல் டெமொகிராட்ஸ் கட்சியை சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து கோரிக்கை விடுத்தார்கள். (ற-5)

# கபில ஹெந்த விதாரணவிடம் மூன்று மணி நேர விசாரணை

## தாஜுதீன் கொலை தொடர்பில்

கொழும்பு, மே 12
ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பாக, இராணுவத்தின் முன்னாள் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரணவிடம், மூன்று மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்தக்கொலை தொடர்பாக மேஜர் ஜெனரல் கபில் ஹெந்த விதாரணவிடம், கடந்த திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணி நேரம் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை நடத்தியுள்ளனர் என மூத்த புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாஜுதீன் உயிரிழந்த பின்னர், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த, மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண தாஜுதீனின் தொலைபேசி அழைப்புகள் தொடர்பான விவரங்களை, தொலைத்தொடர்பு வலையமைப்பு ஒன்றிடம் இருந்து பெற்றிருந்தார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த போதிலும், அந்த விவரங்களைக் கோர வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கவில்லை என்று குற்றப் புலனாய்வு அதிகாரி குறிப்பிட்டார்.

இந்தக் கொலை தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர், ஏற்கனவே பல பொலிஸ் அதிகாரிகளை விசாரித்துள்ளனர். (ற-5)

# புலம்பெயர் தமிழர் பலரிடம் மனமாற்றம் ஏற்பட்டுள்ளது

## ஜயம்பதி விக்கிரமரட்ண எம்.பி. தெரிவிப்பு



லண்டன், மே 12
பிரிவினைக்கு ஆதரவாக இருந்த புலம்பெயர் தமிழர்கள் பலரிடத்தில் மனமாற்றம் ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் உள்ள இலங்கைக்கான புலம்பெயர் தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் கலந்து கொண்டார். இதன் போது தமிழர்களின் கருத்துக்களையும் எண்ணங்களையும் அவர் கேட்டறிந்து கொண்டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர் காரணமாக அல்லது போருடன் தொடர்புடைய காரணங்களால் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள், எம்மவர்கள் என்பதை உணர்ந்துள்ளோம். அரசியல் ரீதியாக தீவிரமாக செயற்பட்டு வரும் அவர்களிடமும், புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்படுவது தொடர்பில் அவர்களது கருத்துக்களை கேட்பது சரியானது. புலம்பெயர் மக்களின் கருத்துக்களைக் கேட்டு அறிந்து கொள்வதற்காகவே நான் பிரிட்டன் வந்துள்ளேன்.

இந்தச் சந்திப்பில் முன்னர் பிரிவினைக்கு ஆதரவாக இருந்த பலரும் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர். அது அவர்களிடையே ஏற்பட்ட மனமாற்றத்தைக் காட்டுகிறது. அரசியல் தீர்வில் நம்பிக்கையில்லாமல் சட்டரீதியான பிரிவினையே வேண்டும் என்று கோரியவர்களும் வந்து கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். சூழல் மாறியிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சராசரி மக்களின் பார்வையில் ஒற்றையாட்சி என்பது பிரிக்கப்படாத ஒரு நாடு என்பதுவே. வடக்கு மக்கள் கூட்டாட்சி குறித்து சொல்வது என்னவென்றால் சில அம்சங்களில் தமது விடயங்களை தாமே கையாளும் அதிகாரத்தை பெறுவதே ஆகும். அரசமைப்பில் ஒற்றையாட்சி என்பதற்கான விளக்கம் வேறு மாதிரியாக இருக்கலாம். ஆனால் மக்கள் வேண்டுவது பிரிக்கப்படாத ஒரு நாடு – என்றார். (ற-5)

# போலிக் கடவுச் சீட்டுடன் இலங்கையர்கள் கைது

கொழும்பு, மே 12
போலிக் கடவுச் சீட்டுகளுடன் பத்து இலங்கையர்கள் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். – என்று வியட்ரைம்ஸ் ஊடகம் தகவலை வெளியிட்டுள்ளது.

மலேசியப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் ஒன்றில் 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பத்துப் பேர் இலங்கையர்களாவர்.

போலிக் கடவுச்சீட்டில், இலங்கையர்கள் ஜெனிவா செல்ல விருந்தனர் என்று மலேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றும், குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் இருவரும் இந்த விவகாரத்தில் தொடர்புபட்டுள்ளர் என்றும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (ற-5)

# விமலை நேரடி விவாதத்துக்கு அழைக்கிறார் ஞானசார தேரர்

பொதுபல சேனா தொடர்பில் தவறான கருத்துக்களை வெளியிட்டுவரும், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை நேரடி விவாதத்துக்கு வருமாறு அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சவால் விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நோர்வே மத்திய உளவுத்துறை அமைப்பால் பொதுபல சேனா அமைப்புக்கு நிதியுதவி அளிக்கப்படுகின்றது என்றும், அவர்களது வழிகாட்டலிலேயே பொதுபல சேனா செயற்படுகின்றது என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தவறான கருத்துக்களைத் தெரிவித்து வரும், விமல் வீரவன்ச, மகிந்தானந்த அளுத்கமகே, மனுச நாணயக்கார, டிலான் பெரேரா, ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர, அரசியல் ஆய்வாளர்களான கெவிந்து குமாரதுங்க மற்றும் தயான் ஜயதிலக ஆகியோரை நேரடி விவாதத்துக்கு வருமாறும் அவர் சவால் விடுத்துள்ளார்.

அவ்வாறு நிதியுதவிகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அது தொடர்பிலான வங்கி அல்லது வேறு கொடுக்கல் வாங்கல் குறித்த பற்றுச்சீட்டுகள் அல்லது ஆவணங்கள் காணப்படும். அவ்வாறு இருந்தால் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

பொது பல சேனா அமைப்புக்கு அப்பாவி இலங்கை பௌத்தர்களே நிதியுதவி அளிக்கின்றனர் என்றும், உண்மையறியாத சிலர் தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர் என்றும் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (ற-5)

# பனாமா ஆவணங்களில் ராஜபக்சாக்கள் இல்லை

## மகிந்த எம்.பி. பெருமிதம்

கொழும்பு, மே 12
பனாமாவில் மொசக் பொன்சேகா சட்ட ஆலோசனை நிறுவனத்தின் மூலமாக பணத்தை முதலிட்டுள்ளவர்களில் ராஜபக்சாக்கள் இல்லைத்தானே என்று முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்றஉறுப்பினருமானமகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சர்வதேச தாதியர் தினம், கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடை... ச சேவை ஐக்கிய ...லைவர் ...த தேரரின் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

வைபவம் இடம்பெற்று, அங்கிருந்து வெளியேறும்போது, அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்கள், பனாமாவில் மொசக் பொன்சேகா நிறுவனம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை – தன்னுடைய புதல்வர்களான நாமல் ராஜபக்ச மற்றும் யோசித ராஜபக்ச இருவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டமையானது அரசியல் பழிவாங்கலாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

# கிருலப்பனைக் கூட்டத்துக்குச் சென்ற எம்.பிக்கள் மீது நடவடிக்கை இல்லை

## சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 12
கிருலப்பனையில் நடந்த கூட்டு எதிரணியின் மே நாள் பேரணி மற்றும் கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது சிறிலங்கா சுதந்திரக் கட்சி எந்த ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்காது. – இவ்வாறு அந்தக் கட்சியின் பேச்சாளரான அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காலியில் சுதந்திரக் கட்சி நடத்திய மே நாள் பேரணியைப் புறக்கணித்து, கிருலப்பனையில் கூட்டு எதிரணி நடத்திய மே நாள் பேரணியில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுக்காது.

ஒரு சிலரைத் தவிர, கிருலப்பனை பேரணிக்குச் சென்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் ஒழுக்கத்தை மீறவில்லை– என்றார்.

முன்னதாக, கிருலப்பனையில் கூட்டு எதிரணியினரின் பேரணியில் பங்கேற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் செயலர் துமிந்த திசநாயக்கவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீரவும் கடுமையாக எச்சரித்திருந்தனர்.

எனினும், அதனை மீறி, மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட 41 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிருலப்பனை கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். (ற-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீள் விசாரணைகள் நடந்தால் மன உளைச்சலே உண்டாகும்

## காணாமற் போனோர் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 12
காணாமற் போனவர்கள் தொடர்பில் மீள் விசாரணை இடம்பெற்றால், காணாமற் போனவர்களின் உறவினர்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாவார்கள். - இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

> போர்க் காலத்தில் புலிகளும், படையினரும் மாற்றுப் பெயர்களைப் பயன்படுத்தினர். அந்தப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அத்துடன் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரட்டைப் பதிவுகளும் கிடைந்துள்ளன.

காணாமற் போனோர் தொடர்பில்விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடையவிருந்தது. தற்போது மேலும் ஒரு மாதம் நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் வினவியபோதே மக்ஸ்வெல் பரணகம மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எமது குழுவின் பணிகளை முன்னெடுப்பதற்கு வழங்கப்பட்டுள்ள கால நீடிப்புப் போதாது. கிடைத்த முறைப்பாடுகளுள் 8 ஆயிரம் குறித்தே இதுவரை விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. போர்க் காலத்தில் புலிகளும், படையினரும் மாற்றுப் பெயர்களைப் பயன்படுத்தினர். அந்தப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அத்துடன் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரட்டைப் பதிவுகளும் கிடைந்துள்ளன. எனவே, இவற்றை விசாரிப்பதில் சிக்கலும் கால தாமதமும் ஏற்பட்டுள்ளன.

எமது குழு கலைக்கப்பட்டு தனியான பணியகமொன்று அமைக்கப்பட்டால் மீதமுள்ள முறைப்பாடுகள் அதனிடம் ஒப்படைக்கப்படும். எனினும், மீள் விசாரணை ஆரம்பமானால் காணாமற் போனவர்களின் உறவினர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாவார்கள்.- என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஈ-5)

## நாமல் மற்றும் யோசிதவிடம் நேற்றுமுன்தினம் விசாரணை

கொழும்பு, மே 12
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன்மாரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் முன்னாள் கடற்படை உறுப்பினர் யோசித ராஜபக்ச ஆகியோரிடம் பெரும் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் பொலிஸ் நிதிக் குற்றவியல் பிரிவு என்பவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வாக்குமூலங்கள் பெற்றுள்ளன.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நாமல் ராஜபக்ச, 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில், இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானங்களை சட்ட விரோதமான முறையில் பயன்படுத்தியமை தொடர்பிலேயே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை நாமலிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் 50 மில்லியன் பெறுமதியான உள்நாட்டு விமானப் போக்குவரத்தை நாமல் ராஜபக்ச மேற்கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

தெகிவளையில் அமைந்துள்ள அதி நவீன சொகுசு வீடொன்று தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக யோசித ராஜபக்ச பொலிஸ் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். சி.எஸ்.என். தொலைக்காட்சிசேவையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் யோசிதவிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் ஒரு கட்டமாக அவரது சொத்துகள் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ள படுகிறது.

தெகிவளையில் அமைந்துள்ள ஒரு அதி சொகுசு வீடு யோசித ராஜபக்சவுக்குச் சொந்தமானது எனத் தகவல்கள் வெளியாகியதையடுத்து, இதுதொடர்பிலும் ஜனாதிபதி ஆணைக்குழு இவரிடம் விசாரணை மேற்கொண்டு வருகிறது. (ஈ-5)

## வெளிநாட்டில் பணம் பதுக்கியதாக வெளியான தகவல்கள் தவறானவை

### அவன்ட் கார்ட் நிறுவனத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 12
வெளிநாட்டில் பணத்தை பதுக்கி வைத்திருக்கவில்லை. அவ்வாறு வெளியான தகவல்களை மறுக்கின்றேன். - இவ்வாறு அவன்ட் கார்ட் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி தெரிவித்துள்ளார் என அவரது சட்டத்தரணி நிசான் பிரேமரத்ன குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் பணம் பதுக்கியுள்ளவர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய பனாமா ஆவணங்கள் திங்கட்கிழமை வெளியாகியன. இரண்டுலட்சத்துக்கும் அதிகமான ஆவணங்களில், இலங்கையைச் சேர்ந்த 65 பேரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

அதில் குறிப்பாக, அவன்ட் கார்ட் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி, அந்த நிறுவனத்தின் பங்காளர்களான சேனாரத் பண்டார திசநாயக்க, பிரசன்ன அதானசியஸ் சிறிமேவன் ராஜரத்ன, கீத்சிறி மஞ்சுள குமார யாப்பா ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றிருந்தன.

இவர்கள் நால்வரினது பெயர்களிலும், பிரிட்டன் வேர்ஜின் தீவுகளில் 2012 ஆம் ஆண்டில் இருந்து, வங்கிக் கணக்குகள் நடைமுறையில் இருக்கின்றன என பனாமா ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

இது குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகிய நிலையில், மேஜர் நிசங்க சேனாதிபதியின் சட்டவாளர், நிசான் பிரேமரத்ன கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்தார்.

அதில் வெளிநாடுகளில் மேஜர் நிசங்க சேனாதிபதி பணத்தைப் பதுக்கி வைத்துள்ளார் என ஊடகங்களில் வெளியான செய்திகளை, அவரது சார்பில் மறுப்பதாக சட்டவாளர் நிசான் பிரேமரத்ன குறிப்பிட்டார்.

ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளில் கூறப்பட்டுள்ளமை போன்று, பனாமா ஆவணங்களில் ஒரு டொலரையேனும் பதுக்கி வைத்திருப்பதை, நிரூபித்தால் அந்தப்பணம்முழுவதையும்கண்டு பிடித்தவருக்கே பரிசாக கொடுக்கப்படும் என மேஜர் நிசங்க சேனாதிபதி சார்பில் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே தான் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், தமது நிறுவனம் பற்றி தகவல்களை வெளியிடும் போது ஊடகங்கள் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஈ-5)

## சோபித தேரரின் உடற்கூற்றுப் பரிசோதனை தொடர்பான அறிக்கை பெற நடவடிக்கை

கொழும்பு, மே 12
நீதியான சமூகமொன்றுக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மறைந்த மாதுளுவாவே சோபித தேரரின் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமைக்கானகாரணம் அடங்கிய அறிக்கை கொழும்பு பிரதான நீதிவானிடம் முன்வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் அனில் ஜயசிங்க, கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னகோன் உள்ளிட்ட 5 வைத்திய அதிகாரிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட் டது.

மாதுளுவாவே சோபித தேரரின் உயிரிழப்பு சந்தேகத்துக்குரியது என்று உடுவே தம்மாலோக தேரர்பொலிஸ்மா அதிபரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமைக்கான காரணத்தை நீதிவான் வினவினார். இதன்போது இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றைச் சமர்பிக்க 5 பேர் கொண்ட வைத்திய குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று இரகசியப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்தனர். (5)

## அத்துலத் முதலி கொலை தொடர்பில் புதிய விசாரணை நடத்த வேண்டும்

### அவரது சகோதரர் கோரிக்கை

கொழும்பு, மே 12
முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் படுகொலை தொடர்பாக புதிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவரது சகோதரர் தயந்த அத்துலத்முதலி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசில் பதில்பாதுகாப்பு அமைச்சராகவும், பந்தோபஸ்து அமைச்சராகவும் இருந்த லலித் அத்துலத் முதலி, பிரேமதாச அரசிலும் அங்கம் வகித்தார். பின்னர், பிரேமதாசவுடன் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து தனிக்கட்சி அமைத்து மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட போது, 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமைகொழும்பில் நடந்த லலித் அத்துலத் முதலியின் நினைவுப் பேருரையின்போது அவரது சகோதரர் தயந்த அத்துலத்முதலி, லலித் படுகொலை தொடர்பாகப் புதிய விசாரணைநடத்துமாறுகோரிக்கை விடுத்துள்ளார்.

எனது சகோதரர் கொல்லப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. இந்த நிலையில் அவரது கொலை தொடர்பாக புதிய விசாரணை நடத்த வேண்டும். ஏனென்றால் அவரது கொலை மர்மமானது.

லலித் அத்துலத் முதலியின் இறுதிச் சடங்கில் எவ்வாறு கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன? நாம் மயானத்தைச் சென்றடைந்த போது கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன.

லலித் அத்துலத்முதலிக்கு சிங்கப்பூர் குடியுரிமையும், தமது நாட்டு அரசில் அமைச்சர் பதவியையும் வழங்க அந்த நாட்டுப் பிரதமர் முன்வந்தார். அப்போது அவர் இலங்கை குடியுரிமையை விட்டுக் கொடுத்து, சிங்கப்பூர் குடியுரிமையைப் பெறுவதற்கு இணங்கியிருந்தால், இன்றும் உயிருடன் இருந்திருப்பார்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் ஒப்பரேசன் லிபரேசன் மூலம், விடுதலைப்புலிகளின்தலைவர் பிரபாகரனைப் பிடிக்க நெருங்கியபோது, அதனை நிறுத்துவதற்கு அரசு உத்தரவிட்டது. அந்தக் கட்டத்தில் நான் அவருடைய வீட்டுக்குச் சென்றபோது, லலித் கடுமையான மன உளைச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார் - என்றார். (ஈ-5)

## அக்கரைப்பற்று முகாம் வந்த வாகன விவரங்களைச் சமர்ப்பிக்க உத்தரவு

### பிரகீத் காணாமல் போன வழக்கில்

கொழும்பு, மே 12
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடைசியாகக் கொண்டு செல்லப்பட்டார் என்று கருதப்படும் அக்கரைப்பற்று இராணுவ முகாமுக்கு வந்த இராணுவ அதிகாரிகள் மற்றும் வாகனங்கள் பற்றிய விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு, இராணுவத் தளபதிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹோமகம நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, நீதிவான் ரங்க திசநாயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பிரகீத் எக்னெலிகொட கடத்தல் விசாரணைக்குப் பொறுப்பான, குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் சானி அபேசேகர, நீதிமன்றத்தில் முன்னிலையாகி, பிரகீத் எக்னெலிகொட 2010 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி கடத்தப்பட்ட பின்னர் சந்தேக நபர்களால் அக்கரைப்பற்று இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்று தகவல் கிடைத்துள்ளது. மின்னேரியா இராணுவ முகாமில் இருந்து, வழக்கின் ஒன்பதாவது சந்தேகநபர் 30 லீற்றர் எரிபொருளை பெற்றுள்ளார். இதற்கான ஆதாரங்களை நிரூபிக்க இராணுவத்திடமுள்ள ஆவணங்கள் தேவைப்படுகின்றன.

மின்னேரியா இராணுவ முகாமின் எரிபொருள்நிலையத்துக்குபொறுப்பாக இருந்த மேஜர் ரோகண விக்கிரமசிங்கவின் ஆவணங்களை பெற்றுத்தர வேண்டும்.

மின்னேரியா முகாமில் இருந்து, எரிபொருளைப் பெற்ற 9 ஆவது சந்தேகநபர், குறிப்பிட்ட நாளில் இட்டிருந்த கையெழுத்து குறித்து அரச பகுப்பாய்வாளரின் ஆய்வுக்கு உத்தரவிடுமாறும், கோரிக்கை விடுத்தார். இதையடுத்து, அக்கரைப்பற்று இராணுவ முகாமுக்கு வந்த இராணுவ அதிகாரிகள் வாகனங்கள் பற்றிய பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு நீதிவான்உத்தரவிட்டார். (ஈ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நொந்து போன கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு நல்ல காலம்!

நல்லாட்சி அரசு, கண்டும் காணாத போக்கில், வடக்கின் அபிவிருத்தி குறித்துத் தேவையான அக்கறை காட்டாமல் இருப்பதற்கு முற்றிலும் எதிர்மாறாக--

பல்லாயிரம் மைல்கள் தொலைவில் உள்ள, கனேடிய நாடு, வடக்கின் அபிவிருத்திக்குத் தான் உதவுவதற்கு முன்வந்துள்ளதாகச் சமிக்ஞை காட்டி உள்ளது.

இந்த நல்ல தகவலை-செய்தியை-கனேடிய அரசு உறுதி செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கொழும்பு அலுவலகம் உத்தியோகபூர்வமாக இதைத் தெரிவித்து உள்ளது.

ஆரம்ப நடைமுறையாக, வடக்கின் பல பகுதிகளுக்கும், கொழும்பில் உள்ள கனடாவின் உயர் ஸ்தானிகர் செல்லி விட்டிங் உட்பட்ட குழுவினர் நேரடியாகப் பயணம் செய்து அபிவிருத்திக்குத் தேவையான இடங்கள் குறித்து மதிப்பீடு செய்ய உள்ளனர் என்பது தகவல்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐ.நாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு, கனேடிய அரசு ஆறு மில்லியன் டொலர்களை (கிட்டத்தட்ட 63 கோடி ரூபாவை) வழங்க உள்ளதாக உத்தியோக பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த நிதி உதவியைக் கொண்டு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என்பது தகவல்.

இலங்கையில், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பெரிய அளவில் உதவி வழங்கும் மூன்றாவது கொடையாளராக உயர்ந்து விளங்குவது கனடாவே என்பதும் விசேடமாகத் தொட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

கனடாவின் மேற்போந்த நிதி உதவியின் கீழ், போரினால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டு நொந்துபோன மக்கள் வாழும் மாவட்டங்கள் முல்லைத்தீவும்-கிளிநொச்சியும் என்பது குறிப்பாகத் தொட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால்--

இலங்கை அரசின் வருடாந்த வரவு-செலவுத் திட்டங்களில் அது ஒருபோதும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

நாட்டின் ஏனைய பிரதேசங்கள் போன்று கணிக்கப்படாமல், அவை புறம் ஒதுக்கப்பட்டன.

அந்த வகையில்--

அத்தகைய சூழமைவில்--

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தையும் மையங்களாகக் கொண்டு அபிவிருத்தி செய்வதற்கு கனேடிய அரசு முன்வந்தமை, மனம் கொண்டமை வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்கு உரியதுமாகும்.

உணவு மற்றும் விவசாயம் தொடர்பான அபிவிருத்தியில் வன்னி தன்னிறைவு காணும் போது, யாழ்.குடாநாடும் அதிக நன்மை பெறும்.

ஒட்டு மொத்தத்தில்--

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் எமது விவசாயிகளை கடனாளிகளாகவும், சுமைதாங்கிகளாகவும் ஆக்கிய அவலத்துக்கு, விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நல்லது நடக்கும் என்று எதிர்பார்ப்போம்.

# மறக்கவும் மன்னிக்கவும் முடியுமா...?

செ.உமாசுதன்

இலங்கையின் வடக்கில் ஓர் தேசமிருந்தது,இருக்கிறது,அங்கு பாரம்பரியமான தமிழ் இராச்சியங்களின் ஒரு வழித்தோன்றலில் உதித்த உத்தமர்கள் காத்து நின்றனர், காத்திருந்தனர்."தம்பி உடையான் படைக்கு அஞ்சான்" என்பது நிதர்சனமாக நித்திய சுகத்தையும்,சுவாசத்தையும் தமிழ் மக்களுக்குத் தந்தது.பல வெற்றிகளைத் தடை உடைத்தே கொடுத்தது. ஓர் இனத்துவமாக மொழியாழுகையும், சமூக விழுமியங்களின் மிளிர்கையும் , செழுமை நிறைந்த பொருண்மியச் சூழுகையும் சிறப்பைத் தந்தன. நீதி,நிர்வாகம், சட்டம் ஒழுங்கு என அத்தனையும் சமூகத்தில் பிறழ்வற்ற கட்டுக்கோப்புகளை ஒழுக்கக் கோவைகளாக முன்னின்று தமிழர்க்கு முகமலர்வைத் தந்தன. தந்திருந்தன. சர்வதேசம் என்ற காலனிகளின் கீழ் அடிமைப்படாத தமிழன் என்ற தலை நிமிர்வைச் சொல்லியிருந்தன.பல விட்டுக் கொடுப்புக்களையும் தட்டிக் கொடுப்புக்களையும் இயல்பாகவே அவர்களிடமிருந்து வரவேற்பாய் பெற்றிருந்தன.தமிழர்க்கு பெற்றுத் தந்திருந்தன.

இத்தகைய உரிமை வேண்டிய ஓர் இனத்தின் விடுதலைப் பயணத்திலே விடியல் என்பது இருளின் சகதியாகத்தான் இருந்தது.இப்போதும் நல்லிணக்கம் என்பதான ஒளியின் மருள்கையை தெறிகை செய்து நகர்கின்ற அதே இனவாத அரசின் சகதியாகத் தான் எங்கும் பரந்து கிடக்கிறது. 2009 களின் முன்பான காலங்கள் தமிழர்களின் நியாயமான உரிமைகளின் அபிலாசை வெளிப்பாடாக வீரத்தின் சவுக்கோடு உயர்ந்து நின்ற போது பல சந்தர்ப்பங்களை ஏற்புடைய தாக்கின. இருந்தும் இனவாதச் சாக்கடைகளின் ஆழம் சர்வதேசம் என்ற வெளியிடை இருந்து தருவிக்கப்பட்ட இராஜதந்திர மீன்களின் சுழியோடலோடு கூட்டாகி அத்தனை மீள்தலையும் மூழ்கடித்துவிட்டன.

இந்த ஆரவாரங்களின் உச்சம் தான் இன அடக்குமுறையாக



பரிணமித்து 2009 களின் நடுப்பகுதியிலே மிகப் பெரிய மனிதப் பேரவலமாக, தமிழினப் படுகொலையாகக் கோரத் தாண்டவம் ஆடியது. பல்லாயிரக் கணக்கான உறவுகளின் ஆன்மத் துடிதுடிப்பு இப்போதும் ஓசையுறுகிறது, ஆர்ப்பரிக்கிறது.அடர்ந்த காடுகளிடை எரிந்த தியாகங்களின் நெருப்பு உயிர்ப்புடன் அந்தரிக்கிறது. இலட்சியக் கனவாய் வரித்திருந்த உணர்வுகளாய் நெஞ்சக் கதவுகளிடை புகுந்து நெருடுகிறது.ஆறு ஆண்டுகள் தேய்ந்தும்,வேண்டிய நியாயங்கள் இன்னமும் கிடைக்க வில்லை...! மறக்க முடியாத எவரும் மறுக்க முடியாத ஓலங்களின் சத்தம் இப்போதும் செவிகளிடை சாவின் பறையிசையை மீட்டுகின்றன.இத்துணை துன்பங்களை மறக்க முடியுமா..? உயிர் வலியின் கணங்களை ரசித்திருக்க முடியுமா? உடல் ஊனமாகி தமிழன் தாயகமெங்கும் சாட்சியமாய் பரிதவித்திருக்கிறான்.விடுதலை வேண்டிய படியே காத்திருக்கிறான்.வலி தந்த உணர்வுகளை, ஞாபகங்களை மறக்க முடியுமா? மன்னிக்க முடியுமா?

மீண்டும் தமிழன் உயிர் வலி கொண்ட, துன்பங்களால் சுய நினைவிழந்து போன,தாய் நிலம் சிவந்து போன தருணங்கள் எதிரே தத்தளிக்கின்றன. மே எனும் கோடை மேகம் அந்த உயிர் வலிகளைத் தன்னுள் சுவீகரித்து விட்டது. வெப்பத்தின் கதகதப்பாய் எங்கும் விசிறிவிட்டிருக்கிறது.. கண்ணீரை வியர்வையாய்ச் சிந்து

கிறோம்.

இந்த நிலையிலே கடந்து சென்ற ஓராண்டுகளுக்குள் எம்முன் நிமிர்வு பெற்று எந்தவித நியாயமான பகிர்வுமின்றி ஆமை வேகம் கொண்டுள்ள ந(சொ)ல் அரசும் சொல் நெறியின் வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்மைகளைச் செய்யவில்லை.மாறாக உருமறைப்புக்களையும்,மறக்க வேண்டும் என்ற மறுதலிப்புக்களையும், மழுங்கடிப்புகளையும் தமிழன் தாய் நிலமெங்கும் பௌத்தத்தின் குறியீடுகளையும் நிலை நிறுத்துவதிலும்,கடை விரித்து விற்பதிலும் முன்னிறுத்தி வருகின்றது.இந்தச் செயல் முனைப்பின் ஓர் திருவுருவம் தான் வடக்கின் ஆளுநர். அவரது கருத்துக்கள் எப்போதும் சுடு நீரின் கதகதப்போடு கொதிக்கின்றன. தமிழனின் நியாயங்களை ரணிலின் பிரதிநிதியான அணிலாகக் கொறிக்கின்றன.

வடக்கில் தற்போது நிலை கொண்டுள்ள இராணுவம் போரில் ஈடுபடுபவர்கள் அல்லர். அவர்கள் ஒற்றுமைக்கான தூதுவர்கள் என குறைகளின் வெளியீடாக வந்துள்ள கூரே கூறுவது, தமிழன் வலிகளுக்கு வழி கூறுவதற்கானதல்ல. தீர்வைத் தருவதற்கானதுமல்ல.மாறாக அந்த மனிதர் கூறியது போல, ஒற்றுமையென்ற நிழலுருவோடு தமிழர் தாயகத்தில் நிஜ வடிவமெடுத்து தரித்து நிற்பதற்கானது.இதற்கும் அப்பால் வடக்கு மக்களுக்கு என்ன தேவை என்பதை பெற்றுக் கொடுப்பதே எங்கள் நோக்கம் என்பது காலாதி காலமாக அவர்கள் கட்டிப் புரண்டு வருகின்ற இன வாத கலவைகளின் தேக்கம் தான்.அதிலிருந்து நல்லதைப் பிரித்தெடுப்பதென்பது சாத்தியமா? தெரியவில்லை? ஆனால் பலதை அனுபவங்களின் வழி தெளிவுபடுத்துகின்றன.

இறந்த காலத்தில் இரண்டு பக்கமும் இழப்புக்கள் இருந்தன. இரத்தச் சிந்தல்கள் இருந்தன. அவற்றை மறப்போம்.கடந்த கால கோபங்களை, வைராக்கியங்களை மறப்போம் என்பது தமிழர்களின் அபிலாசைகள் என்ற உரிமையின் மீதான, இலட்சியத்தின் மீதான தவத்தை இடையே கலைப்பதாகவும்,அந்த நேர்த்தியான தவ நிலைகளின் போக்கில் இடை நிறுத்தப்பட்ட இடையூறுகளை மறைப்பதற் கான உருவகமாகவும் சிரிக்கின்றன. இல்லையில்லை, மீண்டும் சாந்தமாய் கொக்கரிக்கின்றன.கோடை வெப்பத்தின் குடுவையோடு கலவையாகி நெருப்பாய்ப் புகைய தொடங்கியுள்ளது.அன்பு செலுத்துகின்ற, சமாதானத்துக்கான,அபிவிருத்திக்கான இராணுவம் என்பதை இரக்க சுபாவம் கொண்ட தமிழனாய் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏன்..? எதற்கு? காரணங்கள் தேவையில்லை. கண் எதிரே அவலங்களை திரையிட்டுள்ளது.தாய்மைகளின் சிதைவு, உறவுகளின் சத்தம்,இரத்தங்களின் காய்தலின்றிய ஆன்ம உயிர்ப்பின் துடிதுடிப்பு,தியாகங்களின் திட்டமிட்ட உருமறைப்பு,சிறை வைப்பு,தாய் நிலத்தின் சூறையாடல்,நிஜ முகம், தொலைத்த முகாம் வாழ்வு என நீள்கிறது மீள்தலின்றி.எப்படித் திரை விலகும்!

> அனுபவம் என்பது தமிழருக்கு கற்றுத் தந்த பாடம் ஞாபகங்களை மறக்கவும் அந்த ஞாபகங்களின் வலி தந்தவனை மன்னிக்கவும் இடம்தரக் கூடாது என்பதே.ஏனெனில் நாங்கள் செயற்கைப் புயலால் அழிந்தவர்கள் அல்ல! தெரிந்து வீசிய இனவாதம் எனும் சர்வதேசம் கூட்டிணைந்த இயற்கைப் புயலால்!
> மறக்கவும் –மன்னிக்கவும் முடியுமா..??
> தவறு இழைத்தவனாய் உங்கள் மனச் சாட்சியை கேட்டுப்பாருங்கள் அரசின் பிரகிருதிகளே.....!

நல்லிணக்கம், இன சமத்துவம், அபிவிருத்தி, அரசமைப்பில் சீர்திருத்தம், தீர்வு தொடர்பில் பேசலாம் என்பதான வெற்று வார்த்தைகளின் வடிவமைப்பிலா? இல்லை தமிழர்களின் நியாயங்களைப் புரிந்து கொண்டு, செய்த தவறுகளை உணர்ந்து கொண்டு ஆத்மார்த்தமாக செயற்பட வேண்டும்.மீண்டும் மீண்டும் ஏறி மிதிக்கும் கால்களை உதறித் தள்ளி விட்டு நல்லாட்சியாக,நல்ல பாதங்களைக் கொண்டு தமிழர்களுக்கான தீர்வுகளை வழங்கிட நற்பயணம் மேற்கொள்ள வேண்டும். இதுவே தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பு.

வேண்டுதல்..அதைவிடுத்து மீண்டும் வல்லரசாகி, வல்லூறுகளின் குணத்தைக் காட்டினால். தணிந்த தியாகங்கள் மீளலாம். மிடுக்கோடு விடியலுக்கான வேட்கை தரலாம்.ஏனெனில் மாற்றம் ஒன்றே மாறாதது.

ஆக,அனுபவம் என்பது தமிழருக்கு கற்றுத் தந்த பாடம் ஞாபகங்களை மறக்கவும், அந்த ஞாபகங்களின் வலி தந்தவனை, மன்னிக்கவும் இடம்தரக் கூடாது என்பதே.ஏனெனில் நாங்கள் செயற்கைப் புயலால் அழிந்தவர்கள் அல்ல; தெரிந்து வீசிய இனவாதம் எனும் சர்வதேசம் கூட்டிணைந்த இயற்கைப் புயலால்!

மறக்கவும், மன்னிக்கவும் முடியுமா..??
தவறு இழைத்தவனாய் உங்கள் மனச் சாட்சியைக் கேட்டுப்பாருங்கள் அரசின் பிரகிருதிகளே.....!

# எவரையும் தப்புக் கணக்குப் போடாதீர்!

ஒரு தனிமனிதனுக்கு எதிராக, அவன் சார்ந்த சமூகத்தினர் எந்தவித முன்பின் யோசனையும் இன்றி அபாண்டமான அவன் மேல் பழி சுமத்துவது தற்காலத்தில் சாதாரண விடயமாகிப் போயுள்ளது. வீதிகளிலோ பொது இடங்களிலோ எதிர்பாராத விதமாக ஏற்படும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக ஒருவர் மீது உண்டாகும் தப்பான அபிப்பிராயம், தப்பாகப் புரிந்து கொள்ளல், சந்தேகம் என்பவற்றை மனதில் வளர்த்துக் கொண்டு, அவற்றைப் போக்கிக் கொள்வதற்குச் சரியான அணுகுமுறையான விசாரித்து அறிதல் இன்றி, ஒருதலைப் பட்சமாக ஒருவரைப் பிழையான ஆளாக முடிவுகட்டி அவர் மீது சேறு பூசுவது, அவதூறு செய்வது, அவமதிப்பது, அசிங்கப்படுத்துவது போன்ற செயல்கள் இன்றைய இளம் சமூகத்தினர் மத்தியில் மட்டுமன்றி வளர்ந்தோரிடமும் காணப்படும் கெட்ட வழக்கமாக ஆகியுள்ளது. ஒருவர் மீது என்ன வேண்டுமாணாலும் குறை சொல்லலாம் என்ற நிலையிலேயே இன்றைய சமூகம் உள்ளது. ஊர்வாய்கள் எல்லா வற்றையும் தான் கதைக்கும். ஆயினும் மற்றவர்கள் சொல்வதையெல்லாம் நம்புபவர்கள் சரியாகச் சிந்திக் கத் தெரியாதவர் களேயாவர்.

*எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு*

எவர் எதைச் சொன்னாலும் அது மெய்யானது தானா? சரியாக இருக்குமா? என்பதை அறிந்து செயற்படுவது தான் அறிவுடையார்க்கழகு.

சாதாரண கிராமியப் பேச்சு வழக்கில் உள்ள முதுமொழிகள் எல்லாமே எமது முன்னோரின் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களின் வெளிப்பாடுகளே என்பது எல்லோரும் அறிந்ததொன்றே.

சொல்லுவார் சொன்னாலும் கேட்பார்க்கு என்ன மதி?, "கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர விசாரித்தறிவதே மெய்"

"பனையின் கீழ் இருந்து பால் குடித்தாலும் கள் என்றே நினைப்பர்"

இந்த முதுமொழிகளை எமது வாழ்வில் ஏற்படும் சந்தேகத்துக்குரிய சந்தர்ப்பங்களில் நாம் ஞாபகப்படுத்திப் பார்க்க வேண்டும். ஆனால் கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்பது போன்றுதான் இன்றைய சமூகத்தவர்கள் உள்ளனர். சரியாகச் சிந்திக்கத் தெரியாமல் மற்றையோர் சொல்வதையும் செய்வதையும் பார்த்து கழுதை மயிர் பிடுங்கித் தீர்த்தம் ஆடியவன் கதையாக சமூகத்தவர்கள் நடந்து கொள்வது நல்ல கலாசாரப் பண்பாடுகளைப் பேணும் மக்களுக்கு அழகன்று.

எதையுமே சந்தேகக் கண்கொண்டு பார்த்து எதிர் மறையாகச் சிந்தித்து பிழையான முடிவுகளையே பலர் எடுக்கிறார்கள். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பவும் கூடாது. இருண்டதெல்லாம் பேயென்று வெருளவும் கூடாது. கறுப்புக் கண்ணாடி ஊடாகப் பார்த்தால் வெயில் கூடக் கறுப்பாகத்தான் தெரியும். இவ்வாறு ஒருவர் மேல் பிழையான எண்ணங்களை வளர்த்துப் பலரும் சேர்ந்து அதற்கு உருவேற்றி ஏற்றி, அவருக்குத் தேவையற்ற கரைச்சல்களைக் கொடுப்பது, சிறுசிறு விடயங்களை ஊதிப் பெருப்பித்துக் கதை பரப்புவது, அபாண்டமான பழிகளைச் சுமத்துவது என்பவை பக்தியோடு கோயில் கும்பிடுதல், விரதம் பிடித்தல் என்பவற்றையும் தவறாமல் செய்து கொண்டு செய்யும் பாவச் செயல்களேயன்றி வேறில்லை.

இவையெல்லாம் எம்மவர்க்குக் கைவந்த கலைகள் என்றுதான் சொல்ல வேண்டும். கெடுவான் கேடு நினைப்பான்

"மறந்தும் பிறன் கேடு சூழற்க, சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு"

மறந்தும் யார்க்கும் தீங்கு நினைத்தல் கூடாது. தீங்கு நினைத்தால் அல்லது செய்தால் அறம் அவனுக்குக் கேடு செய்யும்.

ஒரு விடயத்தைப் பலர் சொல்கிறார்கள் அல்லது செய்கிறார்கள் என்பதால் மட்டும் அது சரியென்று ஆகிவிடாது. 'பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே' என்பது சிந்திக்கத் தக்கது.

மந்தைகள் கூட்டத்துள் ஒரு புதிய மந்தை நுழைந்து விட்டால், ஏனைய மந்தைகள் அதை இடித்துத் தள்ளிவிடுவது போல, ஒருவரைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தெரியாத மனிதர்களும், அப்படியான குணம் கொண்டு விடுகிறார்கள். இந்த மனிதர்களை என்ன வென்று சொல்வது?

எனவே எல்லோரும் இவற்றைக் கவனத்தில் எடுத்து, சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலையும், தமது செயல்கள் பற்றிச் சுயமதிப்பீடு செய்யும் அறிவையும், நல்ல பண்புகளையும், எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்ற எண்ணத்தையும் வளர்த்துக் கொள்வார்களாக! எழுந்தமானமாக எவரைப் பற்றியும் தப்புக் கணக்குப் போடுதல் பிழையான விடயமேயாகும். யாவும் கடவுளிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் கடவுளின் தீர்ப்பு ஒன்று உண்டு.

– எஸ்.எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளைஞருக்கான சிறந்த நாடுகள் பட்டியலில் கனடா முதலிடத்தில்

ஒட்டாவா, மே 12
உலகில் இளைஞர்களுக்கான சிறந்த நாடுகளின் பட்டியல் வெளியாகியுள்ளது. இந்த பட்டியலில் கனடா முதலிடத்தைப் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டனில் இயங்கும் செய்தி நிறுவனம் ஒன்று உலக அறிக்கையின் அடிப்படையிலும், 18- 35 வயதுக்கிடைப்பட்டவர்களிடம் நடத்திய தரவு சேகரிப்பின் மூலமும் இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியல் வாழ்க்கைத் துணைத் தேர்வு, தனிப்பட்ட வாழ்வாதாரம் போன்ற பல கட்டங்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில், கனடா, ஜேர்மனி, பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் முறையே முதல் 5 இடங்களைப் பெற்றுள்ளன. 60 நாடுகள் இந்தப் பட்டியலில் இடம்பிடித்தன. இந்தியா 23 ஆவது இடத்திலும், இலங்கை 43 ஆவது இடத்திலும் உள்ளன.

நாட்டில் நிலவும் பொருளாதாரம், அரசியல், கலாசார உறுதித் தன்மையை பிரதான அடித்தளமாக வைத்து இந்தப் பட்டியல் உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(து-ரி4)

# தூக்கிலிடப்
# ஜமாத் கட்சித் த

## போர்க்குற்றம் புரிந்த குற்றச்சாட்டில் பங்களாதேஷ் உச்சநீதிமன்றம் தீர்ப்பு



டாக்கா, மே 12
ஜமாத்-இ-இஸ்லாமி கட்சியின் தலைவர் மொதியூர் ரஹ்மான் நிசாமிக்கு டாக்கா மத்தியச் சிறையில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானுடன் 1971ஆம் ஆண்டு நடைபெற்ற பங்களாதேஷ் விடுதலைக்கான போரின்போது அவர் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்தார் எனத் தீர்ப்பளித்து அவருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ள எதிர்க்கட்சிகளின் மூத்த தலைவர்களில் இவர் ஐந்தாவது தலைவராவார்.


இந்த வகையில் முன்னர் கட்சித் தலைவர்களுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்ட பிறகு வன்முறையுடன் கூடிய போராட்டங்கள் வெடித்தன.

தனது சாவுத் தண்டனை மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என அவர் இறுதியாகச் சமர்ப்பித்த மனுவை, கடந்த திங்கட்கிழமை பங்களாதேஷ் உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

அவருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் கடைசி முறையாக அவரது மனைவி உட்பட உறவினர்கள் அவரைச் சந்தித்தனர்.

(து-ரி4)

# ஞாயிற்றுத் தொகுதிக்கு அப்பால் 1,284 கோள்கள்



வொஷிங்டன், மே 12
ஞாயிற்றுத் தொகுதிக்கு வெளியே ஆயிரத்து 284 புதிய கோள்கள் இனம் காணப்பட்டுள்ளதாக நாஸா அறிவித்துள்ளது. கெப்லர் தொலை காட்டியினூடாக இந்த இனம் காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு தொகையான கோள்களை ஆராய்ந்தமை இதுவே முதல்முறை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான கண்டுபிடிப்பின் மூலம் கோளியல் பற்றிய பொறிமுறையை அறிய முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

பிரபஞ்சத்தில் எமது தேடல் தொடர்பாக நாம் எடுத்து வைத்த முதல் அடி இது எனவும், அவர்கள் குறிப் பிட்டுள்ளனர். இவ்வாறான கண்டுபிடிப்பின் மூலம் இன்னொரு பூமியைக் கண்டு பிடிப்பது சாத்தியம் என நாஸாவின் மூத்த விஞ்ஞானி எலான் ஸ்ரொ பான தெரிவித்தனர்.

கெப்லர் தொலைகாட்டி கடந்த 2009 ஆம் ஆண்டு [illegible]யில் செலுத்தப்பட்டது. அது இதுவரை [illegible]ர்களை இனம் கண்டதுடன், [illegible]ப்பை ஆராய்ந்து வருகிறது. கிட்டத்தட்ட 5 ஆயிரம் கோள்கள் இனம் காணப்பட்டதுடன், 3 ஆயிரத்து 200 கோள்களின் விவரம் திரட்டப்பட்டன. மேலும், 2 ஆயிரத்து 325 கோள்கள் கண்டறியப்பட்டன. புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஆயிரத்து 284 கோள்களில் 550 கோள்கள் பூமியைப் போன்று பாறை அமைப்பை உடையனவாகும். இவற்றின் மேற்பரப்ப வெப்ப நிலை நீர் திரவ நிலையில் இருக்கக் கூடியதாகும்.

இதற்கிடையில், கெப்லர் தொலைநோக்கி கடந்த மாதமும் பழுது பார்க்கப்பட்டது. முன்னதாக 2013 ஆம் ஆண்டு அதன் செயற்பாட்டுச் சுழலிகள் சேதமடைந்தன. நாஸா அதனைச் சரி செய்து மீட்டது. கடந்த மாதம் எட்டாம் திகதி எரிபொருள் செறிவு மாற்றம் காரணமாக செயற்றிறன் பாதிப்படைந்தது. கடந்த 22 ஆம் திகதி நாஸா விஞ்ஞானிகள் பூமியில் இருந்து தரவுகளை மீட்டனர். தொடர்ந்தும் சூரிய குடும்பத்துக்கு அப்பால் உள்ள நட்சத்திரங்கள், பிரபஞ்ச அளவை அறிவதற்கு இந்தத் தொலை [illegible] குறிப்பிடத்தக்கது.

(து-ரி4)

## சர்வாதிகாரி ஹிட்லரின் சிலை 345 கோடி ரூபாவுக்கு ஏலம்

அமெரிக்காவில் சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லரின் அபூர்வ மெழுகுச் சிலை ஒன்று ரூபா 345 கோடிக்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

2 ஆம் உலகப்போருக்கு முன்பு ஜேர்மனியில் சர்வாதிகார ஆட்சி நடத்தியவர் அடோல்ப் ஹிட்லர். 1934 ஆம் ஆண்டுமுதல்1945ஆம்ஆண்டுவரை இனவெறி ஆட்சி நடத்தி லட்சக்கணக்கான யூதர்களை கொன்று குவித்த வர். 2-ஆம் உலகப்போரின் போது வல்லரசு நாடுகளுக்கு சவால் விடுத்து மிரட்டியவர் ஹிட்லர்.

ஹிட்லர் மண்டியிட்டவாறு கைகளைப் பிணைத்துக்கொண்டு நிற்கும் மெழுகிலான சிலையொன்றை அமெரிக்காவின் கிரிஸ்டி நிறுவனம் பாதுகாத்து வந்தது. ஹிம் என்று பெயரிட்டு அழைக்கப்பட்ட இந்த மெழுகுச் சிலை நேற்று ஏலத்துக்கு வந்தது.

பொதுவாக 10 மில்லியின் டொலர் முதல் 15 மில்லியன் டொலர் வரை ஹிட்லரின் சிலை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், ஹிட்லரின் அந்தச் சிலை ஏலத்தில், கடும் போட்டி காரணமாக ஏலத்தொகை உயர்ந்துகொண்டே சென்றது. இறுதியில் ஹிட்லரின் ஹிம் சிலை 17.2 மில்லியன் டொலருக்கு (345 கோடி இலங்கை ரூபா) ஏலம் போனது.

இத்தாலியைச் சேர்ந்த கட்டேலன் என்ற சிற்பி கடந்த 2001 ஆம் ஆண்டு உருவாக்கிய இந்த அபூர்வச் சிலையானது. ஹிட்லரை ஒரு சிறுவனைப் போலவும் முழங்காலிட்டு மண்டியிட்டு நிற்பது போலவும் உருவாக்கப்பட்டுள்ளது.

ஹிட்லரின் அபூர்வ சிலையுடன் வேறு 30 கலைப் படைப்புக்களையும் கிரிஸ்டி நிறுவனம் நேற்று ஏலத்துக்கு வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

## ஜேர்மனி ர
## கத்திக்

பேர்ளின், மே 12
ஜேர்மனி ரயில் நிலையத்தில் இளைஞ
செவ்வாய்க்கிழமை நடத்திய கத்திச்
தாக்குதலில் ஒருவர் உயரிழந்தார். 3
மடைந்தனர்.
இது குறித்து பொலிஸார் கூறியதாவ
மியூனிக் நகரையடுத்த கிராபிங் ந
நிலையத்தில் இருந்த பொதுமக்கள்
வயது இளைஞர் ஒருவர் கத்தியால் குத்




வட கொரியாவில் ஆளும் கட்சி மாநாடு
ட்டில் 3 ஆயிரத்து 467 பிரதிநிதிகள் கல
கிறார். அவரது ஆட்சித் திறனைப் பராட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...பட்டார்
# ...தலைவர்

# பாக். முன்னாள் பிரதமரின் மகன் ஹைதர் கடத்தப்பட்டு 3 ஆண்டுகளின் பின் மீட்பு

இஸ்லாமாபாத், மே 12
பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் அந்நாட்டு பிரதமராக பதவி வகித்த யூசுப் ரசா கிலானியின் மகன் அலி ஹைதர் கிலானி.
கடந்த 2013 ஆம் ஆண்டு மே மாதம் நடந்த பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் முல்தான் தொகுதியில் அலி ஹைதர் போட்டியிட்டார். இந்த நிலையில் தேர்தலுக்குச் சில நாள்களுக்கு முன்னர் முல்தான் நகரில் இருந்து அவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். பாதுகாவலர்கள் இருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு அலி ஹைதரைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.
பாகிஸ்தான் சிறையில் இருக்கும் அல்–குவைதா தீவிரவாதிகள் பலரை விடுவித்தால் மட்டுமே அலி ஹைதரை விடுதலை செய்ய முடியும் என தலிபான் அமைப்பினர் நிபந்தனை விதித்திருந்ததாக யூசுப் ரசா கிலானி கடந்த ஆண்டு தெரிவித்தார்.
இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் கஸ்னி மாகாணத்தில் அந்நாட்டு இராணுவமும் அமெரிக்கப் படையினரும் இணைந்து மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் அலி ஹைதர் நேற்று மீட்கப்பட்டுள்ளார். அவரை பாகிஸ்தானுக்கு அழைத்து வரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந் நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.
(த)



# தீவிரவாதத்துக்கு எதிராக நேர்மையான ஒத்துழைப்பு
## ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தல்

ஜெனிவா, மே 12
தீவிரவாதத்துக்கு எதிராக நேர்மையான உலகளாவிய ஒத்துழைப்புத் தேவை என ஐ.நாவில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.
ஐ.நா. தீவிரவாத எதிர்ப்பு மைய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி சயீத் அக்பருதீன் இது தொடர்பாகப் பேசியதாவது:-
தீவிரவாதத்தால் எமது நாடுகள் சந்தித்து வரும் சவாலின் அளவு அச்சுறுத்தக் கூடியதாக உள்ளது. உலகம் முழுவதும் தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில் எந்தவொரு நாடும் இதிலிருந்து தப்பவில்லை.
பல பத்தாண்டுகளாக தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடு என்ற வகையில், இதுதொடர்பாக விழிப்புணர்வை மட்டும் இந்தியா பெற்றிருக்கவில்லை. தீவிரவாதத்தை எதிர்க்க ஒருங்கிணைந்த சர்வதேச ஒத்துழைப்பும் தேவையாக இருக்கிறது.
நிஜமான, பயனளிக்கக்கூடிய சர்வதேச ஒத்துழைப்புதான் இந்தச் சவாலை எதிர்கொள்ளத் தேவையானதாக இருக்கிறது.
இதற்கான வழிவகையை ஐ.நா. மேற்கொண்டு வந்தாலும், இன்னமும் தேவைப்படுவது ஏராளம். தீவிரவாத அமைப்புகளுக்கு கிடைக்கும் நிதியுதவியைத் தடுப்பது இதில் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.
தீவிரவாதப் போராளிகள் 100 க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து ஒன்று சேர்ந்துள்ளனர். பரந்துபட்ட அளவிலான ஆபத்தை எதிர்கொள்ள ஐ.நா. தீவிரவாத எதிர்ப்பு மையம் கூடுதலாக செயலாற்ற வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.
(கு)

# ஹிரோஷிமா செல்ல பராக் ஒபாமா திட்டம்

வொஷிங்டன், மே 12
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜப்பானின் ஹிரோஷிமா பகுதிக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார் என நேற்று முன்தினம் வெள்ளை மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.
அணு ஆயுதப் பாவனையை நிறுத்தும் ஒபாமாவின் திட்டத்தில் மைல்கல்லான பயணம் இதுவாகும். முன்னதாக இரண்டாம் உலகப் போரில் அணு ஆயுதத்தால் தகர்க்கப்பட்ட ஹிரோ ஷிமா நகரைப் பார்வையிட ஒபாமா தனது விருப்பத்தைத் தெரிவித்தார். இதன் அடிப்படையில் இந்தப் பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது. ஹிரோஷிமா பகுதியைப் பார்வையிட்ட முதல் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எனும் வரலாற்றுப் பதிவும் இதனால் நிகழும்.
இந்தச் சுற்றுப்பயணம் அமெரிக்காவால் ஜப்பானில் ஏற்படுத்தப்பட்ட சேதத்துக்கு மன்னிப்புக் கேட்கும் பொருட்டாக அமையுமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு, வெள்ளை மாளிகை, அவ்வாறு அல்ல எனப் பதில் அளித்துள்ளது.
அமெரிக்கா தனது தாக்குதலுக்காக மன்னிப்புக் கேட்கப் போவதில்லை. மாறாக அணு ஆயுதத்தால் ஏற்பட்ட விளைவுளைக் பார்வையிடவும், தொடர்ந்து அணு ஆயுதப் பாவனையைத் தடை செய்வதற்கான காரணியாகவும் இந்தப் பயணம் அமையும் எனப் பதிலளிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

# ...ரயில் நிலையத்தில் ...தினால் ஒருவர் சாவு

...ளுஹொருவர் ...திக் குத்துத் ... 3 பேர் காய... ...ாவது: ... நகர ரயில் ...ள் மீது 27 ...த்தித் தாக்குதல் நடத்தினார். இதில் நான்கு பேர் காயமடைந்தனர்.
இந்தத் தாக்குதலுக்கு மதவாதம் காரணமாக இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தாக்குதலில் காயமடைந்த நால்வரில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக அரசு வழக்குரைஞர் அலுவலகம் தெரிவித்தது.
(த)

# பக்தாத்தில் கார்க்குண்டு தாக்குதலில் 64 பேர் சாவு

பக்தாத், மே 12
ஈராக்கின் பக்தாத் பகுதியில் சடார் நகரில் நேற்று இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதலில் 64 பேர் கொல்லப்பட்டதுடன், 40 பேர் காயமடைந்துள்ளனர் என ஈராக் மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சந்தைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது. ஐ.எஸ். அமைப்புக்கும், இராணுவத்தினருக் கும் இடையில் போர் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)



...நாடு 3 தசாப்தங்களுக்குப் பின்னர் நடைபெற்றது. 4 நாள்களாக நடைபெற்ற இந்த மாநா... ...கலந்து கொண்டனர். 2011 ஆம் ஆண்டிலிருந்து கிம்–யோங்– உன் ஆட்சிபுரிந்து வரு... ...ராட்டும் வகையில் பிரமாண்டமான அணிவகுப்பு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. (த-ரி4)

# கடல் மட்ட உயர்வினால் 5 தீவுகள் முற்றாக மூழ்கின

சிட்னி, மே 12
ஆஸ்திரேலியக் கண்டத்தின் அருகாமையில் உள்ள சொலமன் தீவுக் கூட்டத்தில் 5 தீவுகள் கடலில் மூழ்கியுள்ளன என ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 70 ஆண்டுகளில் இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது. 5 தீவுகள் முற்றுமுழுதாகக் கடலில் மூழ்கியுள்ளன. இதனைத் தவிர வேறு 6 தீவுகளின் நிலப்பரப்புகள் 20 சதவீதம் கடலினுள் மூழ்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதனால் அப்பகுதி மக்களை வீடுகளைவிட்டு வெளியேறும்படி அதிகாரிகள் பணித்துள்ளனர். குறித்ததீவுகளில் 5, 6 தலைமுறைகளைக் கழித்த மக்கள், வேறு எரிமலைத் தீவுகளுக்குக் குடிபெயரும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்த மக்களின் வாழ்வாதாரம் மீன்பிடி ஆகும்.
பப்புவா, நியூகினியா தீவுகளின் கிழக்குப் பகுதியில், சொலமன் தீவுகள் காணப்படுகின்றன. கிட்டத்தட்ட 900 தீவுகள் அப்பகுதியில் உள்ளன. 1947 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரை, 33 தீவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் செயற்கைக்கோள் புகைப்படத்தில் அவதானிக்கப்பட்டுள்ளன. கடந்த 20 ஆண்டுகளில் கடல் மட்டம் 7 மில்லி மீற்றர் தொடக்கம் 10 மில்லி மீற்றர் வரை உயர்ந்துள்ளது. இந்த அதிகரிப்பு சராசரி நீர் மட்ட உயர்வின் 3 மடங்கு ஆகும்.
இவ்வாறான நீர் மட்ட உயர்வினால் வேறு தீவுகளுக்கு இடம்பெயரும் மக்களின் சுகாதாரம், கல்வி, வாழ்க்கை தரம், மின்சார வசதிகள் என்பவற்றை வழங்குவது சவாலான விடயமாகும். இவற்றுக்கு பல நூறு மில்லியன் தொகைப் பணம் செலவாகும் என்பதுடன் சர்வதேச நாடுகளின் உதவியில் தங்கி வாழ வேண்டிய சூழல் ஏற்படும் என சுற்றுப்புறச் சூழல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
(த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பொதுப் பலன்கள்

நட்சத்திரப் பொதுப்பலன்கள் என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் புனர்பூசம், பூசம் நட்சத்திரங்களது பலன்களைப் பார்த்தோம். இன்று ஆயிலியம், மகம் நட்சத்திரங்களது பலன்களைப் பற்றிப் பார்ப்போம்.

## ஆயிலியம்

ஆயிலியம் நட்சத்திரத்தில் பிறந்ததால் மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் கூடியவராய் இருக்கும் நீங்கள் அழகாகப் பேசுவீர்கள். சில சமயங்களில் உங்களுடைய சாதுரியமான பேச்சால் மற்றவர்களிடம் உங்களுக்கான மதிப்பைப் பெற்று விடுவீர்கள். பொருள் சேமிப்பை விரும்புவீர்கள். எதிர்காலத்துக்கான திட்டங்களைத் தெளிவாக வரையறுத்துக் கொண்டிருப்பீர்கள். உங்களின் முயற்சி வெற்றியடையக் கடுமையான உழைப்பை வெளிப்படுத்தத் தயங்கமாட்டீர்கள்.

உங்களிடம் ஒப்படைக்கப்படும் செயல்களை முழுமூச்சுடன் செயல்பட்டு செய்து முடிப்பீர்கள். பகையை விரும்புவர், பெற்றோருக்கு விருப்பம் உடையவர். மனதில் துக்கம் உடையவர், காட்டில் திரிபவர், சிற்றுண்டியை விரும்புபவர், புத்திமான், வஞ்சகம் இல்லாமல் எவரையும் ஏளனம் செய்பவர், சுகம் உடையவர், தன்னை விட வலிமையான எவரையும் கண்டு அஞ்சாதவர், விழியும் புருவமும் உயர்ந்து ஒதுங்கி இருப்பவர். கோபமும் வேகமும் கொண்ட இவர்கள் செல்வந்தர்களாகஇருப்பர்.சிவந்தமேனி, அகலமான கண்களைப் பெற்றிருப்பர். நியாய தர்மங்களை மற்றவர்களுக்குப் போதிப்பர். மந்தகுணமும் இருக்கும். நகை அணிதல், பணம் சம்பாதிப்பதில் அலாதிப்பிரியம் இருக்கும். செலவு செய்வதில் கெட்டிக்காரர்களாகத் திகழ்வர்.

1.ஆயிலியம் முதல் பாதத்தில் பிறந்தவர் மிகுந்த சொல்வன்மை உள்ளவர். பெண் போன்ற வடிவம் உடையவர். நல்ல அறிவுடையவர், மகிழ்ச்சியுடன் இருக்கும் தன்மைஉடையவர், பலவிதமான செயல்களைச் செய்பவர்.

2. ஆயிலியம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் அயலான் இடும் வேலைகளைச் செய்பவர், அழகுடையவர், ஏக்கமுடையவர், ஆசாரமுடையவர், தீயவழியில் நடப்பவர், துர்ப்புத்தி உடையவர்.

3. ஆயிலியம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவர் முன்கோபி, ஞானி, தாமதகுணமுள்ளவர், நலமற்ற சொற்களைப் பேசுபவர், மிகவும் நிபுணர்.

4. ஆயிலியம் நான்காம் பாதத்தில் பிறந்தவர் பொன்னை அழிப்பவர், கோபக்காரர், தீயவனுக்கு நல்லவர்.

## மகம்

மகம் நட்சத்திரத்தில் பிறந்ததால் அனைத்துச் செயல்களும் முழுமையாக முடிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை வலுவாக கொண்டவராய் இருப்பீர்கள். உங்களிடம் ஒப்படைக்கப்படும் எந்தக் காரியத்தையும் முழுமையாகச் செய்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தை மிகவும் ஆர்வமாகப் பேணிக்காப்பீர்கள். எந்த சூழ்நிலைகளையும் சமாளிக்ககூடிய மனநிலையை வளர்த்துக் கொள்ள விரும்புவீர்கள். மற்றவர்களிடம் உண்மையான உழைப்பையும் நேர்மையான செயல்களையும் எதிர்பார்ப்பீர்கள். உங்களது நேர்மையான செயற்பாடுகளால் மற்றவர்களிடம் உங்களுக்கான மதிப்பை அதிகரித்துக் கொள்வீர்கள். பல திசைகளில் சுற்றுவதில் விருப்பம் உடையவர். அழகர், இசைப்புலவர், நீராடுவதில் விருப்பம் உடையவர், வாசனைப் பொருள்களில் விருப்பம் உடையவர், செல்வம் உடையவர், வலது பக்கத்தில் மறு உடையவர், நியாயஸ்தர், அற்பநித்திரை உடையவர். ஆராய்ச்சி மனப்பான்மை உள்ளவர்கள், கல்வி பயில்வதில் ஆர்வம் கொண்டிருப்பர். தருமம் செய்வதில் வல்லவர்கள். மனத்தூய்மை, நேர்மை மிக்கவர்கள். பிறரைக் கௌரவமாக நடத்துவர். மதுரமான மொழி பேசுவதோடு பேச்சு சாதுர்யமும் பெற்றிருப்பர்.

1. மகம் முதல் பாதத்தில் பிறந்தவர் மற்றவர்களுக்குப் பயம் அளிக்கும் சிவந்த கண்களை உடையவர், சிவந்த நிறம் உடையவர், சிறந்த மதியூகி, சிவந்த ரோமத்தை உடையவர்.


2. மகம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் நல்ல அறிவு இல்லாதவர், குற்றம் உடையவர். செலவழிப்பதில் விருப்பம் உள்ளவர்.

3. மகம் மூன்றாம் பாதத்தில் பிறந்தவர் பலசாலி, நோய்கள் உள்ளவர். சாது, கடின சொற்களைப் பேசுபவர், பரிசுத்தமானவர், பேராசை உடையவர்.

4. மகம் நான்காம் பாதத்தில் பிறந்தவர் ஒழுக்கமுடையவர், பெண்கள் பேச்சைக் கேட்பவர், சிரங்கும் வேறு ரோகங்களும் உள்ளவர். இனிய சொற்களைப் பேசுபவர்.

(தொடரும்)





பாவட்டைக் காயை சுண்டைக்காய் போலக் குழம்புகளில் சேர்த்து உண்டு வர வாத, கப நோய்கள் விரைவில் குணமாகும்.



# பாவட்டையின் பயன்கள்

அ.அஜித் சஞ்சீவ்

பாவட்டை எப்போதும் பச்சையாக இருக்கும் ஒரு புதராகும். இது வீடு கள் அமைந்துள்ள சகல இடங்களிலும் காடுகளிலும் தானாகவே வளர்கிறது. மெல்லிய காம்புள்ள இலைகளை எதிரடுக்கில் கொண்ட குறுஞ்செடிப் புதரான இது, கொத்தான வெண்ணிற மலர்களை உச்சியில் கொண்டது. இது கார்த்திகை, மார்கழி மாதங்களில் பூக்கும். இது இரண்டு அடி முதல் நான்கு அடி உயரம் வரை வளரக்கூடியது. இலை 615 சென்ரி மீற்றர் நீளம் இருக்கும். இதன் வெண்மையான பூக்கள் பூச்சிகளைக் கவரும். பச்சையானகாய்கள் முதிர்ந்து கறுப்பு நிறமாக உருண்டையாக இருக்கும். இது ஆறு மில்லிமீற்றர் விட்டத்தைக் கொண்டது. ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் இது அதிகமாகக் காணப்படும். விதை மூலம் இனப்பெருக்கம் இடம்பெறுகிறது.

பாவட்டையின் வேர் அல்லது இலை, கொன்றை, சிற்றாகுட்டி , வேலிப் பருத்தி இவற்றின் வேர், மிளகு, ஓமம் வகைக்கு 10 கிராம் இடித்து நான்கு லீற்றர் நீர் விட்டு அரை லீற்றராகக் காய்ச்சி வடித்து, வேளைக்கு 30 மில்லிலீற்றராகத் தினம் 3 வேளை கொடுத்து வர வாதசுரம் போகும்.

பாவட்டை வேர், பூலாப்பூ சமனளவு அரைத்துக் கனமாகப் பூச அரையாப்புக் கட்டிகள் கரையும். பாவட்டைக் காயை சுண்டைக்காய் போலக் குழம்புகளில் சேர்த்து உண்டு வர வாத, கப நோய்கள் விரைவில் குணமாகும். பாவட்டை இலையை வதக்கி வாத வீக்கம், வலி இவற்றுக்கு இளஞ்சூட்டில் வைத்துக் கட்ட அந்த நோய்கள் குணமாகும். பாவட்டம் காய்க்கு வாதசுரம், அரோசகம், சீதக்கடுப்பு, பித்தாதிசுரம், சிரேஷ்ம், தோஷம் நீங்கும்.

இதனை வாத சுரங் களுக்குச் சித்தப் படுத்தும் படியாக சிறிது சேர்த்துப் பயன்படுத்தலாம். மேலும் பச்சைச் சுண்டைக்காயை எப்படிக் குழம்புகளில் உபயோகப் படுத்துகிறார்களோ, அப்படியே இதனையும் உபயோகிக்கலாம். இதனால் கப சம்பந்தமான ரோகங்கள், வாத சம்பந்தமான ரோகங்கள் விரைவில் குணமடையும். பாவட்டை இலையால் சிலேஷ்ம் வாதம்,வாதகப தோஷம், ஆயாசம் தாபசுரம், திரிதோஷம் ஆகியவை குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காசி நோக்கி ஒரு பயணம்

## அனுபவப் பகிர்வு

லிங்கபுத்ரன்

"புண்ணியம் தேடிக் காசிக்குப் போவார்....." காசி படப் பாடல் வரிகளை நினைத்து நினைத்து காசியில் அப்படி என்னதான் இருக்கிறது, பார்ப்பதற்காயினும் ஒரு தடவை சந்தர்ப்பம் வாய்க்காதா? என்று ஏங்கிய பலருள் நானும் ஒருவன்.

நான் ஒரு ஆத்திகனா? நாத்திகனா? என்ற கேள்விக்கெல்லாம் அப்பாற்பட்டு, காசிக்கு ஒருமுறையாவது சென்று வந்துவிட வேண்டும் என்ற உந்துதல் கடந்த ஓரிரண்டு மாதங்களுக்கு முன் என்னில் பற்றிக் கொண்டது. இத்தனைக்கும் நான் ஒன்றும் சிவனோடு ஒன்றிய பக்தன் என்றில்லை - ஆனால் கடவுளே இல்லை என்று சொல்லு கின்ற நாத்திகனுமில்லை. கோயிலைக் கண்டால் கையெடுத்துக் கும்பிடுவேன் அவ்வளவு தான்.

### அவனருள் கூடுதல்

நண்பனொருவரின் அழைப்பின் பேரில் கீரிமலை தீர்த்தக் கரையில் நீராடி விட்டு நகுலேஸ்வரத்துக்கு அருகில் இருக்கின்ற காசி விஸ்வலிங்க ஆலயத்தில் சற்றுநேரம் இளைப்பாறியபோது, அவ்வாலயத்தைப் பற்றியும் அங்கு வைக்கப்பட்டிருக்கும் 108 லிங்கங்கள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம்.

அங்கிருக்கும் லிங்கங்கள் அனைத்தும் கங்கையிலிருந்து தான்தோன்றிகளாகப் பெறப்பட்டவை என்ற வரலாறும், கங்கையின் பெருமைகளும் காசியின் மகிமைகளும் அந்த உரையாடலின் ஊடே பாய்ந்தன. காசிக்குப் போகவேண்டும் என்ற உந்துதல் அதிகமாகியது.

இளைப்பாறலைத் தொடர்ந்து கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய பூஜை வழிபாடுகளைக் கண்டு கழித்தபோது காசிக்குச் செல்வதற்கு அருள்பாலிக்குமாறு என்னையும் அறியாமல் இறையருள் இறைஞ்சி நின்றது மனம். ஆலயத்தை விட்டு வெளியில் வந்து, கூடவே வந்த நண்பரிடம் என் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகிறேன். என்ன ஆச்சரியம்? இரண்டு பேரது மன நிலையும் ஒருமித்ததாக இருந்தது.

நாங்கள் நினைப்பதில் என்ன இருக்கிறது. திருவருள் கை கூட வேண்டுமே? கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்தாலும் தடைகள் வருமேயன்றி பயணம் எளிதில் கைகூடாது என்று பொதுவான கருத்துண்டு என்று நண்பர் சொன்னாலும், முயற்சிப்போம் என்ற முடிவோடு வீடு வந்து சேர்கிறோம்.

வீட்டில், உற்றார், சுற்றத்தார் சிலரிடமும் விடயத்தைச் சொல்ல மனங்கோணும் வகையில் சிலர் பரிகசிக்கிறார்கள். இந்த வயதில் இது தேவை தானா? அது பிதிர்க்கடன் செய்யுமிடம். அங்கெல்லாம் சும்மா போகக்கூடாது என்று மனதை மாற்றும் வகையில் கருத்துக்கள் வந்தாலும் காசிக்குப் போவதில் மாற்றம் இல்லை என்ற முடிவோடு அன்றைய இரவு கழிகிறது.



### முதலாவது தடை: பொய்யே கைகொடுக்கும்

மறுநாள் விடிந்ததும் இந்திய நுழைவிசைவுக்காக (விசா) விண்ணப்பப் படிவத்தை இணையத்தில் நிரப்பி நானும் நண்பருமாக விண்ணப்பங்களை கையளிக்கும் இடத்துக்குச் சென்று, வரிசையில் காத்திருந்து அவற்றைச் சமர்ப்பித்தபோது எமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இது என்ன தலையிடி? புண்ணியம் தேடிப்போவதற்கு எங்களுக்கு அருகதை இல்லையா? என்று யோசித்த வேளையில் அங்கிருந்த அதிகாரி விண்ணப்பப்படிவத்தில் யாத்திரை செல்வதாகக் குறிப்பிடாமல் சுற்றுலா என்று குறிப்பிட்டுப் புதிய விண்ணப்பப் படிவத்தைக் கொண்டு வருமாறு அறிவுறுத்தினார். இதென்னடா சோதனை, ஆரம்பமே பொய்.

இணையத்தில் விண்ணப்பிக்கும் போது தெரிவு செய்யக்கூடிய நுழைவிசைவு வகைகளுள் யாத்திரிகர் என்பதும் தெரிவு செய்யப்படக் கூடியதாக இருந்ததனால் அதைத் தெரிவு செய்திருந்தோம். நாங்கள் போவதற்கான மிகச் சரியான காரணமும் அதுவாகத்தான் இருந்தது. ஆனால், எங்கள் வயதும் தோற்றமும் அதிகாரிகளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தினவோ என்னவோ நாங்கள் யாத்திரை போகிறோம் என்பதை ஏற்க அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

ஆனால் குறிப்பிட்ட அதிகாரி அறிவுறுத்தியதன் பேரில் சுற்றுலாவுக்குப் போகிறோம் என்று பொய் சொன்னபோது ஏற்றுக்கொண்டு உடனேயே நுழைவிசைவு கொடுத்து விட்டார்கள். என்ன புண்ணியம் செய்தோமடா இந்த வையகத்தில் பிறக்க....!

> "இது என்ன தலையிடி? புண்ணியம் தேடிப் போவதற்கு எங்களுக்கு அருகதை இல்லையா? என்று யோசித்த வேளையில் அங்கிருந்த அதிகாரி விண்ணப்பப் படிவத்தில் யாத்திரை செல்வதாகக் குறிப்பிடாமல் சுற்றுலா என்று குறிப்பிட்டுப் புதிய விண்ணப்பப் படிவத்தைக் கொண்டு வருமாறு அறிவுறுத்தினார். இதென்னடா சோதனை, ஆரம்பமே பொய்.

### குறைந்த நாள்களில் பயணத்தை திட்டமிடல்

நுழைவு அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னரும் கூட எனக்கு இந்தப் புண்ணிய பயணம் கைகூடும் என்ற நம்பிக்கை இருக்கவில்லை. நீண்ட நாள்கள், தொலை தூரப் பயணம். கையில் வேறு பணப் பற்றாக்குறை. என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கையில், கை மாற்றாக பயணத்துக்குத் தேவையான பணம் கிடைத்தது. கடவுள் இருக்கத்தான் செய்கிறார் என்று நம்பத் தலைப்பட்டேன். பணம் கிடைத்தமை நல்லதொரு சகுனம் என்று எடுத்துக் கொண்டு பயணத்தை ஆரம் பிப்பதற்கான நாளைக் குறித்தேன்.

அலுவலகத்தில் கிடைத்த ஒரு சில நாள் வெளிநாட்டு விடுமுறையோடு போய்வருவதற்குச் சிறந்த மார்க்கம் விமானப் பயணமே என்று முடிவு செய்து பயணஒழுங்குகளைச் செய்யத் தொடங்கினோம். ஏனெனில் இலங்கையில் இருந்து விமானம் மூலம் சென்னைக்குச் சென்று அங்கிருந்து புகையிரதத் தில் வாரணாசி (காசி)க்குப் போவது செலவு குறைந்த மார்க்கம் எனினும், அதிக நாள்கள் தேவைப்படும்.

முதலில் புகையிரதத்தில் செல்வது மட்டும் தான் காசிக்குப் போவதற்கான வழி என்று அறிந்திருந்தோம். அதன் பின் காசிப் பயணம் பற்றி இணையத்தில் தேடிய போது விமான மார்க்கம் இருப்பதும் தெரியவந்தது. எனவே சென்னை - டெல்லி - வரணாசி விமான மார்க்கமே பொருத்தமானதொன்றாகப் பட்டது. இருப்பினும் இணையத்தில் உலவித்தேடி பொருத்தமானதொரு பயணப் பொதியைத் தெரிவு செய்து கொண்டோம்.

தெரிவு செய்யப்பட்ட பயணப் பொதியின் படி கொழும்பிலிருந்து சென்னைக்குச் சென்று, சென்னையில் இருந்து மும்பாய் வழியாக வாரணாசியைச் சென்றடைவதும், வரும்போது வரணாசியிலிருந்து டெல்லிக்குச் சென்று அங்கிருந்து சென்னை வழியாகக் கொழும்புக்கு வருவதும் என்று முடிவானது. மொத்தமாக ஐந்து நாள்கள் பயணத்துக்கு ஒதுக்கியிருந்தோம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு முயற்சி...!



கோடைக்காலத்தில் ஒருநாள் அந்தச்சிறு நகரத்தின் மேயர், சிறுவனொருவன், மிகப்பெரிய, மிகவும் அழகான காற்றாடி ஒன்றை பறக்க விடுவதைக் கண்டார். அவர் பார்த்ததிலேயே மிகவும் அழகான காற்றாடி அது. மிகவும் உயரத்தில், சீராகப் பறந்தது. அது பக்கத்து நகரத்தில் இருப்பவர்களுக்குக் கூட தெரியத்தக்க வகையில் உயரமாகப் பறந்தது. பெரும் சிறப்புகள் இல்லாத அந்தச் சிறு நகரத்தில், அந்த அழகான காற்றாடிக்கு நகரத்தின் சாவி எனும் பட்டத்தை வழங்க விரும்பினார் மேயர்.

இந்தக் காற்றாடி பறந்ததற்கு யார் பொறுப்பு? எனக் கேட்டார் மேயர்.

நான் தான் என்றான் அந்தச் சிறுவன். நான் என் கைகளாலேயே இந்தக் காற்றாடியை உருவாக்கினேன். நானே அதில் அழகான படங் களை வரைந்து அழகான காகிதத் துண்டுகளால் அதை உருவாக்கினேன். நானே அதைப் பறக்க வைத்தேன் என்றான் அவன்.

நான் தான் காற்றாடி பறந்ததற்கு பொறுப்பு என்றது காற்று. என்னுடைய ஓட்டமே காற்றாடியை சீராகவும் சரியான திசையிலும் பறக்கச் செய்தது. நான் மட்டும் அதை நகர்த்தாவிட்டால் அது பறந்திருக்கவே முடியாது. எனவே நானே அதை பறக்க வைத்தேன் என்றது அது.

இல்லை நான் தான் காற்றாடி பறந்ததற்கு பொறுப்பு என்றது காற்றாடியின் வால். நான்தான் காற்றாடியை நகர்த்தவும் காற்றில் அது நிலையாகப் பறக்கவும் காரணம். நானில்லா விட்டால் காற்றாடி கட்டுப்பாடில்லாமல் சுற்றிச் சுற்றி தரையில் விழுந்திருக்கும் அதை அந்தப் பையனால் கூட காப்பாற்றியிருக்க முடியாது. எனவே நானே அதைப் பறக்க வைத்தேன் என்றது அது.

இப்போது, உங்களைப் பொறுத்தவரை யார் உண்மையில் காற்றாடி பறக்கக் காரணமானவர்கள்?

பல சமயங்களில் மக்கள் தங்கள் இலக்குகளை அடைவதில் மற்றவர்களின் பங்கு இருப்பதை மறந்து விடுகின்றனர். எல்லாம் தங்களால் மட்டுமே நடந்ததாக நினைக்கின்றனர். மற்றவர்கள் இல்லாமல் அந்த வேலை முழுமை பெற்றிருக்காது. ஒவ்வொருவருமே அவ்வேலைக்கு முக்கியம் என உணருவதில்லை. உண்மையில் தனியாகச் செய்யப்படும் வேலையை விட குழுவாகச் செய்யப்படும் வேலையே சிறப்பானது. ஏனெனில் கூட்டு முயற்சியின் பயன் அளப்பரியது. குழுவிலிருப்பவர்களுடன் வேலை செய்யும்போது எமக்குச் சகிப்புத் தன்மை, பல விதமான சூழ்நிலைகளை கையாள்வது போன்ற சிறப்புப் பண்புகள் வந்து சேரும்.

இங்கு எவரும் தனியானவர்கள் இல்லை. எனவே மற்றவர்களையும் எப்போதும் நினைவில் வையுங்கள்!



# வரலாற்றில் இன்றைய தினம்

1364 - போலந்து கற்கோவில். மிகப் பழமையான ஜகிலோனின் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

1551 - லிமா பெருவில் சான் மார்கோஸ் தேசிய பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

1797 - பிரான்சின் முதலாம் நெப்போலியன் வெனிஸை வெற்றி கொண்டான்.

1942 - இரண்டாம் உலக மகாயுத்தம். அமெரிக்காவின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் SS வேர்ஜினியா, மிஸிஸிப்பி நதி நுழைவாயிலில் வைத்து ஜேர்மனியரின் நீர்மூழ்கிக் கப்பல் U 507 இனால் தாக்கப்பட்டது.

1949 - பேர்லின் மீதான தடையை சோவியத் யூனியன் விலக்கிக் கொண்டது.

1952 - ஜோத்பூர் மகாராஜாவாக காஜ்சிங் முடிசூடிக்கொண்டார்.

1965 - சோவியத் யூனியனின் விண் ஓடம் லூனா 5. சந்திரனில் மோதியது.

1982 - இரண்டாம் போல் பாப்பரசரை கூரிய ஆயுதமொன்றால் தாக்க முற்பட்ட மரியா பெர்னாண்டஸ் றோன் என்பவர் பாது காப்புத் தரப்பினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

2002 - முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் ஐந்து நாள் பயணமாக கியூபாவுக்குச் சென்றார். 1959 இன் கியூபா புரட்சிக்குப் பின்னர் கியூபாவுக்குச் சென்ற முதலாவது அமெரிக்க ஜனாதிபதி இவராவார்.

2003 - அல்கெய்தாவால் மேற்கொள்ளப்பட்ட றியாத் வளாக குண்டுத் தாக்குதலில் 26பேர் சாவு.

2006 - உத்தர பிரதேச ரெபரேலி தொகுதியில் சோனியா காந்தி சாதனை வெற்றி.

# திறன் வளர்க்கும் விடுகதைகள்

1. எல்லோருக்கும் கிடைக்காத மதி, ஆனால் எல்லோரும் விரும்பும் மதி. அது என்ன?
2. அருகில் சென்றால் காலில் விழுந்து வணங்குவாள் பின்னர் எழுந்து அணைத்துக் கொள்வாள். அவள் யார்?
3. தகப்பன் பச்சை. மகள் சிவப்பு. மகன் கறுப்பு. அது என்ன?
4. எந்த நேரமும் கொட்டும் ஆனால் சத்தம் கேட்காது. அது என்ன?
5. என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன். நான் யார்?
6. ஏழும் ஏழும் பதினான்கு சோலைத் தச்சன் செய்த வேலை அது என்ன?
7. ஏறு ஏறு சங்கிலி, இறங்கு இறங்கு சங்கிலி, எட்டாத கொப்பெல்லாம் தொட்டு வா சங்கிலி. அது என்ன?
8. ஒரு சாண் உடம்பு. உடம்பு நிறைய பற்கள் அது என்ன?
9. ஒருவன் ஒட்டிவர, இரண்டு இழுத்து வர, நெய் திரண்டு வருகிறது அது என்ன?

## விடைகள்

1. நிம்மதி
2. கடல் அலை
3. தர்ப்பூசணிப் பழம்
4. கண்ணிமை
5. கண்ணாடி
6. பல்லாங்குழி
7. அணி
8. சீப்பு
9. செக்கு



# சிட்டு



சிட்டே சிட்டே பறந்து வா
சிறகைச் சிறகை அடித்து வா

கொட்டிக் கிடக்கும் மணிகளைக்
கொத்திக் கொத்தித் தின்னவா

ஆற்று நீரில் குளிக்கிறாய்
அழகாய்த் துள்ளி ஆடுகிறாய்


சேற்று வயலில் அமர்கிறாய்
திறந்த வெளியில் திரிகிறாய்

உன்னைப் போலப் பறக்கணும்
உயர உயரச் செல்லணும்

என்னை அழைத்துச் சென்றிடு
ஏற்ற இடத்தைக் காட்டிடு



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றிலிருந்து பாடம்

பயங்கரவாதத்தின் பேரால் தமக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான அடக்குமுறைப் போருக்கு எதிராக தமிழ் மக்கள் சர்வதேசத்திடம் முறையிட்டபோது, நாட்டுக்கு எதிரானவர்கள், தேசத் துரோகிகள் என்றெல்லாம் அடையாளப்படுத்தி அசிங்கப்படுத்திய முன்னாள் ஜனாதிபதியும் அவரது அடிவருடிகளும் இன்றோ தமது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ள நிலையில், சர்வதேசத்திடம் முறையிட்டுள்ளதைப் பார்க்கும்போது கைகொட்டிச் சிரிப்பதா அழுவதா என்று புரியாதுள்ளது.
தமது பாதுகாப்பு விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் கரிசனைகொண்டு நீக்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பை பெற்றுத்தருவதற்குத் தலையிடவேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும் ஐக்கிய நாடுகள் பொதுச் செய லாளருக்கும் மகிந்த ராஜபக்ச கடிதம் ஒன்றை எழுதியுள்ளமையும் அவரது தீவிர ஆதரவாளராக மாறியுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இராஜதந்திர சமூகத்திடம் முறையிட்டுள்ளமையும் இவர்களது இரட்டைவேட போலி முகத்திரையை அம்பலத்துக்குக் கொண்டுவந்துள்ளது.
சர்வபலம் பொருந்திய அதிகாரத்தில் இருந்தபோது, போர் உச்சம்பெற்ற காலப்பகுதி முதலாக எவரை எதிர்த்து நின்றார்களோ, எவரை நோக்கி சர்வதேச சதிகாரர்கள், நாட்டைப் பிரிக்க சூழ்ச்சி செய்பவர்கள், நாட்டின் நலன்களுக்கு எதிரானவர்கள் என்றெல்லாம் கோஷமிட்டு, ஒத்துழைத்து நடக்க மறுத்தார்களோ இன்று அதிகாரம் இல்லாதநிலையில், தமது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது தொடர்பாக, அவர்களிடமே முறையிட்டுள்ளமை இந்த வெளிவேடதாரிகளின், கார்ட்போட் வீரர்களின் உண்மை முகத்தைத் துகிலுரித்துக் காண்பித்து நிற்கின்றது.
நேற்றையதினம் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் ஊடகவியலாளர் மாநாட்டிலும், மகிந்த தரப்பினரின் இரட்டை வேடத்தை நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக் காட்டியிருந்தார். உள்நாட்டின் பாதுகாப்புக் குறித்து உள்நாட்டிலேயே தீர்மானங்கள் எடுக்கப்பட்டாக வேண்டும் எனத் தெரிவித்தவர்களே, இன்று சர்வதேசத்தை நாடுவதாகவும் அவர் விமர்சித்திருந்தார்.
'தனக்கு வந்தால்தான் தெரியும் காய்ச்சலும் தலைவலியும்' என்று எம்மவர்கள் மத்தியில் காலம் காலமாகக் கூறப்பட்டு வரும் முதுமொழி, துன்பங்களை நேரிலே அனுபவித்து உணரும் போதுதான் அதன் உண்மையான வலியை அறிந்து கொள்ள முடியும் என்ற கருத்தமைந்தது.




எமது மக்களின் துன்பங்களை ஏளனம் செய்து அதை சர்வதேசத்திடம் முறையிட்ட போது, துரோகப் பட்டம் கட்டிய தரப்பினர், தற்போது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய தமது முன்னைய கொடூரமான செயல்களுக்காக மனம் வருந்துவார்களா என்றால் நிச்சயம் இல்லை என்றே எண்ணத் தோன்றுவதற்கு வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளமுடியும்.
1988-89ஆம்ஆண்டு காலப்பகுதியில் ஜே.வி.பியினரின் கிளர்ச்சி உச்சம் பெற்றிருந்த காலப்பகுதியில், அவர்களை அடக்குவதற்காக அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து முறையிடுவதற்காக ஜெனிவா சென்ற மகிந்த, தாம் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற போருக்கு எதிராகவும், போரில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் தமிழர்கள் ஜெனிவா சென்றபோது நடந்துகொண்ட விதமும், எமது மனக்கண் முன் தெளிவாக இருக்கின்றது. தற்போது தனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறைக்கப்பட்டபோது மீண்டும் ஜெனிவாவுக்குச் சென்றிருப்பது அவர் எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பவாதி என்பதையும், அதற்கு மேலாக கொடூரமான இனவாதி என்பதையும் கோடிட்டுக் காட்டி நிற்கின்றது.
உகண்டாவின் ஜனாதிபதியாக முசேவேனி ஐந்தாவது தடவையாகப் பதவியேற்கும் நிகழ்வில் பங்கேற்க மகிந்த உகண்டா நோக்கிப் பயணமாகின்றார்.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கூறப்பட்டாலும், முசேவெனி சர்வாதிகாரியாகப் பார்க்கப்படுபவர்.
இந்த நாட்டின் முடிசூடா அரசராக, சர்வபலம் பொருந்தியவராகக் கருதப்பட்ட மகிந்த, இன்றோ சர்வதேசத்தின் முன்னர் எப்படிக் கணிக்கப்படுகின்றார் என்பதைச் சர்வதேசத்தில் அவருக்கு இருக்கின்ற நண்பர்களை வைத்தே எடை போடமுடியும்.



# வேற்றுக் கிரகத்தை வேகமாகத் தெரிந்தெடு

இனவெறியால் இதயத்தை இழந்தவனே
அர்ப்பணிப்பு என்பதற்கு
ஆயிரம் அர்த்தம் சொன்னாய்
அர்ப்பணிப்பே இல்லாமல்
அந்தரத்தில் உயிர் துறந்தாய்

உலகில் உனக்கு நிகர்
யாரெனவே
உரக்கப் பேசினாய் இறுதியில்
உருக்குலைந்து போனது உன்
உடம்பு தான்

சுவஸ்ரிகா சுமந்து
சுதந்திரமாய்த் திரிந்தவனே உனக்கு
சுடுகாட்டிலும் சூட்சுமம் தான்

யூத இனத்தை - உன்
ஆசை தீரக் கொன்றொழித்தாய்
நீ ஆசையாய் வளர்த்த
செல்லப் பிராணிகளுக்குஅவன்
உதிரத்தையே உறிஞ்சக் கொடுத்தாய்

நீ ஆசையாய் வளர்த்த
நந்தவனங்களுக்கும்
மனிதப் பிணங்களை எருவாக்கிஅவர்கள்
குருதி கொண்டு நீர் பாய்ச்சினாய்
அந்தப் பூக்களில் வரும் வாசனையை
பிண வாடையாய் நுகர்ந்து புளகாங்கிதம்
அடைந்தவனே!
மனித மண்டையோடுகளைக் காட்டி- உன்
சண்டித்தனத்தில் சாணக்கியம்
கண்டவனே!

புழுக்களைக் கொசுக்களைக்
கொல்வதைப் போல்
மதிப்பான மனித உயிர்களைக்
கொன்றவனே
நாடு பிடிக்கும் நப்பாசையால் தான்
[illegible]

இத்தனைக்குள்ளும்
உன் இதயத்தில் ஓர் ஈரக் கசிவாக
ஈவா பிறவுண் என்ற இதயக் காதலி
பாசத்தில் நீ வேசம் என்றாலும்
உன்னோடு உடன்கட்டை ஏறுமளவுக்கு
உன்னை உருக உருக ஒருத்தி
காதலித்தாளேஅவள் தான் பாவம்

நாசிக் கட்சி என்றாலே நடுங்குகிறது
ஏனென்றால் அது செய்த நாசம்
என்னையே வெல்ல வல்லான் பூமியில்
உள்ளானோ என்றாயே! இறுதியில்
பூமியே தீர்ப்பைமாற்றி எழுதியது
தற்கொலையால் நீ செத்திருக்கலாம்
ஆனால்
அது தற்கொலையல்ல
ஆயிரமாயிரம் மனித உயிர்களின்
அவலப் பெருமூச்சின் அக்கினிப்
பிழம்பில்
அகப்பட்டே மரணித்தாய்

கிட்லரே!
இன்று உன் கல்லறையில்!
ஈமத்துள் பூக்கும் எருக்கலம்
பூக்களையேனும்
இட்டுச் செல்ல முடியவில்லை உன்
கல்லறை அடியில் ஒரு துளி
கானல் நீரையும் காணவில்லை.
கல்லறையோடு உன் காவியம்முடியட்டும்
நீ அழிந்து போ!
மீண்டும் பிறப்பதென்றால்
வேற்றுக் கிரகத்தை வேகமாகத்
தெரிந்தெடு
உன்புலன் மாறியேனும் எம்
புவிக்கு வராதே
நீ மனித இனத்தின் பெரும் சாபக்கேடு

ந.பஞ்சசீலன்
யா/ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி
புத்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








**மேடம்:** சாமர்த்தியமாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட அபிவிருத்திப் பணி நிறைவேறும். மேலதிக வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி அதிகரிக்கும்.



**இடபம்:** விளைவுகளை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். மிதமான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.



**மிதுனம்:** உங்கள் பேச்சில் உறுதி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.



**கடகம்:** பொறுமையுடன் செயற்பட்டால் சிரமம் நீங்கும். தொழிலில் வளர்ச்சிக்காக கூடுதல் பணிபுரிவது அவசியமாகும். குடும்பத்தில் செலவு அதிகரிக்கலாம். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.



**சிங்கம்:** சிறு செயலும் பல மடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். நண்பருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**கன்னி:** தாமதமான பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள்.



**துலாம்:** சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய மாற்றம் பின்பற்றுவீர்கள். மிதமான வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.



**விருச்சிகம்:** எதையும் ஆலோசித்து செய்வது நல்லது. தொழிலில் குறையை சரி செய்வது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழிவகுக்கும்.



**தனுசு:** பணிகளை நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் விதத்தில் வளர்ச்சி பெறும். நிலுவைப் பணமும் வந்து சேரும். விலகிச் சென்ற உறவினர் சொந்தம் பாராட்டுவர்.



**மகரம்:** பேச்சில் அன்பும், பண்பும் கலந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் பாசம் கண்டு மகிழ்வீர்கள்.



**கும்பம்:** மனதில் நம்பிக்கை கொள்வது நல்லது. தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும். அதிக நிபந்தனையுடன் பணம் கடன் பெற வேண்டாம். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.



**மீனம்:** நண்பர்கள் உதவுவது போல பாசாங்கு செய்வர். தொழில், வியாபார வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | 2 | | 5 | | |
| 2 | | | | | 6 | | | |
| 7 | | | | 3 | | | | 1 |
| | 6 | 4 | 7 | | | | | |
| | 7 | | | 4 | | | 6 | |
| | | | | | 1 | 4 | 5 | |
| 4 | | | | 1 | | | | 8 |
| 8 | | | 2 | | | | | 9 |
| | | 3 | | | 4 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 6 | 9 | 7 | 2 | 1 | 4 | 8 |
| 8 | 2 | 7 | 1 | 5 | 4 | 6 | 9 | 3 |
| 4 | 9 | 1 | 6 | 8 | 3 | 7 | 5 | 2 |
| 3 | 1 | 8 | 4 | 9 | 6 | 5 | 2 | 7 |
| 6 | 5 | 9 | 2 | 3 | 7 | 8 | 1 | 4 |
| 7 | 4 | 2 | 8 | 1 | 5 | 3 | 6 | 9 |
| 1 | 8 | 3 | 5 | 4 | 9 | 2 | 7 | 6 |
| 2 | 7 | 4 | 3 | 6 | 1 | 9 | 8 | 5 |
| 9 | 6 | 5 | 7 | 2 | 8 | 4 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




# வருகிறது 'இறைவி'






கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் விஜய்சேதுபதி, எஸ்.ஜே.சூர்யா, பாபி சிம்ஹா முதலானோர் நடித்துள்ள 'இறைவி' திரைப்படத்தை ஜூன் மாதம் வெளியிட முடிவு செய்திருக்கிறார்கள். ஸ்டுடியோ கிரீன், திருக்குமரன் என்டர்டெயின்மென்ட், அபிரூஅபி ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள 'இறைவி'யின் முன்னோட்டம் மற்றும் பாடல்களுக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.
'ஜிகர்தண்டா' படத்துக்குப் பிறகு கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் வெளிவரும் படம், விஜய்சேதுபதி. எஸ்.ஜே.சூர்யா, பாபி சிம்ஹா என மூன்று ஹீரோக்கள் இணைந்து நடித்துள்ள படம் என பல சிறப்புக்கள் 'இறைவி'க்கு இருப்பதால் படத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பு இருந்து வருகிறது.

# ஏழையின் மகன்!



ராக்பெல்லர் என்பவர் அமெரிக்கக் கோடீஸ்வரர்களில் ஒருவர். அவர் ஒரு சமயம் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றிருந்தார். அங்குள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றுக்குச் சென்ற அவர், ஹோட்டல் நிர்வாகியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். பின்பு, 'வசதிகள் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை, மலிவான வாடகைக்கு ஒரு அறை வேண்டும்' என்று கேட்டார். ஹோட்டல் நிர்வாகி வியந்து, 'ஐயா... தாங்கள் எங்கள் ஹோட்டலுக்கு வருகை புரிந்தது குறித்து மிக்க மகிழ்ச்சி. தங்கள் பெயரைச் சொல்லி தங்கள் மகன் அடிக்கடி இங்கு வந்து தங்குவார். அவர் எப்பொழுதும் அதிக வசதிகள் நிறைந்த அதிக வாடகையுள்ள ஆடம்பர அறையையே கேட்டு வாங்கித் தங்குவார். ஆனால் உலக மகா கோடீஸ்வரரான தாங்கள் மலிவு வாடகையில் அறையைக் கேட்கிறீர்களே. இது எனக்கு வியப்பாக உள்ளது–என்றார். அதற்கு ராக்பெல்லர் புன்சிரித்தார். 'இதில் வியக்க ஒன்றும் இல்லை. அவனது தந்தையாகிய நான் கோடீஸ்வரன். அதனால் அவன் ஆடம்பர வாழ்க்கை வாழுகிறான். ஆனால் நானோ ஓர் ஏழையின் மகன். ஏழையின் மகனான நான் எப்படி ஆடம்பர வாழ்க்கை வாழ முடியும்?' என்றார் ராக்பெல்லர். அவரது தன்னடக்கத்தைக் கேட்டு அப்படியே மெய்சிலிர்த்துப் போனார் ஹோட்டல் நிர்வாகி.







இன்றுவரை உன் நேசங்களை மட்டும் நேசிக்கின்றேன். உன் வெறுப்புக்கள் எதையும் கண்டு கொள்வதில்லை என் மனம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமையல் குறிப்புகள்

சுட தண்ணீர் அதிக நேரம் சூடாகவே இருக்க வேண்டுமா? சிறிது உப்பை அதில் போட்டு வையுங்கள். எப்போதும் இருக்கும் நேரத்தை விட அதிக நேரம் சூடாக இருக்கும்.

ரவைத் தோசை தயாரிக்கு முன் ரவையை நன்கு வறுத்து 30 நிமிடம் தண்ணீரில் ஊறவைத்து பிறகு இதர பொருள்களுடன் கலந்து தோசை வார்த்தால் தோசை ஒழுங்கான வடிவில் வரும். ரவை சரியாக வறுபடாவிட்டால் தோசை வார்த்து எடுக்கும் போது சிதைந்துவிடும்.

பருப்புத் துவையலுக்கு தேங்காய் அவசியமில்லை. இரண்டு பூண்டுப் பல்லை தோல் உரித்து வைத்து, அரைத்தால் சுவையாக இருக்கும். வாய்வுத் தொல்லைக்கும் நல்லது.

சிறிதளவு புளியை உருட்டி, கடலை எண்ணெயில் போட்டு வைத்தால், எண்ணெய் கொதிருக்கும்.

## இது புதுசு



## மெழுகுவர்த்தி ஸ்ராண்ட்

அலங்கார மெழுகு வர்த்தி ஸ்ராண்ட் அறிமுகமாகியுள்ளது. தட்டுடன் சிறிய அலங்கரிக்கப் பட்ட மெழுகுவர்த்தி தாங்கிகளையும் உள்ளடக்கியுள்ளது. இவை ஆயிரத்து 400 ரூபாவிலிருந்து ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## நாளை

**சித்திரை-30**

வெள்ளிக்கிழமை - 13.05.2016
திதி: ஸப்தமி பி.ப.03.35 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ.04.37 வரை
ராகுகாலம்:10.24-11.54 வரை
சுபநேரம்: 05.54-07.24 வரை

## மசால் வடை

### தேவையான பொருள்கள்

- கடலைப் பருப்பு - 1 கப்
- பச்சை மிளகாய் - 2
- பெரிய வெங்காயம் - 2
- பூண்டு - 10 பல்லு
- இஞ்சி ஒரு சிறிய துண்டு
- உப்பு - தேவையான அளவு
- கறிவேப்பிலை - சிறிது
- எண்ணெய் - தேவையான அளவு




### செய்யும் முறை

கடலைப் பருப்பை அரை மணி நேரம் தண்ணீரில் ஊறப் போடவும்.
பிறகு எடுத்து உரலிலோ அல்லது மிக்சியிலோ போட்டு அரைக்கவும்.
அரைக்கும் போது பூண்டு மற்றும் தேவையான அளவு உப்புச் சேர்த்து கொரகொரவென தண்ணீர் ஊற்றாமல் அரைத்துக் கொள்ளவும்.
வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலையை சிறிதாக நறுக்கிக் கொள்ளவும். கடலைப் பருப்புடன் நறுக்கியவற்றை நன்கு பிசைந்து கொள்ளவும்.
அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய் விட்டு கடலைப் பருப்பை சிறு உருண்டைகளாக எடுத்து வடையாகத் தட்டி எண்ணெயில் போட்டு சிவந்ததும் எடுத்து விடவும்.

## ருசியான சமையலுக்கு....



சமையல் ருசியாக இருக்க, செய்யும் குழம்பு, பொரியல், கூட்டு, எதுவாக இருந்தாலும் செய்யும் அளவுக்கு தகுந்த படி மற்றப் பொருள்களைச் சேர்க்க வேண்டும். அதிகமாக போனாலோ, குறைவாக இருந்தாலோ அதன் ருசி மாறிப் போகும். எல்லாவற்றுக்கும் இஞ்சியும், பூண்டும் சேர்க்க வேண்டும் என்ற அவசியமில்லை. மசாலா பொருள்கள் பிடிக்காதவர்கள் அதை சேர்க்காமலே ருசியாகச் செய்யலாம். சமையல் ஒன்றும் பெரிய விடயமில்லை. செய்யத் தெரியாதவர்கள் கூட பயப்படாமல் தைரியமாக செய்தால் சமையல் இலகு தான்.

அடுப்பை எரியவிடும் போது அதில் வைத்து சமைக்கும் பாத்திரத்துக்கு மேல் தீ எரியக் கூடாது. தீ அதிகமானால் செய்யும் பொருள்கள் வீணாகிப் போய் விடும். ரொம்ப சிறியதாக எரிந்தாலும் சீக்கிரம் வேகாது. செய்யும் பதார்த்தங்களைப் பொறுத்து அடுப்பு மிதமான சுவாலையில் எரிய வேண்டும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 80 | 100 | – | 40 | 80 |
| கத்தரி | 90 | 60 | 100 | 120 | 80 | 80 | 70 | 40 |
| கரட் | 80 | 80 | 80–200 | 100 | 80 | 100 | 70 | 120 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 40 | -40 |
| பயிற்றை | 90 | 80 | 100 | 80 | 120 | 60 | 80 | 60 |
| பாகல் | 120 | 100 | 140 | 100 | 70 | 120 | 110 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | – | 80 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 65 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 120 | 30 | 140 | 100 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 | 40 | 15 | 20 |
| தக்காளி | 140 | 140 | 120 | 160 | 140 | 160 | 140 | 180 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 40 | 30 | 30 | 30 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 25–30 | 30 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 80 | 80 | 120 | 80–100 | 100 | 90 | 60 |
| புடோல் | 70 | 60 | 80 | 60 | 60 | 100 | 30 | 60 |
| கோவா | 80 | 100 | 100 | 100 | 100 | 100 | 80 | 70 |
| வெண்டி | 80 | 70 | 80 | 100 | 80 | 80 | 50 | 80 |
| போஞ்சி | 140 | 130 | 200 | 180 | 160 | 240 | – | 180 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 120 | 140 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 20 | 50 | 40–30 | 40 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80 | 90 | 70 | 100 |
| தேசிக்காய் | 500 | 360 | 400 | 400 | 160 | 600 | 350 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 80 | 100 | 120 | 120 | 80 | 120 | 60 |
| இராசவள்ளி | 150 | 150 | 160 | 160 | 140 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 200 | 300 | 170 | 240 | 150 | 300 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 800 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 400 | 600 | 650 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 500 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 800 | – | 600 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 500 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 600 | – |
| ஓரா | 400 | 300 | – | – | 500 | 600 | – |
| திரளி | 300 | 250 | 200 | 200 | 300 | 300 | 350 |
| நகரை | 250 | 250 | – | 300 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 350 | 250 | – |
| திருக்கை | 150 | 250 | 200 | 350 | 400 | 250 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 50 | – |
| பாலை | 400 | 200 | 250 | 300 | 400 | 350 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | 300 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CIMA பட்டமளிப்பு குழுவினரால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த நிலையான வர்த்தகச் சிந்தனை



CIMA, பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவனம், அவர்களுடைய மிகப் பிரம்மாண்டமான பட்டமளிப்பு விழாக்களின் ஒரு நிகழ்வை அண்மையில் இலங்கையில் உள்ள CIMA இல் நடத்தியுள்ளது. இந்த பட்டமளிப்பு விழாவில் 467 CIMA பரீட்சையை வெற்றிகரமாக முடித்த மாணவர்களும் 296 அங்கத்துவ உறுப்பினர்களும் 11 சக உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களின் நம்பிக்கையின் அச்சாணியான CIMA தொழில் சார் தகைமையானது சிறந்த தீர்மானங்களை தன்னிச்சையாக எடுக்கின்ற மற்றும் வணிகத்தை சிறப்பாகக் கொண்டு செல்லக்கூடிய பாண்டித்தியம் உடைய ஒருங்கிணைந்த சிந்தனையாளர்களை உருவாக்குகின்றது. CIMA குழுவினரால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த நிலையான வர்த்தக சிந்தனை நிகழ்வில் பிரதம அதிதியாக பொது முயற்சி அபிவிருத்திச் சபையின் அமைச்சர் இரான் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

பட்டமளிப்பு விழாவில் நடைபெற்ற உரையில் இரான் விக்கிரமசிங்க பின்வரும் கருத்துக்களை முன்வைத்தார். நிலையான அபிவிருத்தியானது சர்வதேச நிகழ்வில் மிகவும் பெரியதொன்றாக உள்ளது. இது எமது அரச நிகழ்விலும் உள்ளது. வணிகத்தின் நிலையான புரட்சிக்கு பதிலளிப்பதில் மக்களின் மனங்களை மாற்றுதல், தகவல் ஆதாரங்கள் தீர்வுகாணல், செயல்முறைகள் மற்றும் அறிக்கைகள் அனேகமாக தனியார் துறையினராலும் பொதுத்துறையினராலும் மிகவும் கடினமாக முகம் கொடுக்கும் வணிக ரீதியான சவால்களாக உள்ளன. மேலும் அவர் நாட்டில் CIMA இன் பங்களிப்பு குறித்து தெரிவிக்கையில் அதிக மாணவர்களை முகாமைத்துவ கணக்கீட்டு தொழில் துறைக்குள் உட்படுத்தி வருகின்ற CIMA ஐ நான் பெருமையுடன் வாழ்த்த விரும்புகின்றேன் என்று தனது வாழ்த்தை தெரிவித்தார்.

CIMA இன் உடைய தொலைநோக்கு பார்வையானது முகாமை கணக்கீட்டு இடைவெளியை இலங்கையில் நிரப்புவதும் முகாமை கணக்காளர்களுடன் தொடர்புடைய அமைப்பாக CIMA ஐ உருவாக்குவதுமாக உள்ளது. சான்றளிக்கப்பட்ட கணக்கியலாளர்களின் அமெரிக்க நிறுவனமும், பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவனமும் CIMA கூட்டாக இணைந்து பட்டய பூகோள முகாமைக் கணக்காளர் CIMA என்ற பட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. CIMA முகாமைக் கணக்காளர்களுக்கான பூகோள ரீதியான பட்டமாகவும் தரம் தேர்ச்சி மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றை மிக உயர்ந்த இலக்காக சந்திக்கின்றவர்களுக்கான தொழில்சார் பட்டமாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மஞ்சுள டி சில்வா, CIMA இலங்கைத் தலைவர் இந் நிகழ்வில் கூட்டுப்பங்காளர் என்ற வகையில் தனது கருத்தை தெரிவிக்கையில்; இந்தக் கூட்ட இணைப்பினுடாக உலகின் வேறு ஒரு பாகமாக நாங்கள் இதை உருவாக்கியுள்ளோம். இது உங்கள் அனைவருக்கும் ஏதாவது ஒரு விதத்தில் மதிப்பை உருவாக்கியிருக்கும்.

CIMA மற்றும் AICPA ஒத்துழைப்பு மேலும் அதிகமாக உங்களுக்கு தொடர்ந்து கிடைக்கும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்- என்றார். பிராந்திய இயக்குநர் பசுபிக் ஆசியா அய்றின் ரெங், இந்நிகழ்வில் அனைத்து பரீட்சை முடித்த மாணவர்களுக்கும் புதிய உறுப்பினர்களுக்கும் கருத்து தெரிவிக்கையில்; முகாமையாளர்களான நீங்கள் நிறுவனத்துடன் தொடர்புடைய அபாயங்கள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் அத்துடன் நிறுவனத்தின் மதிப்பை உயர்த்தும் நுண்ணறிவுள்ள விடயங்களை வழங்கும் பாண்டித்தியம் பெற்று இருக்கிறீர்கள் பூகோள முகாமை கணக்கியல் கோட்பாடுகளால் செல்வாக்கு, சம்பந்தம், மதிப்பு மற்றும் நம்பிக்கை வழிநடத்தப்பட்டும் இருக்கின்றீர்கள்.

இந்த கோட்பாடுகள் சிறந்த நடைமுறை முகாமைத்துவ கணக்கியல் செயற்பாடுகளுக்கான ஒரு கட்டமைப்பாக உள்ளதுடன் இது வெற்றிகரமான வணிகத்தைநடத்துவதற்குத்தேவையானஒருங்கிணைந்த சிந்தனைகளை வழங்குகின்றது. (தி)

# செலான் வங்கி நடத்திய போட்டியில் வெற்றி பெற்றவர்கள் கௌரவிப்பு

செலான்வங்கிதான்நடத்திய 'Win your weight in cash' போட்டியில் வெற்றி பெற்றவர்களை கௌரவித்தது.

தனது வாடிக்கையாளர்களுக்கு புதுமைகள் பலவற்றைச் செய்துவரும் செலான் வங்கி அண்மையில் தனது பேஸ்புக் பக்கத்தில் ' Win your weight in cash' என்ற பெயரில் போட்டி ஒன்றை நடத்தியிருந்தது.

நாடளாவிய ரீதியில் பலர் பங்குபற்றியிருந்த இந்தப் போட்டியில் பிரவீன் வீரசிங்க மற்றும் ரித்மி முதுதாந்ரி ஆகியோர் வெற்றி பெற்றனர்.



வெற்றி பெற்றவர்களுக்கான பணப்பரிசை சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் திலான் விஜயசேகர, தலைமை மேலாளர் தினேஷ் ஜெபமணி ஆகியோர் வழங்கி வைத்தனர். (தி)

வணிகம்

# நுட்பம்

## மசாஜ் செய்யும் உடை



எங்கு சென்றாலும் எமக்குத் தேவையான நேரத்தில் மசாஜ் செய்துகொள்வதற்கு ஏற்ற விதத்திலான புதிய வகை ஆடை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எயார்வியர் என்ற பெயருடைய இந்த மசாஜ் செய்யும் உள் ஆடையை சிங்கப்பூர் அடிப்படை நிறுவன மொன்று தயாரித்துள்ளது.

மனிதர்கள் வழக்கமாக காலையில் இருந்து முழு நாளும் அலுவலகத்தில் அனைத்து வேலைகளையும் உட்கார்ந்தே செய்வார்கள். அதனால் பின்புற வலி ஏற்படுகிறது. எனவே, பணி மிகுந்தவர்களின் அட்டவணையில் இருந்து மசாஜ் செய்வதற்கு மேலதிக நேரம் எடுத்துக்கொள்ளாமல், உட்கார்வதாலும், சாய்வதனாலும் ஏற்படும் வலியில் இருந்து விடுதலை பெறும் நோக்குடனேயே இந்த ஆடையை வடிவமைத்துள்ளனர்.

இந்த ஆடையின் உள்ளே, வலிகளில் இருந்து விடுவிக்கும், ஆறு இன்ப்ளாட்டபிள் காற்று தலையணைகள் இணைத்து தைக்கப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் ஒரு எடை குறைந்த ஜக்கெட் உள்ளே மறைக்கப்பட்டிருக்கும் மற்றும் இது ஒரு தொடுதிரை கைபேசி வழியாக கட்டுப்படுத்தப்படும்.

இதில் உள்ள காற்றில் இயங்கும் மசாஜ் தொகுதிகள், நீங்கள் எங்கு சென்றாலும் ஒரு அக்யுபிரர் மசாஜை வழங்கும். பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட காற்று தலையணைகளை பயன்படுத்தி உங்கள் பின்புறம் மீது அழுத்தம் கொடுக்கும், அப்போது அக்யுபிரர் மற்றும் பதப்படுத்தல் உணர்வு உருவாக்கும் வகையில் எயார் வியர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பின்புறத்தில் உள்ள பல்வேறு தசை குழுக்களை பாதிக்கும் தசை அழுத்தங்களில் இருந்து விடுவிக்க பல்வேறு மசாஜ் திட்டங்களை கொண்டுள்ள இது, தொடுதிரைக் கைபேசிச் செயலி ப்ளுடூத் வழியாக இணைக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## நிறம் மாற்றக் கூடிய இழை

லண்டன் ஆராய்ச்சியாளர்களால் நிறம் மாறக் கூடிய நூல் இழை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு கறுப்பு ஆடையை பச்சையாக மட்டுமல்ல ஆடையின் சின்னத்தைக் கூட உங்களால் மாற்றக் கூடிய வகையில் இந்தப் புதிய கண்டுபிடிப்பு அமைந்துள்ளது.

இப் புதிய தொழில்நுட்பமானது படிப்படியாக வெவ்வேறு வகை ஆடைகளின் வருகைக்கு நிச்சயம் வழிவகுக்கும் என கருதப்படுகிறது.

இங்கு ஏற்படும் நிறமாற்றமானது மின் ஏற்றங்களின் அடிப்படையிலேயே நிகழ்கிறது. இதன் அடுத்த கட்டமாக நம் மனநிலைக்கேற்ப தானாகவே நிறம் மாறக் கூடியதாகவும், சட்டையின் மணிக்கட்டுப் பகுதியில் கைத்தொலைபேசி குறுஞ்செய்தி, தவறிய அழைப்புக்களை பார்வையிடக்கூடியதாகவும் வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பமானது தொடுகையை உணர்ந்து செயற்படக்கூடியதாக இருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரணர்களுக்கு வீதி ஒழுங்குப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மே 12

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத்தின் சாரணர்களுக்கு வீதி ஒழுங்கும் பாதுகாப்பும் பற்றிய பயிற்சிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.30 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சாரணர் மாவட்ட ஆணையாளர் எஸ்.சற்குணராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தினர் சாரணர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இந்தப் பயிற்சி வகுப்பில் மாவட்டத்தின் அனைத்து சாரணர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (ற-9)

## கள்ள மணல்; ஒருவர் கைது

வல்லிபுரம் பகுதியில் அனுமதியின்றி மணல் ஏற்றினார் என்ற குற்றச்சாட்டில் துன்னாலை – குடவத்தையைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் உழவியந்திரத்தில் கள்ளமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்தபோது, தாம் அவரைக் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரை எதி ர் வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார் உத்தர விட்டார். (உ-26)

## பல்கலைக்கழக

ளுக்கு இந்த கடன் வழங்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பி.ஜீ.ஜயசிங்க தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கைகள் இன்னும் 2 வாரங்களுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான 2 வங்கிகளைத் தெரிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

## மீன் பிடித்தவர்

பின்னர் சடலமாக மீட்கப்பட்டார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா – பிரமணாளங்குளத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியா – சாளம்பைக்குளத்தை சேர்ந்த நூர்முகமது கலீல் காமின் (வயது–28) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வவுனியா–சாளம்பைக்குளத்தைச் சேர்ந்த நூர்முகமது கலில் காமின் என்ற இளம் குடும்பஸ்தர் உட்பட அவரது உறவினர்கள் 4 பேர் நேற்றுமுன்தினம் இரவு பிரமணாளங்குளத்துக்கு மீன் பிடிப்பதற்காகச் சென்றுள்ளனர். இவர்கள் இரு பிரிவாக கனரக வாகனம் ஒன்றின் ரியூப்பில் காற்று நிரப்பி அதனைக் கழுத்தில் போட்டு மீன் பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது நேற்று அதிகாலை 12.30 மணியளவில் குறித்த குடும்பஸ்தர் அணிந்திருந்த ரியூப்பில் இருந்து காற்று வெளியேறியதால் அவரும் மேலும் ஒருவரும் குளத் தில் மூழ்கியுள்ளனர். அவ்வாறு மூழ்கிய இருவரில் ஒருவர் காப்பற்றப்பட்டபோதும் மற்றையவருக்கு நீச்சல் தெரியாமையால் அவர் நீரில் மூழ்கியுள்ளார் என வவுனியா பொலிஸார் கூறினர்.

இவ்வாறு நீரில் மூழ்கியவரை அவரது உறவினர்கள் தேடியபோதும் மீட்கப்படாமையினால் அவர்கள் கரை சேர்ந்துள்ளனர். பின்னர் நேற்றுக் காலை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்துச் சம்ப இடத்துக்குச் சென்ற பிரமணாளங்குளம் பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ள்தாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4-21-402)

## மகிந்தவின்

தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதியின் உயிருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக் குறித்து தங்கள் நாடுகளிடம் தெளிவுபடுத்துமாறு கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்களிடம் கேட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தங்கள் கரிசனைகளுக்கு இராஜதந்திரிகள் சிலர் சாதகமான பதில் அளித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்கொலை அங்கி, வெடிபொருள்கள் மீட்கப்பட்ட நிலையிலும், முன்னாள் விடுதலைப்புலி போராளிகள் கைதுசெய்யப்படுகின்ற நிலையிலுமே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற கூட்டு எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

நீதித்துறை சுயாதீனமின்றிச் செயற்படுகின்றது. நாடாளுமன்ற அனுமதியின்றி வற் வரி அதிகரிக்கப்படுகின்றது. முன்பு நாடாளுமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் இது அமுலுக்கு வரும். இந்த அரசின் நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை தற்போதைய சூழலில் வைத்தால் அரசுக்குப் பாரிய தோல்வி ஏற்படும் என்ற காரணத்துக்காகவே தேர்தல் பிற்போடப்பட்டு வருகின்றது. ஆனால், இதனை நீண்டகாலம் காலதாமதப்படுத்த முடியாது. இந்த நல்லாட்சி அரசுக்குத் தோல்வி வெகுதொலைவில் இல்லை–என்றார். (த-சி)

## ரயிலில்

பயணித்த கடுகதி ரயிலில் மோதுண்டு இவர்கள் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வெள்ளவத்தை கடலோரப் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பிரதான வீதிக்கு அருகிலுள்ள இரு ரயில் பாதைகள் அமைந்துள்ள இடத்தில் ரயிலில் இருந்து இறங்கி அடுத்த ரயில் பாதையைக் கடந்துசெல்ல முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இரத்மலானை ரயில் நிலையத்துக்கு அருகில் பாணந்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 5 நாள்களில் வெள்ளவத்தை, இரத்மலானை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற ரயில் விபத்துக்களில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், கடந்த வாரத்துக்கு முன்னர் வெள்ளவத்தைப் பகுதியில் இரு பெண்கள் ரயிலில் மோதி உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இந்த ரயில் விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புகள் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது.

பொதுமக்கள் வீதிகளில் செல்லும்போது அவதானத்துடன் செல்லவேண்டும். அதுபோல ரயில் பாதையைக் கடக்கும் போதும், ரயில் நிலையங்களிலும் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (த-சி)

## சுழற்சி

வழங்கப்படவுள்ளது.

ரெலோ சார்பில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிட்ட மயூரனின் பெயர் இதற்காகச் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத தேர்தல் இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 30 ஆசனங்கள் கிடைத்தன. இதில் இரண்டு ஆசனங்கள் நியமன உறுப்பினர் ஆசனமாகும். இதில் ஓர் ஆசனம், முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கு வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் அஸ்மினுக்கு வழங்கப்பட்டுள்ளது. மற்றைய ஆசனம் சுழற்சி முறையில் பங்கீடு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில் 2013 ஆம் ஆண்டு அந்த ஆசனம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது. இதன் பின்னர் வவுனியா மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது.

தற்போது மீளவும் வவுனியா மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் சார்பில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட மயூரனுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவரை உறுப்பினராக நியமிக்கும்படி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கடிதம் எழுதியுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

## பள்ளிக்குடாவில்

சொந்தமான குறித்த காணிகளைப் படையினரின் தேவை கருதி அளவீடு செய்ய உள்ளதாகவும், காணி உரிமையாளர்களை அதற்கான ஆவணங்களுடன் வருகை தருமாறும் தெரிவித்துக் காணி உரிமையாளர்களுக்கு நில அளவைத் திணைக்களத்தினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் பரமங்கிராய் பகுதியில் உள்ள வெட்டுக் காட்டிலும் மூன்றாவது தடவையாகப் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் அளவிடப்படவிருந்த நிலையில் மக்களின் எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டது. இப்போது எமது பகுதியிலும் காணியை அளவிடப் போவதாக அறிவித்துள்ளார்கள். இது எந்தவகையில் நியாயம். எமது காணிகளையும் சுவீகரிக்கவிடாது தடுத்து நிறுத்துவதற்கு அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும் என்று பள்ளிக்குடாவில் அளவீடு செய்யப்படவுள்ள காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-21)

## தகவலறியும்

வரும்16ஆம்திகதிபிரதமர்தலைமையில்நடைபெறவுள்ள விசேட கருத்தரங்கில் தெளிவுரையாற்றுவதற்காக வெளிநாட்டு நிபுணர்கள் வரவுள்ளனர்.

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளில் இருந்தே மேற்படி விடயத்தில் சிறப்புத் தேர்ச்சிப் பெற்ற விரிவுரையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் தகவல் அறியும் சட்டவரைவை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. மேற்படி சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அதில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையிலேயே மேற்படி சட்டவரைவு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. (த-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரிமாகிறேற் ஜேக்கப்



ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மேரிமாகிறேற் ஜேக்கப் 07.05.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஜேக்கப் (அருமைத்துரை)யின் அன்பு மனைவியும், பெரியதம்பி, ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற எட்வேட் மற்றும் கௌறி, ஜெயவதி, வசந்தி, கில்பேட்குணம், (பிரதம கணக்காளர் மாவட்ட செயலகம் - கிளிநொச்சி) நோயல் (வவி), கொலஸ்ரிக்கா.சுகந்தி, றொபேட், சுதா, கியூபேட் (ஆசிரியர் - யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயசீலி, அகஸ்ரின், சாண்டோ, அன்ரன், ஜெனீத்தா, லதா, சின்னவன், ரவி, பவா, தர்சினி, றூபா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் குணம், அழகு செல்வராணி,யோகராணி, காலஞ்சென்ற லூர்த்தம்மா மற்றும் தங்கராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.05.2016) வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து யாழ்.மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல.19/4, ஈச்சமோட்டை
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஜே.கில்பேட்குணம்,
ஜே. கியூபேட்.

**075 966 4266**

### கிறிஸ்தோப்பர் அன்ரனி மரியதாஸ் ராசன் (பொட்டு மாமா)

(மண்டைதீவு புனித பேதுருவானவர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்)



பிறப்பு 04.12.1959 — இறப்பு 11.05.2016

மண்டைதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் அன்ரனி மரியதாஸ் ராசன்(பொட்டுமாமா) 11.05.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர் - பெர்னபேத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கமுத்து - கத்தரீனாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நித்தியறாணியின் அன்புக் கணவரும் றெக்சன், றூட்சன்(ஆஸ்திரேலியா), றட்சன், டிலைக்சன், நிக்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவிதாவின் அன்பு மாமனும் சனாவின் அன்புப் பேரனும் வனசா, எலிதாஸ், லைசா, அந்தோனி, யான்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜெயறாணி மற்றும் பத்திமாசீலன், சகாயசீலன் காலஞ்சென்ற ஞானசீலன் மற்றும் யேசு, சின்னராசா, உதயகுமாரி, நிலானி, நேசம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.05.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித பேதுருவானவர் கடற்தொழிலாளர் சங்கத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனிதபேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மண்டைதீவு,
4ஆம் வட்டாரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

**021 491 5793/ 077 429 8279**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு நீரகம் தேவை

O + இரத்த வகையைச் சேர்ந்த ஆண் ஒருவருக்கு O வகை சிறுநீரகம் தேவை. 25க்கும் 40க்கும் இடைப்பட்ட வயதைக் கொண்டவர்கள் பொருத்தமானது.

உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 077 279 6665
071 181 9703

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிறுவனத்தின் ஆசிரியரான
**ஜேக்கப் ஜோண்கியூபேட்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி மேரி மாகிறேற்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
**அருள் மற்ஸ் அக்கடமி**
இராஜேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

உறவோடு 04 . 09 . 1926



இறையோடு 12 . 04 . 2016

எமது குடும்பத் தலைவராக இருந்து எம்மை எல்லாம் நல் வாழ்வு வாழ வழிப்படுத்திய

**அமரர் முதலித்தம்பி தம்பிஐயா**

அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு நம் துயரங்களில் பங்கு கொண்டு உதவியவர்களுக்கும் மலர் வளையங்கள்,மாலைகள் சாத்தி அஞ்சலிகள் செலுத்தியோருக்கும் தொலைபேசி அழைப்பின் மூலம் இரங்கல் செய்திகள் கூறிய அன்புள்ளங்களுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரணம் முதலான ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களிற்கும் நாம் எம் சிரம் தாழ்த்தி இருகரம் கூப்பி உள்ளங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 03 . 02 . 1922



உதிர்வு 12 . 04 . 2016

**அமரர் சின்னப்பா ஐயாத்துரை**
(ஓய்வுநிலை சிறைச்சாலை உத்தியோகத்தர்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் செய்தும் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (12.05.2016) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

## மனித உரிமை

மங்கள சமரவீர அமைச்சரவைக்கு முன்வைத்துள்ளார்.

இந்தநாட்டு மக்களின் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் பலப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான அரசின் கொள்கைக்கு அமைவாக தற்போது அரசால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தற்போது மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் நல்லிணக்க நடைமுறையை முழுமையாக்கும் மனித உரிமை கரிசனைகளைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்வதற்கும் சுயேச்சை உடன்படிக்கைக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பலப்படுத்துவதற்கும் இவற்றின் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவைப்படும் நிலமையை உருவாக்குவதற்குமான நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது.

2012 - 2016 வரையிலான ஆண்டுகளுக்காக ஐந்தாண்டுக் கால தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டத்தை வகுத்தமைத்து அதை மேற்கொண்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கான (2017-2021) தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டமொன்றை வரைவதற்காகவும், மனித உரிமைகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொள்ளவும் மனித உரிமைகள் பற்றிய அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றை அமைப்பது தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீரவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (த-சி)

### விற்பனைக்கு

பூவரசம் மர விறகுகள் - மலிவான விலையில் மொத்தமாக விற்பனைக்குண்டு.

தொ.பே. 077 167 3365 076 525 7027

### விற்பனைக்குண்டு

சுன்னாகம் சூறாவத்தை முத்துமாரி அம்மன் ஆலய அருகில் சிறிய வீட்டுடன் 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 757 7675

### கடைக்கு ஆள்தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வியாபார நிலையமொன்றுக்கு சிட்டை எழுதுநர், விற்பனையாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும்.

தொ.பே. 077 336 3766

### IZZY Garments

உங்கள் பாடசாலைக்கு உங்கள் நிறுவனத்திற்கு தேவையான அளவில் தேவையான வடிவத்தில் Embroidery, Printing செய்து T-Shirt,Shirt மொத்தமாகப் பெற்றுக் கொள்ள யாழ் நகரில் நாடவேண்டிய ஒரே இடம் IZZY Garments மற்றும் Bangkok, Malaysia, Mumbai, Jordan இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாளாந்த ஆண், பெண் ஆடைகள் குறைந்த விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள யாழ்நகரத்தில் நாடவேண்டிய ஒரே இடம் IZZY Garments.

தொடர்புகொள்ளும் முகவரி: IZZY Garments
127/5, Juvilee Bazaar
Power house Road, Jaffna.
T.P.071 664 7692

### ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி

ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி குழந்தையில்லாமை, சர்க்கரை நோய் சொரியாசிஸ், ஆஸ்மா, மூலம் மஞ்சள் காமாலை(B), VD/AIDS

இம் மாதம்
14. 15ஆம் தேதி
கொழும்பு,
திருகோணமலை
வருகை



23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின்
**சிறப்பு சிகிச்சை**

+91 9842 45 7673
+91 9600 33 6009

Dr.G. ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்புகொள்ள

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் செல்லையா கெங்காரட்ணம்**

எனது தந்தையின் அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகள் இன்று 12.05.2016 வியாழக்கிழமை நடைபெறுகிறது. இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுட்டேடை, மானிப்பாய்.
கெ. சுரேஸ் (மகன்)

## கல்வியியற்

தேர்வாவதற்குரிய சகல தகுதிகளும் கொண்டிருந்துள்ளனர். இருப்பினும், இந்த மாணவர்களது பெற்றோர் வாக்காளர்களாகப் பதிவு செய்யவில்லை. இந்தக் காரணத்தினால் தேசியக் கல்வியியற் கல்லூரிக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனைக் கல்லூரியின் பீடாதிபதியும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்படுபவர்களின் வதிவிடம் உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்காக மாணவர்களின் பெற்றோரின் கடந்த மூன்று ஆண்டுகளுக்குரிய வாக்காளர் பெயர் பட்டியல் விவரம் கோரப்படும். இந்த விடயம் வர்த்தமானி பிரசுரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த நான்கு மாணவர்களினதும் பெற்றோர்களின் வாக்காளர் பெயர்ப் பட்டியல் விவரம் இல்லை. இதன் காரணமாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பெயர் பதிவு, வாக்களிப்பதற்கு மாத்திரம்தான் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இது தவறானது. இவ்வாறான அனுமதிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு வாக்காளர் பெயர் பதிவு முக்கியம். அத்துடன் ஒவ்வொரு ஆண்டினதும் மீளாய்வின் போது வாக்காளர் பதிவு மேற்கொள்ள வேண்டும்' என்று தேர்தல்கள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. கோபாலபிள்ளை நாகேஸ்வரன்**

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் காப்பாளரும் கிளிநொச்சி மாவட்ட சாய் சமிர்த்தியின் உப தலைவரும் கரைச்சி பிரதேச செயலருமான உயர் திரு.கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அவர்கள் அண்மையில் **"சாமஸ்ரீ தேசமானி"** என்னும் உயர் பட்டம் பெற்றதையிட்டு மனமார வாழ்த்துவதோடு மென்மேலும் உயர்ந்த பட்டங்கள் பல பெற்று சகல சௌபாக்கியத்துடன் நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
தலைவர் தி.இராசநாயகம், இல்ல நிர்வாகத்தினர், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் .
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
### மானிப்பாய் கிராம உபஅலுவலகம் ஆனைக்கோட்டை
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் : 14**
**ஆதன இலக்கம்: 84 (புதிய இலக்கம்)**
**கீரிமலை வீதி**
**கிராமசேவையாளர் பிரிவு: J/143**

வட்டாரம் 14, கீரிமலை வீதி, ஆதனஇலக்கம் 84 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "சூரிதோட்டம்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 03 குளி 13.09 கொண்ட) இவ்வாதனமானது சண்டிலிப்பாய் கல்வளை "நவமகால்" ,சண்முகராசா உமாசுதனும் பெண் கணேசலட்சுமியும் இவர்களால் சண்டிலிப்பாய் மேற்கு சின்னத்துரை முத்துத்தம்பி பெண் நாகேஸ்வரி என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. பொ. சுந்தரலிங்கம் அவர்கள் முகதாவில் 4706 ஆம் இலக்க ,2015.09.30 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்திய எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. S. முத்துக்குமாரசாமி அவர்களால் வரையப்பட்ட 5175 இலக்க 1978 .08.01 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "சூரிதோட்டம்" நிலப்பரப்பு 03 குளி 13.09 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பான ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை முத்துத்தம்பி பெண் நாகேஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**
**மானிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் ஊடகப் பிரிவுக்கு பதிலாக ஊடக சபையை அமைக்கத் திட்டம்

கலைக்கப்பட்டுள்ள பொலிஸ் ஊடகப் பிரிவுக்குப் பதிலாகப் புதிய செயற்றிட்ட மொன்றின் கீழ், ஊடகச் சபை யொன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு வருகின்றதுஎன்றுபொலிஸ்மா அதிபர்தெரிவித்துள்ளார். அதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் உள்ளடங்கும், ஊடகங்கள் சம்பந்தமான பட்டறிவுகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரொருவருடன், பொலிஸ் அத்தியட்சகர்கள் சிலரும் இதற்கு நியமனம் செய்யப்படுவர்.

அந்தக் குழுவை நியமிப்பதுதொடர்பாக சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் சாகலரத்நாயக்கவின் அனுமதி பெறப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ர-ஜ-22)

## வசாவிளான் ம.வி. இணையத்தள அங்குரார்ப்பணம்

வயாவிளான் மத்திய கல்லூரியில் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் வே.த. ஜயந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜாவும், கௌரவ விருந்தினராகத் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ம. ஆனந் தகுமாரும், விசேட விருந்தினராக பழைய மாணவன் ம. ஜெகநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி விசயரத்தினம்



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல414 திருநகர், யோகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி விசயரத்தினம் நேற்று (11.05.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் விசயரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ராமசாமி-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் மகேஸ்வரி (ஓட்டங்குளம்), சிவஞானம் (வவுனியா), பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிதம்பரநாதன் (பிரான்ஸ்), கனகரத்தினம் (ஓய்வு பெற்ற விரிவுரையாளர்), தில்லைநாயகி(பிரான்ஸ்), கனகரத்தினம் (கொல்ல விளாங்குளம்), குண சிங்கன் (தாசன்-யோகபுரம் மத்தி), புவனேஸ்வரி (ரதி-கல்மடு), ராஜேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி (பிரான்ஸ்) மற்றும் பரமேஸ்வரி (பிரான்ஸ்), தயாசீலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் வினோதினி (வசந்தி-திருநகர்), தயாபரநாதன் (பிரான்ஸ்), தசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷ்ணராசா, ஜங்கரன் (சிவா-பிரான்ஸ்), சந்திரப்பிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ரூபிகா (பிரான்ஸ்), கோபிராஜ்(பிரான்ஸ்), சுசீபன் (பிரான்ஸ்),திலீப்ராஜ் (பிரான்ஸ்), தசீபன் (திருகோணமலை), வினோபா(மல்லாவி), சிந்துஜன் (பிரான்ஸ்), சிந்துஜா (பிரான்ஸ்), ஆருஷா (பிரான்ஸ்), றுக்சிகா (பிரான்ஸ்), றெனிஷா (பிரான்ஸ்), கரன் (பிரான்ஸ்), ஊத் (பிரான்ஸ்), தாரா (பிரான்ஸ்) நோமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹர்ஷா (பிரான்ஸ்), ஹரிசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.05.2016) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.414, திருநகர்,
யோகபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வராணி சிறிகந்தராசா



பாலாவி தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி செல்வராணி சிறி கந்தராசா 10.05.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.05.2016) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் பாலாவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி கருணானந்தம்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கருணானந்தம் நேற்று (11.05.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (ஆசிரியர்) - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கருணாநிதி (தபால் அதிபர்) மற்றும் தனலட்சுமி, நித்தியலட்சுமி, பகவதி (ஆசிரியை), கருணாகரன், பவானி, மகாதேவன் (ஜேர்மனி), பாக்கியலட்சுமி (ஆசிரியை), நந்தினி (கனடா), சுகந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கௌரி, பத்மலிங்கம், சண்முகராசா, காலஞ்சென்ற ஜெயராசா மற்றும் கனகேஸ்வரி, இராமச்சந்திரன், உஷாசுதாநிதி, ஜெயக்குமார், சபேசன், சிவயோகன் ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2016) வியாழக்கிழமை பி.ப. 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை காடாகரம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லூசியா திரேசா சோதீஸ்வரி ஜெயராஜா

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி இல.05 அச்சுக்கூட வீதியைச் சேர்ந்த திருமதி லூசியா திரேசா சோதீஸ்வரி ஜெயராஜா நேற்று (11.05.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெயராஜாவின் அன்பு மனைவியும், லக்ஸ்மன் ஜெயராஜா வின் அன்புத் தாயும், நிர்மலாலூயிஸ், அஞ்சலினா லூயிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.05 அச்சுக்கூட வீதி,
சுண்டுக்குளி

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 3536

## மரண அறிவித்தல்

### அம்பிகாபதி பிரபாகரன்



இராமகிருஸ்ண பாடசாலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகாபதி பிரபாகரன் கடந்த (10.05.2016) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அம்பிகாபதி - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பரிபூரணகலாவின் பாசமிகு கணவரும், சங்கீர்த்தனா (Grade 09), சஞ்சை (Grade 04)/Angel International School Manipay) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறேமாவதி, கருணாகரன் (கனடா), பிரபாசினி (கனடா), செல்வரசி (கனடா) ஆகியோரின் சகோதரனும், அனுஷியா (கனடா), நரேந்திரன் (கனடா), தர்மபாலன் (கனடா) மற்றும் பராபரன்-எழிலரசி (ஜேர்மனி), சக்திநாதன் (மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்)-சிவகௌரி (ஆசிரியை), கருணாகரன்-நிசாந்தினி (பிரான்ஸ்), கிருஷ்ணப்பிரியா - சஞ்சீவன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம் - நல்லூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.05.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி
இணுவில்

தகவல்: குடும்பத்தினர்.
021 224 1710, 077 797 2876

### திருமதி லீலாவதி துரைஸ்சுவாமி

(ஓய்வுநிலை ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்)

பிறப்்பு 13 . 06 . 1931



இறப்பு 10 . 05 . 2016

கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி துரைஸ்சுவாமி கடந்த (10.05.2016) செவ்வாய்க்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு துரைஸ்சுவாமியின் (Usha Company) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான சண்முகம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும், தம்பு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வர்களான தனபாலசிங்கம், ஜானகி மற்றும் பரமேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், யாழினி, ரதிகாந்தன் (கனடா), திருமாறன் (கனடா), அரவிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராசா (ஓய்வுபெற்ற உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் இ.போ.ச) நிம்மி, மஞ்சு, மஞ்சுளா ஆகியோரின் மாமியும், திஷாலினி, சுஜேந்திரா, ஷஷ்புஜா, பிரசன்னா, சுரேஸ், சதீஸ், முகேஸ், கண்ணா, தம்பா, றதன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, இராசையா, தம்பிராசா, கனகசபை (ஐயாத்துரை), செல்வராசா மற்றும் தம்பிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான இராஜகோபால், சின்னத்துரை மற்றும் செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### செல்வராசா சாந்தகுமார் (சாந்தன்)

பிறப்பு 24 . 09 . 1955



இறப்பு 11 . 05 . 2016

கேசாவில் வீதி, வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சாந்தகுமார் (சாந்தன்) நேற்று (11.05.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53, கேசாவில் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 567 0041

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அன்ரனிஸை வீழ்த்தி முன்னேறியது நக்கீரன் இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத்தில்

கரணவாய், மே 12

இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை சமநிலைத் தவிர்ப்பு உதைமூலம் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம்.

யாழ். மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் மத்திய வி.கழக மைதானத்திலேயே இடம்பெற்றுவருகின்றன. நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும்



பலப்பரீட்சை நடத்தின. வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுவதும் கோலாக மாற்றப்படாமல் வீணாக்கப்படுவதுமாக முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் பெரிதான மாற்றங்கள் ஏதுமில்லை. எந்த அணியும் ஏக ஆதிக்கம் செலுத்தாமல் ஆட்டம் முடிவடைய சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலமை ஏற்பட்டது. இதில் அல்வாய் நக்கீரன் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(ம-108)

## இமையாணனின் வலைப்பந்தாட்டம்

கரணவாய், மே 12

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக வலைபந்தாட்டத் தொடரை நடத்தத் திட்டமிட்டுள்ளது. குறித்த தொடரில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகள் மற்றும் கழகங்கள் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-108)

## பருத்தித்துறை சம்பியன்

மாங்குளம், மே 12

யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான பூப்பந்தாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச தெரிவு அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

அரியாலை சரஸ்வதி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த திங்கட் கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேச தெரிவு அணியை எதிர்த்து உடுவில் பிரதேச தெரிவு அணி மோதிய இந்த ஆட்டத்தில், தனி நபர்களுக்கிடையிலான போட்டிகளில் மூன்று பிரிவுகளிலும் பருத்தித்துறை பிரதேச தெரிவு அணி வெற்றி பெற்று 3:0 என்ற செற் கணக்கில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

(ம-422-108)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 12

**கழுகுகள் வி.கழகத் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவைச் சுடர் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து கரணவாய் மத்திய அணியும் மோதவுள்ளன.

**இமையாணனின் தொடர்**

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது.

**வவு. கால்பந்தாட்டச் சங்கத்தின் தொடர்**

வவுனியா கால்பந்தாட்ட சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியு பைட் அணியை எதிர்த்து மருநிலா அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி இன்று மோதவுள்ளது.

நாமகள் வி.கழகம் வலிகாமம் லீக்கில் பதிவுசெய்த கழகங்களுக்கு இடையில் நடத்திய தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்றும் இன்று இடம்பெறவுள்ளது. இதில் நவாலி சென்.பீற்றர்ஸ் அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா அணி மோதவுள்ளது.

**யங்ஹென்றிஸ் வி.கழகத் தொடர்**

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் அணியும், இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதவுள்ளன.

(ம-108-422-23)

## மன்னார், மடு பிரதேசஅணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி

மன்னார் மாவட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் மன்னார் பிரதேச செயலக அணியும், மடு பிரதேச செயலகஅணியும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முசலி பிரதேச செயலக கடற்கரை மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டங்களில், முதலாவது அரையிறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை மேற்கு பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மடு பிரதேச செயலக அணியை எதிர்த்து முசலி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் மடு பிரதேச செயலக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-23)



சரசாலை வடக்கு சனசமூக நிலைய உதயநிலா விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி, சரசாலை உதயநிலா வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம-9)



## மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டம் உடுவில் பிரதேச அணி சம்பியன்

மாங்குளம், மே 12

யாழ். மாவட்ட ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத்தில் உடுவில் பிரதேச தெரிவு அணி கிண்ணம் வென்றுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்டச்செயலகவிளையாட்டுப்பிரிவினால் நடத்தப்பட்ட ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத்தில், திருநெல்வேலி இந்து இளைஞர் வாலிபர் சங்க உள்ளக அரங்கில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச தெரிவு அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச தெரிவு அணி மோதியது. இதில் தனி நபர்களுக்கு இடையிலான போட்டிகளில் இரண்டையும், குழு நிலைப் போட்டியில் ஒன்றையும் வென்றதையடுத்து 3:1 என்ற செற் கணக்கில் உடுவில் பிரதேச அணி சம்பியனானது.

(ம-422-108)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகினார் மனோகர்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரான மனோகர், தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். சர்வதேச கிரிக்கெட் சபையின் தவிசாளர் பதவிக்குப் போட்டியிடும் நோக்கிலேயே, தனது பதவியிலிருந்து அவர் விலகியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் தவிசாளர் பதவிக்குப் போட்டியிடுவதற்கு, எந்த கிரிக்கெட் சபையையும் சேர்ந்திராத, சுயாதீனப் போட்டியாளர்களே போட்டியிட முடியும் என அறிவிக்கப்பட்ட நிலையிலேயே, தனது பதவியிலிருந்து அவர் விலகியுள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவது மாத்திரமன்றி, சர்வதேச கிரிக்கெட் சபையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதிநிதி என்ற பதவியையும் ஆசிய கிரிக்கெட் சபையிலிருந்தும் விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)





# மீண்டும் களத்தில் புளொய்ட் மெவதர்

மீண்டும் குத்துச்சண்டைக்கு திரும்பப் போவதாக கருத்துக்களை ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்த புளொய்ட் மெவெதர், கலப்புத் தற்காப்புக் கலைகள் நட்சத்திரமான கோணர் மக்கிறேகருடன் மோதுவதற்காக ஓய்விலிருந்து மீள வரத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

மெவதர் தனது குத்துச் சண்டை வாழ்வில் தான் எதிர்கொண்ட 49 ஆட்டங்களில் 49 இலுமே வெற்றிபெற்று தோல்வியை அறியாதவர் என்ற பெருமையுடன் ஓய்வை அறிவித்திருந்தார். ஆனால் அவருக்கு தற்பொழுதுதான் 39வயது ஆகிறது. எனவே இவரது வயதைக் கருத்திற்கொண்டு மெவதர் மீண்டும் களமிறங்கலாம் என்ற கருத்துக்கள் வெளியாகியிருந்த நிலையில் அவற்றை அவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதன்படி நடப்பு வருடத்தில் மெவதரும், அயர்லாந்தின் மக்கிறேகரும் மோதுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிலையில் உள்ளது. இந்த மோதல் இடம்பெற்றால் மெவதருக்கு 144 மில்லியன் அமெரிக்க டொலர்களும் மக்கிறேகருக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்களும் வழங்கப்படும். (ம)

## ஹாட்லி, மெதடிஸ்த பெண்கள் உடல்நலப் போட்டியில் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 12

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உடல்நலப் போட்டியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் சம்பின்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை ஹாட்லிக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரியும். மூன்றாமிடத்தை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயமும் தமதாக்கின. பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் இரண்டாமிடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் மூன்றாமிடத்தை வட இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (ம-108-422)

# 19 வயதினருக்கான துடுப்பாட்டம்; வடமாகாண வீரர் ஒருவர் தெரிவு

யாழ்ப்பாணம், மே 12

மாகாண மட்ட 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில், சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய வடக்கு மாகாண அணியின் வீரரான கபில்ராஜ் மேலதிக பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

19 வயதுக்குட்பட்ட சிறந்த தேசிய அணியை உருவாக்கும் நோக்கத்துடனும், எதிர்கால நட்சத்திரங்களை உருவாக்கும் நோக்கத்துடனும் இலங்கை கிரிக்கெட் சபையால் மாகாண மட்ட அணிகளுக்கிடையே துடுப்பாட்டத் தொடர் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி தொடக்கம் மே 12ஆம் திகதி வரை நடைபெற்ற இந்தத் தொடரில், வடக்கைப் பிரதிநிதித்துவப் படுத்தி சிறப்பாக செயற்பட்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் கபில்ராஜ் மேலதிக பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளர். (ம-23)



# பிளாட்டினி மீதான தடை மீண்டும் உறுதியானது

ஊழல் முறைகேடு குற்றச்சாட்டில் தடை செய்யப்பட்ட ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்தின் தலைவரான மைக்கல் பிளாட்டினி, தனது தடையை எதிர்த்து தொடர்ந்த வழக்கில் 4 ஆண்டுகள் தடை உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சர்வதேச கால்பந்து சங்கத்தின் (பிபா) தலைவர் தேர்தலில் செப் பிளாட்டர் வெற்றி பெற்றதும் அவர் உள்ளிட்ட நிர்வாகிகள் மீது பல்வேறு நிதி முறைகேடு தொடர்பாக முறைப்பாடுகள் எழுந்தன. செப் பிளாட்டர் தனது பதவிக் காலத்தில் துணைத்தலைவராக இருந்த மைக்கேல் பிளாட்டினிக்கு, ஆலோசகராக செயற்பட்டதற்காக கணக்கில் காட்டாமல் ரூ.13 கோடி வழங்கியது பெரும் சர்ச்சையாக வெடித்தது. இது தொடர்பாக விசாரணை நடத்திய சர்வதேச கால்பந்து சங்க நன்னடத்தைக் குழு பிபா தலைவர் செப் பிளாட்டர், பிபா துணைத் தலைவரும், ஐரோப்பிய கால்பந்து சங்க தலைவருமான மைக்கல் பிளாட்டினி ஆகியோரை இடைநீக்கம் செய்ததுடன், இருவருக்கும் தலா 8 ஆண்டு காலம் தடையுடன் அபராதமும் விதித்தது. இந்த நடவடிக்கை கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் எடுக்கப்பட்டது.

இதனையடுத்து தங்கள் மீதான தடையை எதிர்த்து செப் பிளாட்டர், மைக்கல் பிளாட்டினி இருவரும் மேன்முறையீடு செய்தனர். இவர்களில் பிளாட்டினி மீதான விசாரணை முடிந்து தீர்ப்பு வெளியாகியுள்ளது. தீர்ப்பிலும் பிளாட்டினியின் குற்றம் உறுதியானதால், அவர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். (ம)



# நானாட்டான், மன்னார் செயலக அணிகள் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், மே 12

மன்னார் மாவட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் நானாட்டான் பிரதேச செயலக அணி, மன்னார் பிரதேச செயலக அணி என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

முசலி பிரதேச செயலக கடற்கரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டங்களில், முதலாவது அரையிறுதியாட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலக அணியை எதிர்த்து மாந்தை மேற்கு பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் நானாட்டான் பிரதேச செயலக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மடு பிரதேச செயலக அணியை எதிர்த்து மன்னார் பிரதேச செயலக அணி மோதியது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-23)

# காயமடைந்தார் தம்மிக்க பிரசாத் டெஸ்ட் தொடரில் சந்தேக நிலை

இலங்கை டெஸ்ட் அணியின் முக்கிய பந்துவீச்சாளரான தம்மிக்க பிரசாத், இங்கிலாந்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த பயிற்சி ஆட்டத்தின் போது காயமடைந்துள்ளார். இது, இலங்கை அணிக்குப் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 8ஆம் திகதி ஆரம்பித்து நேற்று முன்தினம் சமநிலையில் முடிவடைந்த, எசெக்ஸ் அணிக்கெதிரான பயிற்சி ஆட்டத்தின் இரண்டாவது நாளிலேயே, அவர் இவ்வாறு காயமடைந்தார். குறித்த ஆட்டத்தில் பிரசாத் 17.3 பந்துப்பரிமாற்றங்களே வீசியிருந்தார். அவரது தோள்பட்டையில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவர் இவ்வாறு வெளியேறினார்.

ஏற்கனவே, கடந்தாண்டு இறுதியில், நியூசிலாந்துக்கெதிரான தொடரின் போது ஏற்பட்ட முதுகு உபாதை காரணமாகப் பல ஆட்டங்களைத் தவறவிட்டிருந்த தம்மிக்க பிரசாத், அதன் பின்னர் இந்தத் தொடரிலேயே சேர்க்கப்பட்டிருந்தார். பிரசாத்தின் காயம் தொடர்பாக இன்று ஸ்கான் செய்யப்படவுள்ளது. ஸ்கான் முடிவுகளை வைத்தே அவர் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் களமிறங்குவது தொடர்பாக முடிவு எடுக்கப்படும். (ம)

# சானியா – கிங்கிஸ் வெளியேற்றம்

மட்ரிட் நகரில் நடைபெற்ற ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற அரையிறுதியாட்டத் தில் கார்சியா – கிறிஸ்ரினா இணையிடம் மிர்சா – கிங்கிஸ் இணை தோல்வியடைந்து வெளியேறியுள்ளது.

இந்த ஆட்டத்தின் முதலாவது செற்றை 4:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய கார்சியா – கிறிஸ்ரினா இணை இரண்டாவது செற்றிலும் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி 4:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாவது செற்றையும் கைப்பற்றி இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரை பதற்றமில்லாமல் வீழ்த்தியது மும்பை




ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற மும்பை–பெங்களூர் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது மும்பை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்திருந்தது. பெங்களூர் அணியில் கெயில் சேர்க்கப்பட்டு, இக்பால் அப்துல்லா வெளியேற்றப்பட்டிருந்தார். இதனால் ஆரம்ப வீரர்களாக கெயில் மற்றும் கோக்லி. சிக்சருடன் பெங்களூரின் ஓட்டங்களை ஆரம்பித்தார் கோக்லி. ஆனால் அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே மக்கெலிநகனிடம் வீழ்ந்தார். கெயிலை 5 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் சவுத்தி. இக்பால் அப்துல்லாவை சேர்த்திருந்தாலாவது பந்து வீச்சில் உதவியிருப்பார். வில்லியர்ஸ், லோகேஸ் ராகுல் இருவரும் இணைந்து பெங்களூரின் இன்னிங்ஸை தலைநிமிரச் செய்யபடாதபாடுபட்டனர். இலக்குச் சரிவு ஏற்படவில்லையானாலும் வில்லியர்ஸ் களத்தில் நின்றமைக்கு ஏற்ற சராசரி இருக்கவில்லை. 9.1 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களை எட்டியது பெங்களூர். 24 ஓட்டங்களுடன் குருனல் பாண்டியாவிடம் வீழ்ந்தார் வில்லியர்ஸ். இதற்காக அவர் 27 பந்துகளை எடுத்துக் கொண்டார். படிப்படியாக அடித்தாட ஆரம்பித்தார் லோகேஸ் ராகுல். 42 பந்துகளில் ராகுலின் அரைச்சதம் பதிவானது. வற்சனின் ஆட்டத்தில் தடுமாற்றம் இல்லாவிட்டாலும் அவரை ரண் அவுட் செய்தார் ரோகித் சர்மா. பொலார்ட் வீசிய 18ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 22 ஓட்டங்களை நொறுக்கினார் சச்சின் பேபி. சவால் கொடுக்கக் கூடிய இலக்கை நிர்ணயிக்கும் நிலையை எட்டியது பெங்களூர். முடிவில் அந்த அணி 151–4. ராகுல் 68 ஓட்டங்களுடனும், சச்சின் பேபி 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மும்பையின் சார்பாக சவுத்தி, மக்கெலிநகன், குருனல் பாண்டியா மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பைக்கும் ஆரம்பம் தடுமாற்றமாகவே அமைந்தது. ஒரே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் பட்டேல். ரோகித் சர்மா, ராயிடு இணைய மற்றுமொரு இலக்கை இழக்காமல் அரைச்சதம் கடந்தது மும்பை. 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித் சர்மா. ரணாவுக்கு முடிவு கட்டினார் சாஹல். சாஹலின் பந்துப்பரிமாற்றங்களே மும்பைக்கு அதிக நெருக்கடியை ஏற்படுத்தின. நான்கு பந்துப்பரிமாற்றங்களை முழுமையாக வீசிய அவர் ஓர் பவுண்டரியைத்தானும் விட்டுக்கொடுக்காமல் 16 ஓட்டங்களுக்குள் மும்பையைக் கட்டுப்படுத்தியிருந்தார். இறுதி 6 பந்துப் பரிமாற்றங்களில் 68 ஓட்டங்கள் தேவை என்றிருக்க களத்தில் ராயிடு மற்றும் பொலார்ட். 44 ஓட்டங்களுடன் ராயிடுவை வீழ்த்தினார் ஆரோன். இந்த 44 ஓட்டங்களுக்காக அவர் 47 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். பொலார்ட், பட்லர் இருவரும் அடுத்தடுத்து பவுண்டரிகளைப் பதிவுசெய்ய ஆட்டம் மும்பையின் பக்கமாக அப்படியே மாறியது. 8 பந்துகள் மீதமிருக்க பெங்களூரை பதற்றமில்லாமல் வீழ்த்தியது மும்பை. பந்து வீச்சில் பெங்களூரின் சார்பாக ஆரோன் 2 இலக்குகளையும், சாஹல், அரவிந் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)







## சிறுநீரகம் தேவை

இரத்த மாதிரி B யை கொண்ட ஆண் ஒருவருக்கு இரத்த மாதிரி B அல்லது O வகையினை கொண்டவரின் சிறுநீரகம் தேவை. வயது எல்லை 25 இற்கும் 50 இற்கும் இடைப்பட்டவர்களின் சிறுநீரகம் பொருத்தமானது. உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 071 443 3489



## SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர், தொழில்புரிவோர் இணையமுறையும்

சனி,ஞாயிறு பயிற்சி ஆரம்பம் : 14.05.2016

பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00

பாடப்புத்தகங்கள் DVD மற்றும் சான்றிதழ் இலவசம்

வாரநாள் (செவ்வாய், வியாழன்) பிரிவுகள் ஆரம்பம்-12.05.2016
காலை 10.00-12.00

SAAMSON
Experts in English Training

179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 1570 486 021 320 3313

## 7ஆம் ஆண்டு நினைவலையும் 41ஆவது பிறந்த தினமும்



அருளானந்தம் தமிழ்விழி(கேமா)

3ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை.

அன்னையின் மறுஉருவம் அறுவனையின் திருஉருவம்
அன்பென்ற சொல்லுக்கு அழியாத தனியுருவம்.
பெற்றோரும் துணையிருக்க, பெற்றவர்கள் உடன் இருக்க,
தரணியில் எமைத் தவிக்கவிட்டு நீ தனிமையில் சென்றதேனோ?
என்றும் உன் நினைவில்,
அப்பா, அம்மா, கணவன், பிள்ளைகள், உடன் பிறப்புகள்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.